# புதுவாழ்வு

ஆசிரியர், க. அன்பழகன், M.A.



# புதுவாழ்வு

## பொங்கல் மலர்

திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 1

ஆசிரியர்: க. அன்பழகன் எம்.ஏ.,
துணை ஆசிரியர்: கே. ஜி. இராதாமணாளன்.

## உள்ளுறை

| | |
|---|---|
| 'கவி மழை பொழி மேகம்' ... | 3 |
| பொங்குக புதுமை! ... | 4 |
| 'உலகச் சூழல்' ... | 11 |
| அறுவடை கண்டு! ... | 17 |
| உண்மை இதுதான் ... | 21 |
| புதுமை கொள்! ... | 26 |
| 'விதி' ... | 28 |
| சிவப்பேறும் சீறு ... | 35 |
| நாளங்காடிப் பூதம் ... | 41 |
| அங்கும் இங்கும் ... | 45 |
| பொற்சிலை ... | 49 |
| இது என்ன மதமோ? ... | 62 |
| உரைகல் ... | 64 |

10 வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை-7.

விலை அணா 6
வெளி நாடுகளில் அணா 7

14-ஜனவரி
1949

பட்டு ஜவுளி வியாபாரிகட்கு

# எங்கள் பொங்கல் வாழ்த்து

சாயம், ஜரிகை, உழைப்பு முதலியவைகட்கு

உத்தரவாதமுள்ள 6, 7, 8, 9, கஜம்

## பட்டுச் சேலைகளை

எங்கள் சொந்தத் தறியில் தயார்செய்து
மிகவும் நயமான விலைக்கு

## வியாபாரிகளுக்கு மட்டும்

விற்பனைசெய்து வருகிறோம்.

★

இப் பொங்கல் நன்னாளில் எமது நூற்றுக்கணக்கான
பழைய வாடிக்கைக்காரர்கட்கு எங்கள் வணக்கம்.

புது வாடிக்கைக்காரர்களின் அன்பையும்
ஆதரவையும் எதிர்நோக்குகிறோம்.

★

## ஸ்ரீ ம. தி. சிதம்பர முதலியார்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்

**கும்பகோணம்.**

குறிப்பு:—முழு விவரங்களுக்கு நேரில் எழுதவும்.

# புவிமகிழ் கவிமுகில்

இராகம்—கரகரப்பிரியா தாளம்—ஆதி

எடுப்பு

கவிமழை பொழிமேகம்—புரட்சிக்
கவிமழை பொழிமேகம்
கருத்தில் மதக்கொடுமை காய்ந்த நிலத்தில் தமிழ்க்
(கவி)

உடன் எடுப்பு

புவியுணர் கவிஞன் புகழ் பகுத்தறிஞன்
போதகன் மேதகை பாரதி தாசனூர் (கவி)

முடிப்பு

வேற்றுமை விருட்சங்கள் வேருடன் சரிய
வேத புராணங்களின் வெடிப்புகள் மறைய
சாற்றிடும் மனு (அ)தர்ம மண்சுவர் கரைய
சமரசக் குளம்நிறைய தமிழக
வாழ்வு தழைக்க மலர்ச்சிசெய் (கவிமழை)

முன்னேற்ற உழவர்கள் அறிவு ஏர் கூட்டி
முயற்சி உழைப்பு என்னும் எருதுகள் பூட்டி
பின்னும் மூடவழக்கப் பெருங் கரம்போட்டி
பிடிவாத நிலம்திருத்திப்
பெரும்பயன் விளைவயலென உழுதிடவரும் ()

பாங்குறும் தமிழகப் பண்ணைகள் தழைக்க
பகுத்தறி வுணர்வுப் பயிர்வளம் கொழிகக
தேங்கமழ் செந்தமிழ்ச் சோலைகள் செழிக்கத்
திராவிடக் கலை துளிர்க்கச்
சீர்திருத்தம் புரிவோர் களிக்குந்தமிழ்க் ()

—மணி நீலன்.

## புதுவாழ்வு

# பொங்குக புதுமை!

பொங்கல் புதுநாள் வந்தது தமிழரின் அகமெலாம் மலர்ந்தது, தமிழ் நாட்டின் தலைநகர்களிலும், சிற்றூர்களிலும், பட்டினங்களிலும் பட்டி தொட்டிகளிலும் இன்று தமிழ்த்திருநாள் கொண்டாடப்படுகின்றது. இந்நாள் தரும் இன்பம் பிறிதொரு நாளில் பெறுதற்கில்லை. இவ் விழாவினை நிகர்த்த மற்றோர் விழா தமிழர்க்கு இல்லை.

இன்று பாமரரும் பண்டிதரும், வறியரும், செல்வரும், உழைப்பாளரும், பல் தேய்ந்த கிழவரும் பல் அரும்பாப் பாலகரும், ஆண் பெண் அடங்கலும் இவ்விழாவில் திளைப்பர். அவரது முகம் அகத்தின் அழகைக் காட்டி ஒளிர்கின்றது.

பெருமிதத்துடன் ஏறென நடக்கும் ஆடவர்களும், பெருங் களிப்புடன் தென்றலென அசையும் மடவாரும் தமிழகத்தின் இயற்கைக் காட்சியை மேலும் அழகுபடுத்துகின்றனர்.

குழந்தைகளெல்லாம், வெண் மணற் பரப்பில் வீடுகட்டி விளையாடுவதும், ஆடுவதும் பாடுவதும், ஓடுவதும் தேடுவதும்—தமிழரது கலைச்செல்வங்களை உயிர் பெற்று எழுந்துவரச் செய்வதெனக் காட்சியளிக்கின்றன.

தமிழ் மக்கள் திரள் திரளாகக் கூடியிருப்பதும், ஆங்காங்கே சிலர் மேடையிலே வீற்றிருப்பதும், அதில் ஒருவர் உரத்த குரலில் பேசுவதை அவ்வளவு பேரும் கூர்ந்து கேட்டு அவ்வப்போது பெருத்த ஆரவாரம் செய்வதும், வாழ்த்தொலி முழங்குவதும்—தமிழர் தம் பழம்புகழை நினைவிற்குக் கொண்டு வருவதோடு, தமிழர் தம் ஒற்றுமை ஆற்றலிலே நம்பிக்கை பிறக்கச் செய்கின்றது.

ஆங்காங்கே நடைபெறும் இசைவிருந்துகளும், ஆடல் விழாக்களும், கூத்தவைக் காட்சிகளும், தமிழர் தம் உள்ளங்களிலெல்லாம், வாழ்க்கைச் சுவைகளை நுகரத் தூண்டுகின்ற இன்பச் சித்திரங்களாகின்றன.

வயது முதிர்ந்த கிழவனும் தன் கிழத்தியினிடத்தில்

மகிழ்ந்து பேசத் தூண்டுவதும் இவ்விழா வெனில், காதலனும் காதலியும், தலைவனும் தலைவியும் எங்ஙனே பெற்றுள்ளார் என்பதைக் கூறவா வேண்டும்?

தமிழ் நாட்டின் ஐவகை நிலங்களும் அன்புக் காட்சியைப் பரிமாறிக் கொள்வதில் போட்டியிடுகின்றன. குறிஞ்சியில் சொட்டும் தேனும்—முல்லையில் கறக்கும் பாலும் நெய்யும், மருதத்தில் கிடைத்த நெல்லும் நெய்தலிற் கிடைத்த உப்பும் பிறவும் பாலையிலும் பொங்குகின்றன வெனில் பிற நிலங்களில் பொங்கலின் தன்மையைக் கேட்கவா வேண்டும்? ஏழையர் வீடுகளிலும், 'பொங்கல்' எனில் பொங்கலுக்கு வேறு பெருமையா வேண்டும்? இவ்வளவு மகிழ்ச்சிக்கும் காரணமாக விளங்கும் பொங்கல் விழா சிந்திப்பவர்க்குச் சிறிதேனும் கலக்கத்தைத் தரத்தான் செய்கிறது.

பொங்கல் நாள் காலையில் புதுப்புனலில் நீராடி, புத்தாடை உடுத்து, புதுமலர் சூடி, புது ஏடு படித்து, புத்தடுப்பில் புதுத் தீமூட்டி, புதுப்பானை ஏற்றிப் புதுப்பால் விட்டுப் புத்தரிசி இட்டுப் பசுவின்நறு நெய்யுடன் வெல்லமும் ஏலமும் மற்றும் மணமிகு பொருள்களும் கலந்து இறக்கி வைத்து, வாழை இலை விரித்து வாயூறும் பொங்கலைப் படைத்து உற்றார் உறவினருடன் விருந்தினரையும் அமர்ந்துஉண்ணச் செய்து, கடித்து உறிஞ்சக் கரும்பு தந்து, பருகப் பழத்துடன் பால்தந்து, மெல்ல அடைகாய் தந்து, தாமும்உண்டு மகிழ்ந்து, ஆடிப் பாடிக் கூடிக்குலாவி களிப்புடன் திகழும் தமிழர் ஒரு விநாடியெனினும், இன்றைய நிலையை எண்ணிவிடுவரேயானால், தேன் கொட்டியதைப் போல—மகிழ்ச்சி மறுகணம் மறையக் காண்பர்; திகைப்புறத்தான் செய்வர்.

செந்நெல் செழிக்கும் சோறுடைய நாடு, வறுமை ஒன்றறியா வளமிக்க நாடு, செல்வச் சிறப்பனைத்தும் முற்றிய நாடு, பொன்னும் மணியும் குவியும் நாடு, முத்தும் பவழமும் கொழிக்கும் கடல் சூழ்ந்த நன்னாடு, நீர்வளம் நிலவளத்துடன் மக்கள் வளமும்கொண்ட பெருநாடு, மக்கள் தொகை வளம் மட்டுமல்ல உழைப்பு வளமும், மனவளமும் கொண்ட திருநாடு, அவ்வுழைப்பும் அறிவற்ற உழைப்பல்ல, அறிவுடன் சிந்தித்தே பணிபுரியும் திறத்தினர் மிக்கநாடு, அவரிலும் உழவர் நிறைநாடு, உழவர்களிலும்,வில்லேருழவரும் சொல்லேருழவரும் பெருகிய நாடு, அவ்வீரர்கட்கும் புலவர்கட்கும் ஏற்ற அறிவும் திறனும் மிக்க அணங்குகளைக் கொண்ட நாடு, அவர்தம் இல்வாழ்வு அன்பும் இன்பும் பெற்றுத் திகழத் துணையாகும் கலைகளும் கருத்துரைகளுந் வளர்ந்த நாடு, மறத்தமிழ் வேந்தர் மூவர் ஆண்ட முத்தமிழ் சிறந்த நாடு,

இமயத்தின் முதுகிலே இலச்சினை பொறிக்கும் அளவுக்கு வீரமிக்க மக்கள் விளங்கிய நாடு, அலைகடல் முழுவதிலுமே ஆதிக்கம் செலுத்தும் அளவிற்குக் கருங்கடலிலே கலம் செலுத்தி மேல்நாடுகளிலும் வாணிபம் செய்து வளஞ்சேர்த்த நாடு, மக்கள் நலமே தம் நலமாகக் கொண்டு, அவர்க்கோர் துன்பம் வரின் அது தமக்குற்றதாகக் கருதிய மன்னர்களின் ஆட்சியில் மாண்புற்ற நாடு, ஆரியர்கள் காடாண்ட காலத்தில், அண்ணன் தம்பிகள் ஐவர், அவர்க்கொரு அழியாத பத்தினி என்ற 'சமதர்மத்தில்' திளைத்த காலத்தில், கங்கைக் கரையில் அவர்கள் உலாவத் தொடங்கு முன்பே—காவிரிக்கரையில் மட்டுமன்றி கிருஷ்ணு கோதாவரி நதிகளுக்கு அப்பாலும், கற்புக்கடம் பூண்ட தம் மனைவியருடன் காதல் வாழ்வு நடாத்தி நாடாண்டனர் நற்றமிழர் என்ற வரலாற்றுச் சிறப்புக்கொண்ட நாடு என்றெல்லாம் அறிஞர்களால் ஆராய்ச்சிக்காரர்களால் ஆதாரங்களுடன் காட்டப்பட்டுள்ள நம் தாய்நாடு—தமிழ்நாடு இன்று எங்கிலேக்கு ஆளாகியுள்ளது.

காதிலே குண்டல மொளிரக் கையிலே வளையசைய, காலிலே சிலம்பொலிக்க கழுத்திலே மணிவிளங்க, மேகலை உடுத்து, தொல்காப்பியம் என்னும் ஒளிமிகு முடி தரித்து, 'குறள்' என்னும செங்கோல் பிடித்து மக்கள் உள்ளமென்னும் அரியணை ஏறியிருந்த அருமைத் தமிழ் அன்னையின் இன்றைய நிலைதான் என்ன?

அன்னையின் குண்டலமும் வளையும் தமிழர் மறப்பெனும் இறப்பிற்கு ஆளாயின. சிலம்பொலி மக்களுக்குப் பொருள் விளங்கா ஒலியாயிற்று. சிந்தாமணியின் ஒளியைக்கண்டு மகிழுந் திறம் மக்கள்பால் இல்லை. மேகலையோ அன்னைக்கு ஏற்றதுவாய் அமையவில்லை. தொல்காப்பியம் என்னும் முடி, கவிழ்ந்து கிடக்கின்றது. அவளது கையிலே செங்கோலாக விளங்கிய குறள் பறிக்கப்பட்டு, நீதை நுழைக்கப்பட்டுள்ளது. அது பொறுத தமிழன்னை கண்ணீர் சிந்துகிறாள் தம் மக்கள் அறியாமையை எண்ணி எண்ணி.—முடியிழந்து, கோலிழந்து, ஒளியிழந்துள்ள அன்னை அரசியலில் துறவுக் கோலம் பூண வேண்டிய கொடுநிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளாள். இந்நிலையில் தமிழன்னையின் வருங்காலத்தை எண்ணினால் அவள் வாழ்விழந்து விடுவாளோ—என்ற அச்சமும் கலக்கமும் தோன்றுமலிருப்பதெங்ஙனம்? ஆம், இன்று தமிழர்கட்குத்தான் உரிமை வாழ்வுண்டா? தமிழுக்குத்தான் ஆக்கத்திற்கு வழியுண்டா? தமிழ் நாட்டிற்குத்தான் தனது எல்லைக்கோட்டிற்குள் தனித்தியங்கும் தன்மையுண்டா? அன்றி, இவைகளைக் குறித்துப் பேசி, பொதுமக்களுக்கு

உரிமை யுணர்வு தோன்றச் செய்யும் தலைவர்களுக்குத்தான், —நாளையும தொண்டாற்ற முடியும், தடையிருக்காது—சிறைச்சாலை விருந்துக்கழைக்காது என்ற நிலையுண்டா?

உழைப்பாளர்களுக்குத்தான் உரிய ஊதியம் உண்டா? உழவர்களுக்குத்தான், வயிரார உண்ண—தாம் உழைத்ததன் பயனுப் நடைபெறும் அறுவடையிலே ஏற்ற பங்குண்டா? பட்டினிப் பட்டாளத்தின் பசியைத் தீர்க்க, ஏதேனும் முயற்சியுண்டா? இது நாள் வரை ஆசிரியர்களின் துயரம் நீக்கப் பட்டதுண்டா? தொழிலாளரின் துன்பம் துடைக்கப்பட்டதுண்டா? வேலை இழந்தவர்களுக்கேனும் வேலை கிடைக்க வழியுண்டா? கல்வி வளர்ச்சிக்கோ, படிக்க வேண்டிய ஏழைக் குழந்தைகளுக்கோதான் தக்க வசதிகள் உண்டா? முதியோர் கல்வியேனும் பயன் படும் முறையில் அமைந்துள்ளதா? சமுதாயத்தில் உயர்வு தாழ்வு கருத இடந்தரும் ஜாதிப்பற்றேனும் ஒழிக்கப் பட்டதுண்டா! வெறியின் காரணமாக வளர்க்கப்பட்டு வந்துள்ள பகையேனும் அழிக்கப்பட்டதுண்டா? மதத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்தும் புரோகிதர்களிடத்தும் பூசாரிகளிடத்தும் மண்டியிட்டுக் கிடக்கும் மக்கள் மனப்பான்மையேனும் மாற்றப்பட்டுள்ளதா? இன்னும் பற்பல துறைகளிலேயும் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மறுமலர்ச்சி தான் என்ன என்று கூறமுடியுமா? இந்நிலையில், இந்தியநாடு சுதந்திரம் பெற்றுவிட்டதனாலோ, நம் மாகாணத்தில் நம்மவர்களே ஆளவந்தார்கள் என்பதனாலோ விளைந்த பயன்தான் என்ன?

பயன்தானா இல்லை? எவ்வளவோ உண்டே! மாற்றுக் கட்சித் தோழர்கள் தம் கருத்துக்களைப் பேசலாமா? பேசுவதானால், அந்தக் கூட்டத்திற்கே தடை, பேசிவிட்டால் அவர்கள் மீது நடவடிக்கை, எழுதினால் எழுதிய பத்திரிகைமீது ஜாமீன் கேட்டல், எழுதும் இதழ்களைத் தடையும் செய்தல், ஊர்வலம் போகும் உரிமையும் இல்லையென மறுத்தல், தலைவர்களைத் திடீர்திடீரென தங்கள் சிறைச்சாலைகளின் விருந்தினராக்கிவிடல் என்று இப்படியே ஆளவந்தாரின் அதிகார அநுமானின் சிறப்புறுப்பு வளர்ந்தபடியே இருக்கின்றது.

தொழிலாளரின் இயக்கங்கள் நசுக்கப்படுவதும், சுயமரியாதை திராவிடக் கழகப் பிரசாரம் தடுக்கப்படுவதும்—இன்றைய அரசாங்கத்தின் உயிர் மூச்சாக ஆகிவிட்டது.

ஏதுமறியா இளஞ் சிறார்—தம் தாய்மொழியைக் கற்றுத் தெளியும் பருவத்தை எய்தும் முன்பே 'இந்துஸ்தானி' என்னும் பெயரில் 'இந்தி'யெனும் இலம்பாடி மொழியை—பயனற்ற பண்பற்ற பனியா

மொழியை—விருப்பப் பாடமென்னும் பெயரால் கட்டாயப் பாடமாக்கியுள்ளனர், தம் அளவு கடந்த ஆராய்ச்சியில் தோன்றிய தந்திரயுக்தியால்.

தமிழர்கள்—தம் தாய்மொழியைக் காப்பாற்ற, வேற்றுமொழி ஆதிக்கத்துக்கு இடந்தராமல் விடுவிக்க—அறப்போர் தொடங்கி நடத்திய வண்ணமுள்ளனர்.

கடுவெய்யிலானாலும், மிகு குளிரானாலும், போலீசு கெடுபிடி அதிகமானாலும், தொல்லை மிகுந்தாலும் எதைக் குறித்தும் கவலை கொள்ளாமல் உறுதியோடும் உற்சாகத்தோடும், குறித்தால் குறித்தபடி—குறித்த நேரத்தில்—நாளும் மறியலை நடத்திய வண்ணமுள்ளனர் அறப்போர் வீரர்களும வீராங்கனையரும். இந்தி எதிர்ப்பை வேறு விதத்தில் நடத்தி—அமைதியைக் குலைக்காததாலேயே அவர்களது மறியல் அர்த்தபற்றதாகிவிடாது என்பதை உணரும் திறனையும் ஆளவந்தார் இழந்துள்ளனர்.

அத்தலைவர்களைப் பின்பற்றும் ஏழைமக்களுக்குத் தடியடி தந்து ஆதரித்தல், கண்ணீர்ப் புகையை விட்டுக் கண்குளிரச் செய்தல்—தொழிலாளிகளின் உரிமைப் போராட்டங்களின் போது அவர்கட்குத் துப்பாக்கிக் குண்டுகளையே பரிசாக்குதல்—உணவுக்குப் போராடும் உழவர்களை மிட்டா மிராசுகளின் குண்டர்கள் தாக்குவது போதாதென மலபார் போலீசும் விருந்தளித்தல், அறப்போர் புரியும் அமைதியின் சின்னங்களான திராவிடக் கழகத் தொண்டர்களையும் அலக்கழித்தல், அவர் தம் உள்ளத்துக் காணும் உறுதி உடலிலும்—தோலிலும் உள்ளாதா எனப் பரீட்சித்துப் படுகாயப் பரிசு வழங்குதல்—ஆகிய இன்னோரன்ன பயன்கள் ஏராளம்! ஏராளம்!!

'விடுதலையா?' எடு இரண்டாயிரம், போர்வாள் நாடகமா? நடத்தாதே இனி, இராவண காவியமா? புலவர்களிடம் உனக்குப் புகழா? பிடி தடை சாபம், 'இரணியன்' இணையற்ற வீரனா? அப்படியா சித்தரிப்பது அந்த நாடகம்? அப்படியானால் எவரானாலும் இனி நடத்தக் கூடாது, 'குயிலா'?—புரட்சிக் கவிஞன எழுப்பும் இன்னிசையா? தமிழர் செவி மடுக்கும் தேனா? கொண்டுவராதே சென்னை மாகாணத்துள்ளே,—என்று இப்படியே தடையுத்தரவுகள் வளர்ந்த வண்ணமுள்ளன. அந்நிய ஏகாதிபத்தியமே தலைகுனிய வேண்டும் இந்தச் சுதேச ஏகாதிபத்தியத்தின் 'கெடுபிடியின' மத்துவத்தைக் கண்டு.

மதுவிலக்கு வந்ததுபோல்—ஜமீன் இனும் ஒழிப்பும் வருகிறது என்று எண்ணி ஆறுதலடைந்த உழவர்களும், இனும் ஒழிக்கப் படாமல் விலக்கப்பட்டதனாலும், ஜமீன்களுக்கு நஷ்டஈடு என்ற பெயரால் பெருந்தொகை

கொடுக்கப்பட விருப்பதனாலும் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர். எங்குமே—உழவர்களின் வாழ்வு இரங்கத்தக்க நிலைக்களாகியுள்ளது.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
—மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

என்றார் வள்ளுவர் சமூக வாழ்விற்கு உழவுத் தொழில் உயிராகும் தன்மையைக் கருதி. நிலைமையோ,

தொழுதுழுதும் உணவற்றோர்
உழவர்—மற்றெல்லாம்
முழுதுண்டு முன்செல்பவர்

என்று கூறவேண்டியதாகிவிட்டது. 'உழுவார் உலகத்திற்காணி'யாக அமைந்தாலும், அவர்தம் வேதனைமிக்க வாழ்க்கைச்சுமையால் அந்த அச்சாணி இன்று சுழன்று சுழன்று தேய்ந்து இற்றுப்போகும் நிலைக்காளாகி விட்டது. இந்நிலையிலும்—அவர் தம் துயர் துடைக்க, இன்னல் போக்க வாழ்வளிக்க ஆளவந்தார் எந்த முயற்சியும் செய்யவில்லை. ஆண்டியும் கருப்பனும் அன்றுமுதல் இன்றுவரை நடத்தும் அடிமைத் தொண்டிலே, அறியாமை வாழ்விலே எள்ளளவும் மாற்றமில்லை.

குடிக்கக் கூழும், கட்ட கந்தையும், குந்தக் குடிசையும் அற்ற பாமரிபாய், பரட்டைத் தலையொடும், பஞ்சடைந்த கண்ணொடும், அடைத்துப்போன செவியொடும், குழிவிழுந்த கன்னத்தோடும், ஒட்டி யுலர்ந்த நெஞ்சோடும், விலாவெலும்பு வெளித்தெரியும் உடம்புக் கூட்டோடும், சூம்பிச் சிறுத்த கை கால்களுடனும் கூடிய பரிதாபத்திற்குரிய உழவனை ஒரு நிமிடம் மனத்தில் நினைத்துப் பாருங்கள்! அவனுக்குப் பக்கத்தில் வறுமையின் வடிவமாகவே உள்ள அவன் மனைவியும், பசியும் பட்டினியுமே உருவாகப் பிறந்த பிள்ளைக்குட்டிகளும் வேறு! அவனது அறிவு 'சிந்தனை'யற்ற தெளிவோடும் உள்ளம் 'உணர்ச்சி'யற்ற வரட்சியோடும் அமைந்துவிட்டதை மற்றவர்கள் எப்படி உணரமுடியும்?

அந்த வேதனையின் வடிவான உழவனை, கைகட்டி வாய் பொத்தி, எட்ட நின்று, எசமான் என்ற பரிவு காட்டிப், பாதுகை தூக்கிப் பணி செய்து, பார் திருத்திப் பாடுபட்டும், பயிர் முற்றியதும் கதிரறுத்துப் பண்ணைக் களஞ்சியங்களை நிரப்பி, அது கண்டு தோன்றும் மகிழ்ச்சியை மறைத்துப் பேசும் முதலாளியின் முகத்தைப் பார்த்து நிற்கத்தான் உரிமை உண்டே தவிர்த்த—தனது புளித்த கூழைப் புதிய கூழாக மாற்றிக்கொள்ள, அரை வயிற்றுக்கும் காணாத கஞ்சியைக்—காணும்படிச் செய்துகொள்ள, கந்தையைக் கசக்கிக் கட்ட, படுக்குந் தரையில் பாய் விரித்துக்கொள்ள, உண்ணும்போது ருசி பார்க்க, கிழிந்துபோன கூரையை வேய்ந்துகொள்ள, தன் மனைவியின் மனக் குறையைப் போக்க, பிள்ளையைப்

பள்ளிக்கு அனுப்பிவைக்க, மாதத்தில் ஓர் நாளேனும் ஓய்வு பெற, நடுத் தெருவில் நடக்க, நல்ல வண்டியில் ஏற, நாலு பேருடன் கலந்து சமத்துவத்துடன் பழக எதற்கும் இன்றளவும் வழியில்லை. வகை செய்யும் மனமும் ஆளவந்தார்க்கு இல்லை.

இவ்வளவையும் எண்ணினால், நாம் கொண்டாடும் பொங்கலின் மகிழ்ச்சியும் எங்கோ பறந்து விடுகிறது. எனினும் இப்பொங்கல், உழவர் பெருநாளும் தமிழர் திருநாளுமாகையால், வருகின்ற ஆண்டிலேனும் இந்நிலையை மாற்றியமைக்க, உரிமையுடன் கூடிய நல்வாழ்வு பெற, இவ்விழா உணர்ச்சியூட்டும் என்ற நம்பிக்கை—நமக்கு மகிழ்ச்சியளிப்பதாகட்டும்.

இப்பொங்கல் விழா—இவ்வளவு காலமும் போலவே இனியும் நடைபெற்றால் பொங்கலும் தன் சுவையை இழந்துவிடும்; —விழா—ஆரிபத்தின தொடர்பற்ற தன் தனிச்சிறப்பை இழந்துவிடும்; உழவர் பெருநாள் அவர்களுக்கு துயர் நாளாகித்—தமிழர்க்குக் கருநாளாகி—நாளடைவில் ஒரு ஆரியப் பண்டிகையாகித்—தமிழ்ப் பண்பாட்டை இழப்பது மட்டுமல்ல தமிழர் பண்பாட்டையே குலைப்பதாகிவிடும். எனவேதான் தைப் பொங்கல் நாளைத், தமிழர் வாழ்வில்—அரசியல் — பொருளியல — மத சமூகவியல்—மொழி, கலை நாகரிகப் பண்பாட்டியல் ஆகிய பல்வேறு துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் திருநாளாக்க வேண்டுகிறோம்.

இவ்வாண்டு நடைபெறும் பொங்கல் விழா—இனிவரும் பொங்கலேயேனும் உழவர்களின் உள்ளம் உவகையால் பொங்கும் உழவர் பெருநாளாக விளங்கச் செய்யட்டும். இத் தமிழர் திருநாள், தமிழர் தமது உரிமையைப் பெற, தாய்மொழியைக் காக்க, வேற்று மொழிகளின் ஆதிக்கத்தைத் தடுக்க, தமிழ்க் கலையை வளர்க்க, தமிழர் கருத்தை விளக்க, தமிழ் நாட்டை (திராவிடத்தை) அந்நியர் பிடியினின்றும் விடுவிக்க, தமிழ் நாட்டைத் தனித்துத் தலைநிமிர்ந்து ஆறன் வழி வாழச்செய்ய உணர்ச்சியூட்டும் நன்னாளாகட்டும்; தமிழர் தம் உயர்வுக்கு வெற்றிக்கு வழிகோலும் புரட்சி நாளாகட்டும். அடுத்த ஆண்டிலேனும் தமிழர் திருநாள் உரிமை பெற்ற மக்களின் உணர்ச்சித் திருநாளாகச் சிறக்கட்டும்; நம் நாடு பொன்னாடாகத், தமிழர் வாழ்வு தழைக்கத் தமிழர்களாகிய நாம் பாடுபட இத்திருநாள் வழிகாட்டட்டும். இப்பொங்கல் நாளில்—புதுமை பொங்கட்டும்! புது வாழ்வு மலரட்டும்!! என எமது உளம் பொங்கும் வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.



# உலகச் சுழல்

அரங்கண்ணல்

## எகிப்துப் படுகொலை

'எகிப்து பிரதமர் நுக்ராட்சி பாட்சா படுகொலை செய்யப்பட்டார். கெய்ரோ பல்கலைக் கழக மருத்துவ மாணவன் அப்தல் மெகுய்த் ஹஸனியின் வெறிக்குண்டு அவரது உயிரைப் பறித்துவிட்டது! அரசியல் படுகொலை எகிப்துக்குப் புதிதல்ல. நுக்ராட்சி பாட்சாவின் கொலை எகிப்துப் படுகொலைப் பட்டியலில் நான்காவது இடம் பெறுவதாகும்.

கடந்த இரண்டாம் உலகப் போர் இறுதியில் லார்டு மொய்ன் என்ற எகிப்து மந்திரி யூதர்களால் கொலையுண்டார். 1945ல் அஹ்மத் மஹர் பாட்சாவின் கடைசி மூச்சு பார்லிமெண்டிலேயே வெறித்தனத்துக்கு இறையாயிற்று. அதன் பின் எகிப்து நிதி மந்திரி சர் அமீன் உஸ்மான் பாட்சா படுகொலை செய்யப்பட்டார்.

அரசியல் படுகொலைப்பட்டியலுக்கு ஆளான நுக்ராட்சி பாட்சா ஒரு இலட்சிய வீரர். நாட்டின் மறு பெயரே நுக்ராட்சி என்றுகூடச் சொல்லலாம். அவ்வளவு திறமையும் செல்வாக்குமுடைய அவரது வாழ்வு குறிப்பிடத்தக்க 'படிக்கட்டுகளை'க் கொண்டது.

கெய்ரோவில் பிறந்த அவருக்கு உலகத்தை உணரும் உயர்படிப்பை இங்கிலாந்திலுள்ள நாட்டிங்ஹாம் பல்கலைக் கழகமே வழங்கியது. படிப்பு முடிந்ததும் அவர் தனது வாழ்க்கையைப் பள்ளி ஆசிரியராகத் துவங்கினார். 26ம் வயதில் பள்ளித் தலைமை ஆசிரியரானார். பின் 1921ல் அவரது வாழ்வு பல திருப்பங்களுக்குப் பின் அரசியலில் நுழைந்தபோது எகிப்தில் ஒரே ஒரு அரசியல் கட்சி (Waafd) தான் இருந்தது. 'வாவ்த்' என்பதன் பொருள் 'தூதுக்குழு' என்பதாகும். அக்கட்சி முதல் உலகப் போர் முடிவில் 1918ல்—சாவ்த் ஜாக்லல் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. பின் அக்கட்சியில் 'மிதவாதம்' தலைதூக்கவே பிளவு ஏற்பட்டது.

1925ல் கட்சியைக் கண்ட பெரியார் இறக்கவே நஹாஸ் பாட்சா தலைவரானார். 1933 லும் 1936லும் முறையே கட்சியில் கோளாறுகள் ஏற்பட்டன. 1936ம் ஆண்டு கோளாறின் போது நுக்ராட்சியும் அவரது தோழர் அஹ்மது மஹரும் கட்சியிலிருந்து விலக்கப் படவே அவ்விருவரும் 'சாவ்தி' கட்சியை நிறுவினர். 'சாவ்தி' கட்சியினரான அஹ்மத்மஹர் 1945ல் பதவி வகித்தபொழுது படுகொலைக்கு ஆளாகவே நுக்ராட்சி 1945 பிப்ரவரியில் எகிப்து பிரதமர் ஆனார்.

மண்ணெண்ணெய் வளங் கொழிக்கும் மத்தியப் பிரதேச நாடுகளைத் தன் கண்காணிப்பில் வைத்துக் கொள்ளும் நோக்குடன் பிரிட்டிஷார் 1936ல் எகிப்துடன் ஒரு உடன்பாடு செய்துகொண்டு தங்கள் இராணுவத்தை அங்கேயே வைத்து வந்தனர். இது எகிப்தியருக்குப் பிடிக்காமலே இருந்தது. மேற்படி உடன்பாட்டை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற பொறுப்பை யேற்றவர் நுக்ராட்சிதான். ஆனால் 1946ல் நாடு முழுதும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் பல காரணங்களால் உச்சநிலை யடையவே தனது பதவியினின்றும் விலகினார். அவருக்குப் பின் பிரதமரான சித்தி பாட்சா பத்து மாதங்களுக்குப் பின் விலகவே மீண்டும் நுக்ராட்சியே பிரதமரானார். பொறுப்பேற்ற நுக்ராட்சி ஆங்கிலேயர்களை விரட்டும் லட்சியத்துடன் லேக் சக்ஸஸ் சென்று ஐக்கிய நாடுகள் சபையில் காரசாரமாக வாதிட்டார். அப்பொழுதுதான் உலகம் அவரை அறிமுகப் படுத்திக்கொண்டது.

பிரிட்டிஷ் தொல்லை நீங்கவில்லை. யூதர்களுடன் நடக்கும் போர் முடியவில்லை. இப்படிப் பட்ட சூழ்நிலையில் சிறந்த அரசியல் நிபுணரான நுக்ராட்சி பாட்சா தமது 60-ம் வயதில் படுகொலைக்கு ஆளாகிவிட்டார். அவரது படுகொலையால் எகிப்து ஒரு அரும்பெரும் தலைவரை, திறமைசாலியை இழந்த பரிதாபத்திற்காளாகி விட்டது.

அரசியல் காரியங்களைச் சாதிக்கப் படுகொலைதான் வழி என்ற கொடுநோய் ஆசியநாடுகளுட்பட எங்கும் பரவி வருவது கண்டு மனித சமுதாயத்தினிடத்தில் நமக்குப் பரிதாபந் தான் தோன்றுகிறது!

## இந்தோனேஷியா: ஒரு பாடம்.

வளங் கொழிக்கும் ஜாவா, மலைகளடர்ந்த சுமத்ரா, அரிசி மலிந்த போர்னியோ ஆகிய தீவுகளைக் கொண்ட கிழக்கிந்தியத் தீவுகளில் டச்சு ஆதிபத்தியத்தின் 'திமிர்' இன்னும் அடங்கவில்லை. டச்சு கைப்பிடியில் கிழக்கிந்தியத் தீவுகள் விழுந்த காலமும் இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் ஏற்பட்ட காலமும் சற்றேறக் குறைய ஒன்றுதான். இரண்டு நாடுகளிலும் இரண்டு ஏகாதிபத்தியங்களும் உருவான கதையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி தான்!

இந்தியாவைவிட எவ்வளவோ மடங்கு சிறிதான

இங்கிலாந்து இந்தியாவைத் தன்கீழ் அடிமைப்படுத்தி ஆட்டிப் படைத்தது போலவே கிழக்கிந்தியத் தீவுகளோடு ஒப்பிட்டால் 'சுண்டைக்காய்' போன்றதான ஹாலந்து தன் ஆதிபத்தியத்தை அங்கு நாட்டியது! ஜாவா இங்கிலாந்து அளவு பரப்புடையது. நான்கு இங்கிலாந்துகள் சேர்ந்த பரப்புடையது சுமத்ரா. இந்தோனேஷியாவில் ஒரு நிலையான ஆட்சியை ஏற்படுத்த நீண்ட நாட்களாகக் குடியரசுத் தலைவர்களுக்கும் டச்சு அதிகாரிகளுக்கும் நடைபெற்றுவந்த பேச்சு வார்த்தை பலனளிக்காமற் போகவே, டச்சு சர்க்கார் குடியரசுத் தலைவர்களான, சுகர்ணே, ஹட்டா முதலியவர்களைச் சிறைக்குள் தள்ளிவிட்டு, ஜாவா சுமத்ரா தீவுகளில் படையும் எடுத்துள்ளது. தன் நடவடிக்கைக்குக் காரணம் இந்தோனேஷியாவில் கலவர அட்டூழியங்கள் தலைதூக்கி விட்டதால் அவைகளை அடக்குவதாகும் என்றும் கூறியுள்ளது!

டச்சு ஆக்கிரமிப்பைக் கண்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை போரை நிறுத்த வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளது. பாதுகாப்பு சபையில் இந்தோனேஷியா சார்பில் வலியுறுத்தி வாதிட்டது ஆசிய நாடுகளும் குறிப்பாக இந்தியாவுந்தான். அமெரிக்கா இங்கிலாந்து ஆகியவைகளும் இந்தோனேஷியாவை ஆதரித்தன வென்றாலும் பிரிட்டிஷ் பிரதிநிதி பேசிய பேச்சில் 'மேற்கு நாடுகளுக்கு இன்னும் ஆசிய நாடுகளிடம் ஆசை விடவில்லை' என்ற குரலிலேயே இருக்கிறது

உலகின் ஏகோபித்த எதிர்ப்பைக் கண்ட டச்சு அரசி ஜூலியானா ஒரு ஐக்கியக் கூட்டு சர்க்காரை ஏற்படுத்தத் தயார் என்பதாக அறிவித்துள்ளாரெனக் கடைசியாக வந்த தகவலொன்று கூறுகிறது. அதன் உண்மை எப்படியிருந்தாலும் இந்தோனேஷியா பற்றி ஒருமுகமாக ஆசிய நாடுகள் தங்கள் ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டியதிலிருந்து மேற்கு நாடுகள் பிடியில் 'ஆசிய நாடுகளைச் சிக்கவிடோம்' என்ற உறுதியை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளனர். இந்த உறுதி, ஒற்றுமைக்கு வழியமைக்கட்டும். பண்டித நேரு கூட்டப்போகும் ஆசிய நாடுகள் மாநாடு அதற்கானவைகளைச் செய்யட்டும்! தங்கள் ஆதிபத்திய ஆசை இனிப்பலிக்காது என்ற பாடத்தை மேற்கு வல்லரசுகள் உணரட்டும்!

## ரா. சு. சே. ச.

மகாராஜாக்களாலும், இந்திய மந்திரிகளாலும், காங்கிரஸ் தலைவர்களாலும் முஸ்லிம்கள் மீது கொண்ட ஆத்திரத்தின் விளைவாகப் பாலூட்டி வளர்க்கப்பட்ட ராஷ்ட்ரீய சுயம் சேவா சங்கம் நாட்டில் பல்வேறு இடங்களில் 'வாள் அறுக்கப்பட்ட மந்தியென' ஆடிவருகிறது! உண்மையில் ஆர். எஸ். எஸ். இயக்கம் என்பது உருவானதற்கே காரணம் இரும்பு மனிதர் எனப்

படும் பட்டேலும், இந்து மகா சபையிலிருந்த முகர்ஜி போன்ேரருமேயாகும்! காந்தியார் படுகொலைக்குச் சிலதினங்கள் முன்னர் வரை பட்டேல் போன்ேரரும் மேற்படிக் கும் பலைப் பாராட்டியதும், பம்பாய் உள்நாட்டு மந்திரி மொரார்ஜி தேசாய் ஆகியோர் ஆர். எஸ். எஸ். அணிவகுப்புகளைப் பார்வையிட்டு ஊக்கியதும் யாவரும் அறிந்ததேயாகும்.

காந்தியார் படுகொலையால் ஏற்பட்ட பரபரப்பையொட்டி மேற்படி இயக்கம் சட்ட விரோதமாக்கப்படும்படியான சூழ்நிலை ஏற்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ருலும் மும்முரமாக எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆர். எஸ் எஸ். சின் போக்கை அப்போதிருந்தே கண்டித்து வந்தவர்கள் திராவிடக் கழகத்தாரும் அவர்தம் பத்திரிக்கைகளுந்தான்! இன்றும் அவர்கள் செய்கைகளை அடக்கியொடுக்க வேண்டிய சட்டத்தை அரசியலார் பிறப்பித்தார்களேயொழிய 'அவர்களைச்' சிருஷ்டித்த 'பிர்மாக்கள்' இன்னும் மந்திரிகளாகத்தானிருக்கிருர்கள்! அவர்கள் நடவடிக்கைகளை ஊக்கும் பத்திரிக்கைகள் நெஞ்சழுத்தத்துடன் நாட்டின் அமைதியைக் கருதாமல், நல்லெண்ணமின்றி நடந்துகொண்டுதான் வருகின்றன!! இதைத்தான் யாரிடம் சொல்லுவது...?

## காரியதரிசி—காளா!

சென்னை ரெவின்யு மந்திரி காளா. வெங்கடராவ் காங்கிரஸ் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அற்புதங்களில் ஒன்ருகத் தென்ஞட்டவர் நால்வருக்குக்காரியக் கமிட்டியில் இடமும் கிடைத்துள்ளது. தென்ஞட்டவர் ஒருவர் தலைவருமாஞர்—மற்ெருருவர் செயலாளருமாஞர்—என்பதையும் சேர்த்து எண்ணுபவர்கட்கு வேறென்னய்யா வேண்டும்? காங்கிரஸ் வடநாட்டார் கட்சியல்ல என்பதற்கு என்று கேட்கத்தோன்றும்—சிந்திப்பதற்கு முன். தென்ஞட்டவர் ஒருவர் தலைவராக வந்ததால்தான்—தென்ஞட்டவர் சிலர் கமிட்டியில் இடம் பெறவும், ஒருவர் காரியதரிசியாகவும் முடிந்தது என்பதை எண்ணிப்பார்த்தால் அங்கே தென்ஞடு—வடநாடு உணர்ச்சி இருப்பது விளங்காமற் போகாது. அதிலும் காங்கிரஸ் கட்சியின் பலம் குறைந்து மத்திய சர்க்காரை நடத்தும் மந்திரிகளுக்கே அதிகாரம் என்ற நிலை ஏற்பட்டுள்ள போதுதான்—அதிகாரமற்ற காங்கிரஸ் கமிட்டியில், தென்ஞட்டவருக்கு இடம் காலி செய்யப்பட்டுள்ளது என்பதும் உணரவேண்டியதாகும்.

கலகலக்கும் காங்கிரசை—வலுப்படுத்தத் தம்மால் முடியாத அளவுக்கு—நாட்டில்—சிறப்பாகத் தென்ஞட்டில் வடநாட்டாரோடு மாறுபாடு வளர்ந்து வருகின்றது என்பதைக் கருதியே—காங்கிர

ளைசப் பலப்படுத்துவதற்கு வேறுவழியின்மையால்— தென்னுட்டவருக்கும் சிலபல இடங்களைத் தாராளமாகத் தந்துள்ளனர். தென்னுட்டவரைக் கொண்டே தென்னுட்டு உணர்ச்சியை மட்டுப்படுத்தி வைக்க இதுவல்லவோ வழி! மற்றும்—ஆந்திரர் தலைவரானுல்—ஆந்திரரே செயலாளராகும் வாய்ப்பு கிடைக்கிறதே! அது அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக அமர்ந்தாலும் — தம்மைவிட்டு நீங்காத மாகாண இனப்பற்றைக் காட்டுவதன்ருே!

இவையனைத்திற்கும் மேலாக பார்ப்பனர் தலைவரானுல்—மற்ருெரு பார்ப்பனரேயே பக்கத்தில் அமர்த்திக்கொள்ளும் ஜாதிப் புத்தி, பரந்த நோக்கத்தைப்பற்றியே பகல் இரவென்று பாராது பேசி வருகின்ற கட்சித் தலைவரையும் விட்டுவிடுவதில்லை என்பதற்கோர் எடுத்துக்காட்டன்ருே!

எனினும் ஜமீந்தாரி ஒழிப்பு மசோதாவைக் கொண்டுவந்த காளாவைக் காரியதரிசியாக நியமித்ததை நாம் பாராட்டத்தான் வேண்டும். ஒரு வேளை அங்கே ஜமீந்தார் அழைப்பு மசோதா கொண்டுவரினும்— நமக்கில்லை கவலை.

---

அனைவர்க்கும் எமது

**பொங்கல் வாழ்த்து**

பாரதிதாசன் பதிப்பகத்தார்

புதுச்சேரி.

---

# எமது நன்றி

'புதுவாழ்வு' பலவித கஷ்ட நஷ்டங்களுக்கிடையிலே தனது முதலாண்டுப் பயணத்தை நடத்தியிருக்கிறது. சொந்தத்தில் அச்சகமின்மையாலும், சில விற்பனையாளர்கள் சரிவர நடந்து கொள்ளாமையாலும் மாதமொரு தடவையெனினும் குறித்தகாலத்தில் வெளிவரக் கூடவில்லை. எனினும் வாசகர்களும், விற்பனையாளர்களும் அளித்த ஆதரவுக்கு எமது நன்றி உரித்து.

புதுவாழ்வுக்கென கட்டுரைகளும் கவிதைகளும் எழுதியனுப்பிய எழுத்தாளர், இளங்கவிஞர் ஆகிய அனைவருக்கும், சிறப்பாக 'ஒலிக்கும் சிலம்பு' என்ற தலைப்பில் தொடர்ந்து சிலப்பதிகாரச் செந்தேனை வடித்து, வாசகர்கட்குப் பருகத்தந்த புலவர். இரா. தமிழ் உத். தலைவனர் அவர்கட்கும், நமது இதழின் துணையாசிரியராகத் தொண்டாற்றியதுடன் 'பொற்சிலை'யைத் தொடர்ந்தும் உதவிய தோழர். இராதாமணாளன் அவர்கட்கும், நன்றி கலந்த வாழ்த்து உரியதாகும்.

மற்றும், இதழ் அச்சிட்டு உதவிய அச்சகத்தார்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேலும் 'புதுவாழ்வு' சிறப்புற்றோங்க வாசகர்களும் விற்பனையாளர்களும் இனியும் ஆதரவு தந்து ஊக்குவிக்கக் கேட்டுக் கொள்வதுடன் எமது நன்றி கலந்த வணக்கத்தை அன்பர்கள் அனைவர்க்கும் அறிவித்துக் கொள்கிறோம்,

க. அன்பழகன்.

## பொருந்திய ஆடையே பெருமை தருவது

நாகரீக பொருத்தமுடன் சௌகரியமான அணியாகவும் விளங்குவதே ஒரு கனவானின் ஆடை இலக்கணமாம். எம். ஸி. எச். ஆடைகளை உங்கள் தேர்ந்தெடுப்புக்கு உகந்ததாக்குவது இக்குணங்கள் தான். சரியான இழை, நெசவுடன் கூடிய எம். ஸி. எச். கோட், ஷர்ட், ஸூட் துணி வகைகள், டிரில், லுங்கிகள், வேஷ்டிகள் எந்த சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும் பொருந்துமாறு எண்ணிறந்த வகைகளில் கிடைக்கின்றன.

எங்கள் கைத்தறி ஜவுளிகள், சென்னையிலும் இதர முக்கிய நகரங்களிலுமுள்ள எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

**மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்,**
"ஹாலோவேஸ் கார்டன்ஸ்"-34, பாந்தியன் ரோட்,
எழும்பூர் :: மதராஸ்.



## "நவீனம்"

(மாத வெளியீடு)

**1949. ஜனவரி முதல் நான்காவது மலர் தொடங்குகிறது.**

முதல் இதழ் புத்தாண்டு மலராக வெளிவருகிறது

இதில், திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., D. S. வேலன், முடியரசன், N. பாலசுப்பிரமணியம், A. முத்தையா B.O.L., சாமி. சிதம்பரனூர், கி. ஆ. பெ விசுவநாதம், தோழியர். கு. கண்ணகி முதலியோரின் எழுத்தோவியங்கள் இடம் பெறும்.

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

**தனிப்பிரதி அணா 4. :: ஆண்டு சந்தா ரூ. 3.**

விவரங்கட்கு: நிர்வாகி, "**நவீனம்**", சென்னை-7.

# அறுவடை கண்டு மகிழ்!

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

பொங்கல் விழா, உழவர் பெருங்குடி மக்களுக்கு உவகையூட்டும் அறுவடை விழா! அறிஞர்களுக்குக் களிப்பூட்டும் அறிவு விழா! ஏனையோர்க்கு மகிழ்ச்சி தரும் பெருவிழா!

உழுதுண்டு வாழ்வோர், தமிழகத்தில் பெரும் பகுதியினராதலின். அவர்களுக்கு உவகையூட்டும் விழாவே, ஏனையோர்க்கும் உவகை கொடுக்கும் விழாவாகத் தமிழகத்தில் அமைந்துள்ளது!

தம் தொழிலினாலான பலன் கண்டு மகிழும் நாள் உழவர்களுக்கு அறுவடை நாளாக மட்டும் அமையாமல், ஆண்டின் தொடக்க நாளாகவும் இருந்துவருகிறது. ஓராண்டு உழைப்பின் பலனை எண்ணி மகிழும் நாள், அடுத்த ஆண்டிற்கான திட்டத்தை வகுக்கும் தொடக்க நாளாக உழவர்க்கு இருந்துவருகிறது. அதுபோலவே வெவ்வேறு தொழிலின் மேல் நாட்டஞ் செலுத்தி வாழ்நாளைக் கடத்திவரும் ஒவ்வொருவரும், உழவர்க்கு மகிழ்வு தரும் பொங்கல் நாளையே, தாங்களுக்கும் வாழ்வளிக்கும் பெருவிழா நாளாகக் கொண்டாடிவரும் தன்மை, தமிழகத்தின்கண் இருந்துவரக் காண்கிறோம்.

அறுத்துவந்த நெற்கதிர்களைக் கண்டு அகமகிழ்கிறான் உழவன்! வேலை செய்து பலனைக் கொடுத்த காளைகளைத் தடவிக் கொடுக்கிறான் பாட்டாளி! இளைஞர்கள் மாடு விரட்டுதல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுகின்றார்கள்! மகளிர் கூடிக் கும்மியடித்து மகிழ்கிறார்கள்! ஆடல் வல்லோர் ஆடலரங்கம் ஏறுகிறார்கள்! பாவாணர் பாட்டிசைக்கிறார்கள்! அறிவுடையோர் மன்றங் கூட்டுகிறார்கள்! வீரர்கள் வெற்றிக்களி கொண்டாடுகிறார்கள்! எங்கணும் மகிழ்ச்சி வெள்ளம்! இன்பம் கொள்ளை! கொள்ளை!! கொள்ளை!!! அந்த நாளில்.

யாவர்க்கும் உள்ளக் களிப்பையும் உறுதியையும் கொடுக்கும் பொங்கல் விழா, எதிர்கால உலகின் சிற்பிகளாக விளங்கும் மாணவர்களுக்குக்- குறிப்பாக திராவிட மாணவக் கழகத்தினர்க்கு இது வரையில் ஆற்றிய தொண்டு குறித்து மகிழும் நன்னாளாகவும் இனி ஆற்றவேண்டிய தொண்டு குறித்து எண்ணி உள்ள உறுதி கொள்ளும் பொன்னாளாகவும் அமையவேண்டும்!

திராவிடக்கழகம் தீட்டித் தரும் இலட்சியக் கருத்துக்களை

யும், கொள்கைகளையும் ஏற்று, நடைமுறை நிலைமைகளை ஆராய்ந்து, வருங்காலத்திற்கான அடிப்படைகளை வகுக்க வேண்டிய பொறுப்பு—கடமை திராவிட மாணவர் கழகத்தைச் சார்ந்ததாகும். அதற்கான வசதிகளும், ஆற்றல்களும் அதனிடத்து அமைந்திருக்கின்றன.

தாய்க்கழகத்தின் நேரடி நடவடிக்கைகளை அறிந்து—தெரிந்து கொள்ளும் அளவுக்குத்தான் மாணவர் கழகங்கள் ஈடுபட முடியும். அந்த அளவில் நின்று, மாணவர் கழகங்கள் ஆற்றக்கூடிய தொண்டுகள் ஏராளமாக இருக்கின்றன.

நம் கழகக் கொள்கைகளை நாட்டு மக்களிடம் பரப்பும் நல்ல பணியினைச் சென்ற நான்கு ஆண்டுகளாக மாணவர்கள் ஆற்றிவந்திருக்கிறார்கள். அதன் பலனாய் ஓரளவுக்குப் பட்டி தொட்டிகளிலுங்கூட திராவிடக்கழகங்கள் மலர்ந்து வருகின்றன. கோடை விடுமுறை நாட்களிலும் பிற ஓய்வு நாட்களிலும் மாணவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து நாட்டின் நாலா பக்கங்களிலும் சென்று, கழகக்கொள்கைகளை எடுத்துக் கூறியதன் விளைவாக கழகக் கருத்துக்களை மக்கள் அறிந்திருப்பதோடு, கழகத்திடத்து இளம் மாணவர்களும், பாமரரும், படித்தவர்களும், பெரியவர்களும், பெண்டிரும் ஒரு வகை மதிப்புவைக்க ஆரம்பித்துள்ளார்கள். இந்த அரிய பெரிய தொண்டின் பயனைக் குறித்துப் பொங்கல் நாளன்று மாணவ உலகம் மகிழுமாக!

கழகக் கொள்கைகள் ஓரளவு பரவியிருக்கின்றன என்றாலும், மக்களின் முழுச் சக்தியை, அல்லது போதுமான அளவுக்குச் சக்தியைப் பெறும் நிலைமையை அடையவில்லை. பட்டி தொட்டிகளிலும் கழகத்தின் கிளைகள் தோன்றியிருக்கின்றன என்றாலும், தோன்றவேண்டிய இடங்கள் நிரம்ப இருக்கின்றன.

அறுவடை கண்டு களிகொண்டு வயலிலே நிற்கும் உழவன், அடுத்த ஆண்டிற்கான வேலைத்திட்டங்களைத் துவங்க, விதைக்கோட்டை கட்டி, எருக்குழி தோண்டி, கலப்பைகளைச் சீர்படுத்தி, காளைகளை வளமாக்கி வைத்துக்கொள்ள எண்ணுகிறான். பின்பு பருவகாலம் குறுக்கிட்டதும் வயலுக்கு வரப்புக்கட்டி, மடைகளைத் திறந்து வைத்து, வெடிப்புண்ட மண்ணை உழுது புழுதியாக்கி, நீர் பாய்ச்சி, நிலத்தைச் சேராக்கிப் பரம்படித்து, விதைதூவி, நீர் வடித்துக், களை எடுத்து, காத்திருந்து கதிரறுத்துக், களஞ்சேர்த்து, களமடித்து, மணிகுவித்து, வீடு சேர்த்துப், பொங்கலிட்டுப், புதிது உண்ணுகிறான். அது போல திராவிட மாணவர் கழகம் என்னும் வயலிலே நிற்கும் மாணவனும் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து, அவற்றின் பலன் கண்டு ஆண்டுக்கொரு முறை பேருவகை எய்தட்டும்- அந்த நன்னாள் பொங்கல் நாளாகட்டும்!

இன்றைய நிலையில் திராவிட மாணவர் கழகம் வேலை செய்து வருகின்றது என்றாலும், இன்னும் நன்றாக வேலை செய்ய முடியும். அதற்கான ஆற்றலும், வசதியும் அதனிடத்திருந்தும் செம்மைப்படுத்தப் படாமையால் வலிவின்றி இயங்குகிறது. மாணவர் கிளைக் கழகங்கள் ஒன்றோடொன்று தொடர்பற்ற நிலையில் சிதறிக் கிடக்கின்றன. சிதறிக் கிடப்பவைகளை ஒழுங்கு படுத்தி ஒன்று சேர்க்க வேண்டிய பொறுப்பு, மாணவர்களைச் சார்ந்த உடனடியான கடமையாக இருக்கின்றது.

பணியாற்றுவதிலே ஆர்வங் கொண்ட — திறமையோடு விளங்கும் மாணவர்களைக் கொண்டு, செவ்விய முறையில் ஆங்காங்கு செயற்குழுக்கள் அமைக்கப்படவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் சுற்றளவுக்குள் அமையும் பள்ளிக்கூடங்களுக்கு ஒரு திராவிட மாணவர் கழகம் என்ற முறையில், கழகங்கள் தோற்றுவிக்கப்படவேண்டும்.

அப்படித் தோற்றுவிக்கப்படும் கழகங்களில் நடுத்தரப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, புலவர் கல்லூரி மாணவர்கள் உறுப்பினர்களாக அமையவேண்டும்.

வகுக்கப்படும் வட்டாரத்தின் பெயரால் அந்தந்த வட்டாரக் கிளைக்கழகங்கள் பெயர் பெற வேண்டும். இப்படி அமைக்கப்பட்ட பிறகு மாவட்டங்களைப் பொருத்துக் கிளைக் கழகங்கள் ஒன்று சேர்த்துக் கணக்கிடப் படவேண்டும். ஒவ்வொரு கிளைக்கழகமும் இருவரைப்பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து, அவர்களைக்கொண்டு மாவட்ட திராவிட மாணவர் கழகம் நிறுவவேண்டும்.

மாவட்ட திராவிட மாணவர் கழகங்கள், இரண்டு இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, மத்திய அதாவது மாநிலத் திராவிட மாணவர் கழகம் நிறுவப்படவேண்டும். அப்படி நிறுவப்படும் கழகம் மத்திய நிர்வாகக் குழுவாக அமையும். மாநிலத் திராவிட மாணவர் கழகத் தலைவரையும், செயலாளரையும், அந்தக் குழு, தன்னிடமிருந்தே தேர்ந்தெடுக்க வேண்டும். தலைவரும், செயலாளரும் செய்யவேண்டிய அலுவல் முறைகளைச் செயற்குழு வகுத்துக் கொள்ள வேண்டும்.

மாணவர் கழகங்கள் இந்த முறையில் ஒன்றோடொன்று பிணைப்புண்டு வளர்ந்தோங்கி நின்றால், வேற்றுச் சக்தி எதுவாலும் அழிக்க முடியாமல் வலுப்பெற்றிருக்கும் என்பதோடு. திராவிடக்கழகத் தலைவர் பெரியார் அவர்கள் திரட்டித் தரும் கருத்துக்களை, நாட்டின் நாலா பக்கங்களிலும் விதைத்துவரவும் வசதியாகும்.

பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் பயிலும் திறமையான மாணவர்களைக் கொண்டு, துணைக்குழுக்கள் (சப்கமிட்டி) ஏற்படுத்தப்படவேண்டும். அது கடினமல்ல.

திராவிட நாட்டின் எல்லை, எல்லைபற்றி ஏற்படும் பிரச்

சினைகள், திராவிட நாட்டின் மூலப்பொருள் வளம், இயற்கை வசதி, அவைகளை உலகிலுள்ள மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது விளங்கும் தன்மை, திராவிடத்தினின்றும் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்கள், இறக்குமதி செய்யவேண்டிய அவசியமான பொருள்கள், திராவிடத்தில் மின்சாரத்தைப் பெருக்கக்கூடிய வழிகள், எத்தகைய உற்பத்திச் சாலைகளை ஏற்படுத்தி எவ்வகைப் பொருள்களை திராவிடத்தின்கண்ணே உற்பத்தி செய்ய முடியும் என்பது, எந்த அளவுக்குப் பிற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும் என்பது, நாடு பிரிக்கப்பட்டால் பொருளாதார, அரசியல், சமூக வாழ்வில் ஏற்படக்கூடிய மாறுதல்கள் ஆகிய பல்வேறு பிரச்சினைகள் பற்றிய புள்ளி விபரத்தோடு கூடிய செய்திகளைக் கல்லூரி மாணவர்கள், தங்கள் ஓய்வு நாட்களிலே, தனித்தனிக் குழுக்களாகக் கூடித் திரட்டித் தரமுடியும். ஓய்வும் வசதியும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏராளமாக இருக்கின்றன. அந்தந்தத் துறைகளில் திறமையுள்ள மாணவர்களைத்தேர்ந்தெடுத்து அவரவர்களுக்கேற்ற வேலைகளைப் பகிர்ந்து கொடுக்கும் பணியை மத்திய திராவிட மாணவர் கழகம் புரியவேண்டும்—அதனால் முடியும். இந்தப் பணி தாய்க் கழகமாகிய திராவிடக் கழகத்திற்குப் பெருந்துணை செய்வதாகும். தலைவர் பெரியார் இராமசாமிக்குச் சிறந்த ஊன்றுகோலாக விளங்கக் கூடும். இந்தப் பணியினைச் செய்துமுடிக்க அறிஞர் அண்ணாத்துரை அவர்களிடமிருந்து மாணவர்கள் அறிவுரை பெறமுடியும்.

இத்தகைய அரிய பணியினைச் செய்வதோடு கோடை விடுமுறை காலத்தில், மக்களுக்குக் கொள்கைகளைத் தெரிவிக்கும் வகையில் மாணவர் குழுக்களை ஆங்காங்கு அனுப்பிவைக்கும் சீரிய தொண்டையும் தனக்கேற்ற முறையில் மத்திய மாணவர் கழகம் செய்ய முடியும்.

இன்றைய நிலையில் அரசியல் பொருளாதார உண்மைகளைப் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டிய பெருங்கடமை மாணவர்களைச் சார்ந்துள்ளது. கடமையைச் செம்மையுறச் செய்ய முற்பட்டால் மக்களின் மதிப்பும், ஆதரவும் கழகத்தின்மீது அதிக அளவு சாய வழி ஏற்படும்.

அடுத்த ஆண்டிலேனும் வினை விதைத்து அறுவடை காண வேண்டும் என்ற ஆவலை இந்த ஆண்டு அறுவடை விழா மாணவர்களுக்கு அளிப்பதாகட்டும்! அறிவுலகம் தரும் கருத்து விதைகளை ஏந்திச் சென்று, திராவிட மக்களின் உள்ளம் என்னும் கழனியிலே தூவி அறுவடைகண்டு மகிழ திராவிட மாணவர் கழகத்தாரும், மற்றையோரும் முற்படுவோமாக! ★

# உண்மை இதுதான்

டாக்டர் மு. வரதராசன்

ஒரு முறை சித்தூரை அடுத்த ஒரு சிற்றூராக்குச் சென்று நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தேன். நண்பரோடு இரண்டு நாள் அளவளாவிக் கொண்டிருந்த பிறகு மூன்றும் நாள் அவர் படித்த கல்லூரியைப் பற்றிய பேச்சு வந்தது. அவர் பச்சையப்பன் கல்லூரியில் படித்தவர் என்று அறிந்ததும், அதைப் பற்றிக் கேட்டறிவதில் எனக்கு ஆர்வம் மிகுந்தது. பச்சையப்பன கல்லூரியின் பெருமையைப் பற்றி அவர் பேசிக்கொண்டே வந்து அவர் படித்த காலத்தில் இருந்த ஆசிரியர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே சென்றார். அவர் பி. ஏ. படித்துப் பட்டம் பெற்றவர். இண்டர்மீடியட் வகுப்பிலும் பி. ஏ. வகுப்பிலும் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர்களைப் பற்றிக் கூறினார் அவருடைய விருப்பப் பாடமாகிய கணக்குக் கற்பித்த ஆசிரியர்களைக் குறிப்பிட்டுப் புகழ்ந்தார். விஞ்ஞான ஆசிரியர்களைப் பற்றிச் சில குறைகளை எடுத்துச் சுட்டினார். கல்லூரித் தலைவரைப் பற்றியும் குற்றமும் குணமுமாகச் சில சொன்னார் இவ்வாறு முறையாக எல்லாரைப் பற்றிச் சொல்லியும் மொழியாசிரியரைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே என்று திகைத்து அவரே கூறுவார் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் அதற்குள் அவர் பச்சையப்பன் கல்லூரிக்கு அடுத்த உணவு விடுதியைப் பற்றிப் பேச்சை மாற்றத் தொடங்கினார். உடனே நான் என் ஐயத்தைப் போக்கிக்கொள்ள விரைந்தேன்.

'ஆமாங்க; எல்லாரைப் பற்றியும் சொன்னீர்களே! மொழியாசிரியரைப் பற்றி ஒன்றுமே பேசாமல் விட்டுவிட்டீர்களே! நீங்கள் பி. ஏ. படித்தவர் ஆகையால், இண்டர்மீடியட், பி. ஏ. இரண்டிலும் மொழிப் பாடம் விடாமல் இருந்திருக்குமே" என்று கேட்டேன்.

"அதுவா? எனக்கு அவர்களைப் பற்றி அக்கரையே இருப்பதில்லை" என்றார் நண்பர்.

"என்ன இப்படிச் சொல்கின்றீர்களே! இந்தக் காலத்திலா இப்படிப் பேசுவது? உங்களுக்கு இருக்கும் தாய்மொழிப் பற்றுக்கு நீங்கள் இப்படிப் பேசலாமா? அதிலும் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் படித்துவிட்டுத் தமிழாசிரியர்களைப் பற்றி மௌனமாக இருப்பதா?" என்று என் ஆத்திரத்தைக் கொட்டினேன்.

"சொன்னால் வெட்கக் கேடு. நான் தமிழாசிரியர்களிடம் படித்திருந்தால்தானே அவர்களைப் பற்றிச் சொல்லமுடியும்" என்றார் நண்பர்.

இதைக் கேட்டதும் என்னுடைய திகைப்பு முன்னிலும் மிகுதியாயிற்று. உடனே "நீங்கள் தமிழைத்தானே இரண்டாம் மொழியாக எடுத்துப் படித்தீர்கள்?" என்று கேட்டேன்.

"இல்லை; தெலுங்கை."

"தமிழ்தானே உங்கள் தாய் மொழி?"

"ஆமாம்"

"பின் ஏன் தமிழை விட்டுத் தெலுங்கு படித்தீர்கள்?"

"வேறு வழி இல்லாததால்"

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!"

"இதுதான் எங்கள் சொந்த ஊர். இந்த ஊரில் ஐந்தாம் வகுப்பு வரையிலும் படிக்கலாம். அதற்கு மேற்பட்டுத்தான் சித்தூருக்குப் போய்ப் படிக்க வேண்டும். சித்தூரில் தமிழ் படிக்க வழி உண்டு. ஆனால் இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவதுவரையில் படிக்க வேண்டுமே. இதில் தமிழ் எழுத்துச் சொல்லிக் கொடுக்க வழியே இல்லை. படித்தால் தெலுங்குதான் படிக்கவேண்டும். இல்லையானால் வீட்டோடு இருக்கவேண்டும். தமிழ் பேசுகிறவர்கள் இந்த ஊரில் மூன்றில் ஒரு பங்கு. அத்தனை பேரும் பேசுவது தமிழ்; படிப்பது தெலுங்கு. ஆகையால் நானும் தெலுங்கு படித்தேன். ஐந்தாவது முடித்த பிறகு சித்தூர்க்குப் போனபோது, அங்கும் வேறுவழி இல்லாமல், தமிழ் தெரியாதபடியால், ஆறுவதில் சேர்ந்ததும் தெலுங்கே படித்தேன். சித்தூரில் பத்தாவது வரையில் தெலுங்கு படித்தபிறகு சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த பிறகும் தெலுங்கே மொழிப் பாடமாக எடுத்துத் தெலுங்கு ஆசிரியர்களிடம் படித்தேன். அவர்கள்மேல் குறை சொல்லவில்லை. எனக்கு ஏனோ அந்தப் பாடத்தில் அக்கறை வரவேயில்லை. அதனால் அந்த ஆசிரியர்களிடத்தில் அக்கறை இல்லை. தலைவிதியே என்று வகுப்புகளில் உட்கார்ந்து காலங்கழித்தேன். மார்க்கும் குறைவாகவே வரும். எப்படியோ படித்துப் பட்டம் பெற்றுவிட்டேன். இதுதான் கதை" என்றார்.

நான் பெருமூச்சு விட்டேன்.

* * * *

என் தந்தையார்க்குக் கூர்மையான அறிவு உண்டு என்றும், கணக்கில் மிக வல்லவர் என்றும், எல்லாரும் காகிதமும் பென்சிலும் எடுத்துப் போடும் வியாபாரக் கணக்குகளை அவர் வாயாலேயே விரைவில் போட்டு முடிப்பார் என்றும் ஊரில் கிழவர்களும் பேசிக்கொள்வார்கள். "உங்கள் அப்பா இப்படி, அப்படி, இவ்வளவு கெட்டிக்காரர்" என்று அவர்கள் சொல்லும்போது என் உள்ளம் பூரிக்கும்.

ஆனால் எனக்கு ஒரு பெரிய குறை உண்டு. நான் வெளியூர்க்குச் சென்ற பிறகு அவர் எழுதிய கடிதங்களைப் படிக்கும்

போதெல்லாம், என் தந்தை யாரைப் போல் தமிழ்க்கொலை செய்கின்றவர் எவரும் இல்லை என்று எண்ணி வருந்துவேன். ருமசாமி, நண்ராக, இறுக்கிறார்கள், வந்து போநார், என்று சொண்ணுர் என்றெல்லாம் அவர் கடிதங்களில் எழுதியவற்றைக் கண்டு ஆத்திரமும் கொண்டேன். "அந்தக் காலத்துப் படிப்பு அவ்வளவுதான் போலும்" என்று ஒருவாறு ஆத்திரம் அடங்குவேன்.

ஒரு விடுமுறையின் போது என் மகனை அழைத்துக் கொண்டு ஊர்க்குப் போயிருந்தேன். என் தந்தையார் தம் பேரனோடு ஒரு நாள் திண்ணையில் பேசிக்கொண்டிருந்தார். அவனை வாய்பாடு கேட்டு மனக்கணக்குக் கேட்டார். என் பையன் விடை சொல்ல முடியாமல் திகைத்தான். உடனே பாட்டனார் தம் காலத்துப் படிப்பின் பெருமையைப் புகழ்ந்து சொல்லி, "இந்தக் காலத்துப் படிப்பே இவ்வளவுதான். அடிப்படை இல்லாத படிப்பு" என்றார். என் மகனுடைய முகத்தில் சுருக்கங் கண்டேன். இதுதான் நல்ல சமயம் என்று நான் மெல்ல அவரோடு பேசத் தொடங்கினேன். "கணக்கு இருக்கட்டும்; தமிழ் எழுதச் சொல்லிப் பாருங்கள். உங்களைவிட நன்றாக எழுத்துப் பிழை இல்லாமல் எழுதுவான்" என்றேன்.

அப்போதுதான் அவர் வாயிலிருந்து உண்மை வெளிப்பட்டு என் ஐயம் தீர்ந்தது. அடங்கியிருந்த ஆத்திரமும் அழிந்தது. "ஆமாம்; இவன் என்னைவிடத் தமிழ் நன்றாக எழுதலாம், ஊமையோடு வாயாடி போட்டிக்குப் போனது போல் தான் இது. நான் பள்ளிக்கூடத்தில் தமிழே படித்ததில்லை. நானாகப் பார்த்துப் பார்த்துத் தமிழ் எழுத்துக்களை வீட்டில் கற்றுக் கொண்டேன். வாத்தியாரிடம் படித்ததெல்லாம் தெலுங்குதான். அந்தக் காலத்தில் இந்த ஊரில் தெலுங்கில் எழுதினால்தான் பத்திரம் ரிஜிஸ்டர் ஆகும். தெலுங்கில் விண்ணப்பம் எழுதினால்தான் தாசில்தாருக்குப் போய்ச் சேரும். அதனால் இந்த ஊரில் அப்போது எல்லாரும் தெலுங்குதான் படித்தார்கள்" என்றார்.

* * *

சில ஆண்டுகளுக்கு முன் திருப்பதிக்குச் சென்றபோது என் உறவினர் ஒருவர் அங்கு வேலையாகச் சென்றிருந்தவர் ஒரு குறை சொன்னார். அவருடைய பையனுக்கு வயது ஐந்து ஆகிவிட்டது என்றும், அவனைத் தொடக்கப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாம் என்றால் எந்தப் பள்ளிக்கூடத்திலும் தமிழ் எழுத்துக் கற்றுக் கொடுப்பதில்லை என்றும் சொன்னார். அன்று மாலை திருப்பதி முனிசிபல் கவுன்சிலர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தபோது இதைப் பற்றிக் கேட்டேன். அவரால் சில உண்மைகள் அறிந்தேன். அவரும் தமிழ் பேசும் கவுன்சிலர் தான். அவரைப்போல் தமிழர் ஆறு பேர் முனிசிபாலிடியில் உறுப்பினராக இருப்பதாகக் கூறினார். ஊரில் உள்ள மக்

களில் கால்பகுதிக்கு மேற்பட்டவர் தமிழராம். தொடக்கப் பள்ளிகள் பல இருக்கின்றனவாம். ஆனால் ஒன்றிலும் தமிழ் கற்பிப்பதில்லையாம். உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் மட்டும் தமிழ் கற்க இடமுண்டு. தமிழ் எழுத்துக் கற்றுத் தொடங்க வேண்டுமானால், தனியே நடத்தும திண்ணைப் பள்ளிக்கூடங்களே புகலிடமாம். காரணம் கேட்டால் அந்த ஜில்லாவின் நடவடிக்கை, ஆட்சி எல்லாம் தெலுங்கில் நடைபெறுவதால், தமிழ் தேவைப் படுவதில்லை என்றார்.

* * *

தமிழும் தெலுங்குமாகக் கலந்துள்ள பகுதிகளில் தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் படிக்க வழி இல்லை.

காரணம் என்ன? சித்தூர் ஜில்லாவில் பெருந்தொகையான மக்கள் தமிழ் பேசுவோராக இருந்தாலும், ஜில்லாவின் அரசியல் மொழி தெலுங்கு. பொதுமக்களுக்குத் தாய்மொழியைப் பற்றி அவ்வளவாகக் கவலை இருப்பதில்லை. பொதுவாழ்க்கைக்கு வேண்டிய அரசியல் மொழியைப் பற்றியே அவர்கள் எப்போதும் கவலை கொள்வார்கள். அதனால் அந்த ஜில்லாவின் அரசியல் மொழியாகிய தெலுங்கைக் கற்பதை இயற்கையாகக் கொண்டுவிட்டார்கள். தாய்மொழி வளமானதாக இருந்தாலும், தொன்று தொட்டு வந்த பெருமையுடையதாக இருந்தாலும், வேறு என்ன சிறப்புப் பெற்றிருந்தாலும் பொதுமக்களுக்குக் கவலை இல்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பொதுவாழ்க்கைக்கு, அரசியல் வாழ்க்கைக்கு உரிய மொழியே ஆகும்.

அரசியல் மொழியே மக்கள் கற்கும் மொழியாகும் என்பது ஒரு ஜில்லாவில் காணும் உண்மை மட்டும் அல்ல; உலகெங்கும் காணும் உண்மையாகும்.

தமிழ்நாட்டில் ஒரு தலைமுறைக்கு முன் தமிழைக் கற்காமல், தமிழ் எழுதத் தெரியாமல் தமிழ் பேசத் தெரியாமல் உயர்நிலையில் இருந்த தமிழர் எத்தனைபேர்! அவர்கள் ஏன் தமிழ் கற்கவில்லை? ஏன் தமிழ்த் தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் ஆங்கிலக் கான்வெண்ட் பள்ளிகளுக்குச் சென்று கற்றார்கள்? பலர் இரண்டாம் மொழியாகிய தமிழ் வேண்டாம என விதிவிலக்குப் பெற்று ஆங்கிலம் மட்டுமே கற்று முன்னேறியது ஏன்? பழைய விடைதான்; தமிழ் இந்த நாட்டின் அரசியல் மொழி அல்ல; ஆங்கிலமே அரசியல் மொழி, ஆங்கிலம் கற்றால் போதும் என்பதுதான்.

1940-ல் எச். ஜி. வெல்ஸ் 'நான் எதிர்நோக்குவன' (My Anticipations) என்ற நூலை எழுதியபோது பிரஞ்சு மொழியே உலக மொழியாக விளங்கிவிடும் என்று எழுதினார். அவருடைய வாழ்நாளில் அது பொய்யாகி விட்டதைக் கண்டார். ஏன் பொய்த்தது? ஐரோப்பிய அரசியலில் பிரஞ்சுக்காரர் செல்வாக்குப் பெறக்கூடும் என்றும், அதன் வாயி

பைலட் ரேடியோஸ்

5 வால்வுகள் :: 6 வால்வுகள்

அழகிய தோற்றத்துடன் சிறந்த முறையில் செய்யப்பட்டது

ஏ. சி. செட்டுகள்

பிக் அப், Extra ஸ்பீகர்கள் வைக்கலாம்.

சுலபமாக tune செய்யலாம்.

5 வால்வு ரூ. 375 :: 6 வால்வு ரூ. 675

ஏஜெண்ட்ஸ் :-
சாரங்கராஜன் அண்டு கோ.,
17, சகாஜிநாயக்கன் தெரு,
கும்பகோணம்

தஞ்சை ஜில்லாவுக்குப்
பூரண விநியோகஸ்தர்கள் :-
குமார் ரேடியோஸ்,
13. நாணயக்காரத் தெரு,
கும்பகோணம்.

லாக உலக அரசியலிலும் செல்வாக்குப் பெறக் கூடும் என்றும் அவர் எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்தவாறு பிரஞ்சுக்காரர் செல்வாக்குப் பெறவில்லை. அதனால் உலகில் பல நாடுகளைக் கட்டியாளும் செல்வாக்குப் பெற்ற ஆங்கிலேயருடைய ஆங்கிலமொழியே உலக அரசியல் மொழியாக வளர்ந்தது; இன்று உலக மொழியாக விளங்குகின்றது.

உண்மை இதுதான்; இதை யாரும் மறைத்துப் பயன் இல்லை. தமிழ் பலவளம் படைத்துப் பல மொழிக்கும் தாயாகும் பெருமையும் பெற்றுத் தொன்மைச் சிறப்புடைய தாய் விளங்குவதாகப் பெருமை கொள்ளலாம். அதனால் அது வாழமுடியாது. மொழியின் உயிர் புலவரிடம் இல்லை; பொதுமக்களின் உள்ளத்தில்தான் உள்ளது. மக்களின் வாழ்க்கை அரசியலை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் எந்த மொழி அரசியல் மொழியாக விளங்குமோ அந்த மொழிதான் மக்கள் மொழியாக விளங்கும்; நேற்றுத் தோன்றிய கொச்சை மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியானால் ஓங்கி வாழமுடியும். உலகம் தோன்றிய நாளில் தோன்றிய பண்பட்ட மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியாக விளங்கவில்லையானால் வாழ வழி இல்லை. ஆகவே தமிழ் நாட்டின் ஆட்சி தமிழில் நடைபெற்றால்தான் தமிழன் தமிழைப் படிப்பான். ★

★ # புதுமைகொள்

எடுப்பு

வாழ்வில் புதுமை கொள்ளடா—தமிழா
வாழ்வில் புதுமை கொள்ளடா

உடன் எடுப்பு

பாழ்படுத்தும் மடமைப் பழமைகளை அள்ளி
பாரினிலே பெரும் பள்ளந்தனில் தள்ளி.... (வாழ்வில்)

முடிப்பு

கலைகளில் புதுமை கவிதையில் புதுமை
காவியம் ஓவியம் அனைத்திலும் எண்ண
அலைகளில் புதுமை ஆக்கலில் புதுமை
அறிவினில் புதுமை அறிந்து மண்மீது.... (வாழ்வில்)

சாத்திரப் புராணச் சமயவாதில் உழன்று
தன்னுரிமைகளைத் தரணியில் இழந்து
நேத்திரங் கொண்டும் குருடனாய்த் திரிந்து
நிலைகெட்டு வாழ்வதை நெஞ்சி லுணர்ந்து.... (வாழ்வில்)

மதமெனும் தீயில் மயங்கி வீழாதே
மனிதனை நீஎன்னசாதி என்று கேளாதே
இதமென எண்ணி நீ ஈனச்செயல் செய்யாதே
எவருக்கும் அடிமையாய் நண்ணி உய்யாதே...(வாழ்வில்)

# தமிழா!

**தமிழ்ப்பித்தன்**

எல்லாமவன் செயல் என்று தூங்காதே
எழுதிய பழமையில் மூழ்கி ஏங்காதே
நில்லா தோடிடும் காலமே மடமை
நித்திரை யிலாழ்ந்து பித்தனாய் மாளாதே.... (வாழ்வில்)

சதமல்ல உலகென்று சாற்றிப் புன்மதியால்
தம்வயிற்றை வளர்க்கும் சழக்கரின் சதியால்
நிதமுனை வருத்திடும் இன்னல்கள் நீங்கிட
நீணில மீதுயர் தமிழகம் ஓங்கிட..... (வாழ்வில்)

கண்களாம் கல்வியைக் கருத்துடன் போற்று
கல்வியிலான் இங்கிலை யெனச் சாற்று
பெண்களாம் உலகப் பிறப்பிடப் பேழையின்
பேதைமை அகற்றிட ஓதிடு நாளுமே.... (வாழ்வில்)

அமுதத் தமிழாம் அன்னைமொழி பேணு
அதற்கொரு துயர்வரின் அழிக்கச் சபதம் பூணு
குமுதமும் மதியும்போல் அமுதத்தமிழும் நீயும்
குலவியே வாழ்ந்திடில் பகையெல்லாம் மாயும்..(வாழ்வில்)

போட்டிப் பொறாமை சாதிப் புன்மைகளை நீக்க
பொன்றிடச் செய்திடும் வறுமையைப் போக்க
நாட்டின் இழிநிலை அனைத்தையும் ஒழிக்க
நாடிடும் தன்னர சாட்சியில் களிக்க.... (வாழ்வில்)

——:0:——

# விதி!

அறிஞர்
அண்ணாதுரை

ஓரிரு நூற்றாண்டுகள் அந்நிய ஏகாதிபத்தியத்திடம், சிக்கி சீர்குலைந்திருந்த தாயகம் விடுதலை பெற்றுவிட்டதை — உலகுக்கு, உவகையுடனும் பெருமிதத்துடனும் அறிவித்து விட்ட நாம் — அடிமைத்தனம், அடியோடு, பூண்டோடு அழிந்துவிட்டதா? இன்னும் ஏதேனும் நமக்குத் தெரிந்தும், தெரியாமலும் அடிமைத் தனம் நம்மிடம் இருந்து கொண்டு நம்மை ஆட்டிவைக்கிறதா என்று, நம்மை நாமே கேட்டுக்கொண்டாக வேண்டும் — கண்டுபிடித்தாக வேண்டும் — காரணம் தெரிந்தாக வேண்டும். நாம் இதைச் செய்யாவிட்டால் — நமக்கு முழு வாழ்வும், புது வாழ்வும் கிட்டாது என்பது மட்டுமல்ல, நம்மை நோக்கி நானிலம் நகைக்கும் அதோ பார் விழிகளில்லா குருடன் விலங்கொடித்தேன் என்று வீரம் பேசுகிறான், தன் மீது பூட்டப்பட்டுள்ள வேறு விலங்குகளை உணராமலேயே, என்று கேலி பேசும்.

எனவேதான், நாம் எதெதற்கு அடிமைப்பட்டிருந்தோம் — எதையெதை நீக்கி விட்டோம் — மேலும் நீக்கப்படவேண்டிய அடிமைத்தனம் எது என்பது பற்றி, நம்மிலே, நேர்மையில் நாட்டமும், நெஞ்சில் உரமும் கொண்டவர்கள், சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது மிகமிக முக்கியமான கடமையாகிறது.

அடிமைத்தனம் ஒரு கூட்டுச் சரக்கு. அடிமைத்தனம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்தாலும், அடிமைத் தனம் என்பது ஒரு கூட்டுச் சரக்கு என்பது தெரியும்.

கந்தசாமிக்குக் கடும் ஜுரம், ஜுரத்தின் காரணமாகக் கைகால் பிடிப்பு, கண்ணில் பஞ்சடைப்பு, மார்பிலே வலி இவ்வளவும். ஜுரத்தைப் போக்க மருந்திடுகிறார் மருத்துவர், ஜுரம் குறைகிறது — மறைகிறது — முகம் மலருகிறது. ஜுரம் போய்விட்டது வைத்தியரே, ஆனால் கைகால் பிடிப்பும், மார்புவலியும் போகக் காணோம். மேலும் ஏதோ ஓர் வகை புது விதமான அலுப்பும் ஏற்பட்டிருக்கிறது, என்று கந்தசாமி கூறுகிறான். ஆமப்பா கந்தசாமி, இப்போது நான் நாலு நாட்கள் கொடுத்த சூரணம் ஜுரத்தைப் போக்க மட்டுந்தான், இனித் தரப் போகும் மருந்தினால்தான், கைகால் பிடிப்பும், மார்பு வலியும்

அலுப்பும் நீங்கும், இரத்த சுத்தி ஏற்படும். புதிய பலம் உண்டாகும் என்று கூறுகிறார். நல்ல மருத்துவர் இதைக் கூறுவார். நல்லறிவுள்ள நோயாளி அதுபோலவே நடப்பார். ஜூரம் என்பது உடலிலே முள் தைத்தது போல, திடீரென உடலுக்குள் புகுந்தது அல்ல, முள்ளை எடுத்து விடுவது போல ஜூர நோயை மட்டும் நீக்கிவிட. ஜூரம் என்பது கூட்டுச் சரக்கு, அடிமைத்தனமும் அதுபோன்றதே. அந்நிய ஆட்சி கடும் ஜூரம் போன்றது. அது நீங்கி விட்டது இப்போது.

விதிக்கு நாம் அடிமைப்பட்டது, அந்நியனுக்கு அடிமைப் பட்டதற்குப் பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பே. விதி நமது பரம்பரை நோய்—பூர்வீகச் சொத்து. ஆஸ்ரமத்திலே பிறந்து, அரண்மனையிலும் குடிசையிலும் சரி சமமாகப் படர்ந்த பழம்பெரும் நோய். ஜொலித்திடும் சாம்ராஜ்யங்களும் மணங்கமழும் கலை நயங்களும், காவியமும்—ஓவியமும், வீரமும்-செல்வமும் மேலோங்கியிருந்த நாட்களிலேயே இந்த நோய், நம்மைப் பிடித்து ஆட்டிப்படைத்தது. ஆனால் புண்ணின் வாடை வெளியே தெரியாதிருக்க பன்னீர்கொண்டு அதனைக் கழுவி புனுகு பூசி, மறைத்திடுதல் போல, நாம், சாம்ராஜ்யச் சிறப்பு, கலையழகு, எனும் பல்வேறு, பூச்சுவேலைகளினால் புண்ணின் கெட்ட வாடையைக் குறைத்துப் பார்த்தோம்—மறைத்துப் பார்த்தோம்—போக்கிட முயற்சிக்கவில்லை.

விதி, கர்மம், வினை, தலையெழுத்து என்று பல்வேறு பெயர்களால் குறிக்கப்படும் இதனை, பழம் வியாதி என்று கூறுவது தவறு; பண்டைய நாட்களிலே, இருந்துவந்த பெரியவர்கள், தவச் சிரேஷ்டர்கள், வேத விற்பன்னர்கள், விதியை நம்பினர்; விதியின் வலிமையையும், அதனை மாற்றிட மானிடனின் சிறுமதி பயன்படாது என்ற உண்மையையும், தத்துவமாகவும், உபமானத்துடனும், கதை வடிவிலும், காவிய உருவிலும் கூறினரே, கசடனே, அவர்கள் கூற்று பொய்யா? அந்த நாளில் அவர்கள் கண்ட தத்துவத்தைத் தகர்க்க உன்னால் ஆகுமா? அதனைச் சந்தேகிப்பது தகுமா? அதை ஒழித்தாக வேண்டும் என்று பேசும் அளவுக்கு உனக்குத்துணிவா? என்று கேட்கத் தோன்றும் பலருக்கு அல்ல—சிலருக்கு. ஆனால் அந்தச் சிலரும் நேரடியாகக் கேளார். பழங்காலத்திலிருந்து விதி எனும் தத்துவம் இருந்த காரணத்தாலேயே அந்தத் தத்துவம் நீக்கப்படமுடியாதது, கூடாதது என்று யாரும் வாதிட முடியாது. கனியும் அழுகுவது காண்கிறோம்—அந்த அழுகிய பழத்திலே பிறகு புழு நெளியவும் காண்கிறோம். மதுரம் தரும் பழமாயிற்றே, மாங்கனியாயிற்றே, நமது தோட்டத்திலே கிடைத்ததாயிற்றே,

இதிலே தெளிவது புழுவாக இருக்க முடியாது; பழத்திலே சுவை இருக்கும்; புழு எப்படி இருக்க முடியும், என்று யாராவது வாதாடுவார்களா? பழம் அழுகுவது போல; மலர் கசங்கி மணத்தை இழந்து பிறகு கெட்ட வாடை கொள்வது போல; தழை சருகு ஆவது போல; கட்டிடங்கள் கலனாகிக் குப்பை மேடு ஆவது போல; பலப்பல தத்துவங்களும், ஏற்பாடுகளும் காலச் சிறையிலே கடந்து கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்திச் செய்வதும், இயற்கையாக ஏற்படும் ஓர் நிகழ்ச்சி. இதனை உணர மறுப்பது உலகை அறியாதார் போக்கு

விதி, ஒரு நோய்; நெடு நாளாக மனித சமுதாயத்தில் இருந்துவருவது. அதன் பிடியும், வேகமும் குறைக்கப்படுவதற்கு மற்ற நாட்டினர் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் அளவையும், திறத்தையும் விடச் சற்று அதிகமான அளவிலும், திறத்திலும் நாம், விதியெனும் நோயைக், குறைக்க அல்ல— வளர்த்திட வேலை செய்து கொண்டிருந்தோம். அதனாலேதான் விதிக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலை இங்கு மிகமிகக் கவலை தரும் அளவுக்கு இருக்கிறது.

கண்முன் நடைபெறும் பல நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கண்டுபிடிக்கத் தெரியாத பருவம் குழந்தைகளுக்கு. ஆனால் காரணம் கண்டுபிடிக்கும் திறமை ஏற்படாவிட்டாலும், சிந்திக்காமலிருப்பதில்லை.

அன்பையும் — அன்னத்தையும் ஒன்றாகக் கலந்து, வானத்திலுள்ள நிலவையும் காட்டிக் குழந்தைகளுக்குத் தாய் சோறிடும்போது குழந்தையும் நிலவைப் பார்க்கிறது. ஏதேதோ எண்ணத்தான் செய்கிறது, மழலை மொழியில் ஏதேதோ சொல்கிறது. ஏதேதோ கேள்விகளைக் கேட்கிறது.

யாரம்மா இவ்வளவு அழகான விளக்கை அவ்வளவு உயரத்திலே ஏற்றி வைத்திருக்கிறார்கள். அந்த ஒரு விளக்கைச் சுற்றி, ஏனம்மா அவ்வளவு சிறு சிறு விளக்குகள் உள்ளன? என்று கேட்கிறது ஒரு குழந்தை.

அம்மா எனக்கு அந்தச் சந்திரனைப் பிடித்துத் தா? நான் பந்தாடவேண்டும் என்று கேட்கிறது இன்னொரு குழந்தை. நிலவையும் பார்த்துவிட்டுத் தன் அன்னையின் திருமுகத்தையும் பார்த்து, இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று யோசிக்கிறது இன்னோர் குழந்தை.

குழந்தை உள்ளத்திற் குமுறி எழும் எண்ணங்கள் வேடிக்கையானவை — ஆனால் ஆராய்ச்சி முடிவுகளல்ல; ஆசை அலைகள் அவை. மனித சமுதாயத்தில் குழந்தைப் பருவத்திலேயும் இதே போலத் தான் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும், இயற்கை காட்சிக்கும் ஏதோ ஒரு வகையான காரணம் தேடி அலைந்து பலப் பல விசித்திரமான காரணங்களை - விளக்கங்களை மனித

சமுதாயம் எண்ணிற்று—பேசிற்று—நம்பலாயிற்று.

மனித சமுதாயத்தில் பாலப் பருவத்தில் கிடைத்த பல உண்மைகள் இன்று உண்மைகள் என்று உலகினரால் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. பர்மாவை ஜப்பானியர் பிடித்தபோது அவர்கள் வெளியிட்ட நோட்டுகள் எப்படி இன்று பர்மாவில் செல்லுபடியாகாதோ அதுபோலச் செல்லுபடியாகாத நோட்டுகளைச் சேகரித்து வைத்து, சிறுபிள்ளைகள் விளையாடினால் கேடு அதிகம் இல்லை; ஆனால் அந்த நோட்டுகள் செல்லுபடியாக வேண்டும் என்று வாதாடினால் நாட்டுக்கு எவ்வளவு பெரிய தொல்லை. அதுபோல மனித சமுதாயத்தின் சிறுபிள்ளைப் பருவ எண்ணங்களை—ஏற்பாடுகளை—தத்துவங்களை—விளக்கங்களை இன்னும் நம்பித்தான் தீரவேண்டும், அவைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்று வாதிடுவது எவ்வளவு பெரிய கேடு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எதிர்பார்த்ததற்கு நேர்மாறான நிகழ்ச்சிகளைக் காணும்போது, சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் துவக்கப்பட்ட காரியம், நல்ல முயற்சிக்குப் பிறகும் முறிகிற போது, போட்ட கணக்குப் பொய்யாகும்போது, விதைத்தது முளைக்காதபோது, நண்பர்களிடமிருந்து பகை கிளம்பும் போது, ஓவியம் தீட்டுகையில் வண்ணக் கலயம் உடையும் போது, வீணையை மீட்டும் போது நரம்பு அறுந்து, அறுந்த நரம்பு வேகமாகக் கண்ணில் பாயும்போது, இது போன்ற திகைப்பூட்டும் சம்பவங்கள்—மனதைக் குழப்பும் நிகழ்ச்சிகள் நேரிடும் போது, மனம் ஒடியுமோ என்று மருளும்போது ஏதேனும் ஓர் வகை ஆறுதல் தேவைப்படுகிறது. அப்போது விதி எனும் தத்துவம் வெற்றிச் சிரிப்புடன் மக்கள் உள்ளத்திலே குடிபுகுந்து கொள்ளுகிறது. குடிபுகுந்த பிறகு விதி தான் எஜமானன், அந்த எண்ணத்துக்கு இடமளித்தவன் அதற்கு அடிமை. அடிமையை ஆட்டிப் படைக்கிறது விதி. பிறகு தெய்வீக முலாம் பூசிவிட்டனர் விதியென்ற தத்துவத்திற்கு. ஆகவேதான், அதனை உதறித்தள்ள நெஞ்சுஉரம் பலருக்கு வருவதில்லை.

மேலுலகத்தில் ஏதோ ஓர் பெரும் ஏடு இருப்பது போலவும், அதிலே பூலோகவாசி ஒவ்வொருவரின் வாழ்க்கைக் குறிப்பும் முன்கூட்டியே எழுதிவைக்கப் பட்டிருப்பது போலவும், அதன்படித்தான் சகலகாரியமும் நடைபெறும் என்றும் கூறப்பட்டது. பலவழிகளில் இந்த நம்பிக்கையைப் பலப்படுத்தினர். எவ்வளவு பெரிய கேடு செய்கிறோம் என்பதை அறிந்தார்களோ இல்லையோ, மனிதன் மனதை முடமாக்குறோம்; கருத்தைக் குருடாக்குகிறோம் என்று தெரிந்து செய்திருந்தால், அவர்கள் மாபெரும் துரோகிகள்; தெரியாமல் செய்திருந்தால் ஏமாளிகள். கபட

ராயினும், கசடராயினும் அவர்கள் கட்டிவிட்ட கதைகள், இந்நாட்டு மக்களைத் தலைமுறை தலைமுறையாகக் கெடுத்து விட்டது--தன்னம்பிக்கையைத் தகர்த்து எறிந்தது—முயற்சிகளை முறியடித்தது—முற்போக்கைக் கெடுத்தது.

அதோ ஓர் அழகு மங்கை; வயது பதினெட்டு; ஐயோ என்று அலறுகிறாள், அவளைத் தொட்டுத் தாலி கட்டிய கிழவன் இறந்ததால், வாழ்வு கருகிற்றே என்ற வேதனையால்.

விதியடி அம்மா விதி—பலர் கூறுகிறார்கள். எரியும் கொப்பரையாக உள்ள அவள் மனதிலே எண்ணெய் ஊற்றுகின்றார்கள். இந்தக் கிழவனுக்கு—சாக்காட்டை நோக்கி நடக்கும் வயோதிகனுக்கு—என்னைத் தாரமாக்கினீர்களே—தர்மமா, என்று துணிந்து கேட்டுவிடுகிறாள் ஓர் அறிவழகி.

அது உன் எழுத்தடியம்மா எழுத்து—நீ வந்த வழி—உனக்கு உள்ள விதி—உடனே பதில் கிடைத்து விடுகிறது.

எலும்பு முறியப் பாடுபடுகிறேனே, ஏழையாக வதைகிறேனே என்று ஓலமிடுகிறான் பாட்டாளி—நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதான்—உடனே பதில் கிடைத்து விடுகிறது.

கடைவீதிக்குச் செல்கிறோம், கையில் பணத்துடன் கடைவீதி போய்ச் சேருவதற்குள், கடைவீதியிலே உள்ள பண்டங்களே மாறிவிடக்கூடும், விலையும் வித்யாசமாகி விடக்கூடும், அது மட்டுமல்ல, எடுத்துச் செல்லும் காசும் செல்லுபடியாகாததாகி விடலாம். குறையக்கூடும், மறையக்கூடும், இதிலே எது—எப்போது நேரிடும் என்று தெரிந்து கொள்ள முடியாது, இதில் எதையும் தடுக்கவும் முடியாது என்றால் கடைவீதி செல்பவனின் கருத்தும் காரியமும் என்ன ஆகும்? இந்நாட்டு மக்களில், பெரும்பான்மையினருக்கு, வாழ்க்கைச் சந்தை இது போலவே அமைந்து விடுகிறது.

முயற்சி பலனளிக்காத போது, திட்டம் தகர்ந்து விடும் போது நோக்கம் ஈடேறாத போது, ஏன் முயற்சி பலிக்கவில்லை, திட்டம் ஏன் வெற்றி பெறவில்லை, நமது கணக்கு ஏன் பொய்த்துப் போயிற்று, காரணம் என்ன என்று, கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்ய, புதிய முயற்சி செய்ய, திருத்தம் தர, இந்த விதி எனும் தத்துவம், மனிதனை விடுவதில்லை. எவ்வளவோ பாடுபட்டோம், கடைசியில் பலிக்கவில்லை—நமது விதி அப்படி என்று எண்ணி ஏங்க வைக்கிறது. அவனுடைய திறமையும் தூங்க ஆரம்பிக்கிறது. துயரம் எழுகிறது, அப்போது துதிக்கிறான். ஏக்கம் பிறக்கிறது, அப்போது புராண இதிகாச ஏடுகளிலிருந்து அவனுக்குக் கதைகள் படித்துப் காட்டப்படுகிறது.

இந்த விதியை வெல்ல, அல்லது முன் கூட்டியே தெரிந்து கொள்ள, மாற்ற, திருத்த, ஏதாவது செய்யலாமா என்ற ஆசை கிளம்பலாயிற்று.

அதனைப் பூசாரிகள், சோதிடர்கள், மாந்தரீகர்கள் என்போர் பயன்படுத்திக் கொண்டனர் அவர்கள் வாழ்வு நடாத்த. பிறகு அவர்கள் அந்த வாழ்விலே கிடைக்கும் சுகத்தை இழக்க மனமின்றி விதியை மக்கள் நம்புவதற்காக, மேலும் மேலும் கற்பனைகளைக் கதைகளைக் கட்டி விடலாயினர்—கடவுளின் மீது ஆணையிட்டு எதையும் பேசினர்—ஏழை ஏமாளியானான்.

விதியை மதியால் வெல்லலாம் என்று வீம்பு பேசும் மனிதர்காள்! நான்முகன் ஒரு சிரம் இழந்தது எதனால்? விதியால். அவர் நான்மறை தந்தவராயிற்றே அவரால் முடிந்ததா விதியைத் தடுக்க? சிரத்தைக் கொய்த சிவனாராலாவது முடிந்ததா விதியைத் தடுக்க? அவர் பிச்சை எடுத்தார், கையில் சிரத்தைக் கொண்டு—என்று கதைகள் கட்டினர். வழுக்கு நிலத்தில் தவறிக் கீழே விழுந்து கால் முறிந்தவன், மீண்டும் அந்த வழுக்கு நிலத்திலே நடக்க ஆரம்பித்து மறுபடியும் மறுபடியும் விழுவது போலாயினர் பாமர மக்கள்.

ஆனால் உலகிலே, மிகமிகச் சிறு தொகையினர்—பேரறிஞர்கள்—சீர்திருத்தக் கருத்தினர்—உலகைத் திருத்தும் உத்தமர்கள், சித்தத்தைச் சிறையிட மறுத்தனர், சிந்திக்கத் தொடங்கினர், புத்தம் புதிய உண்மைகளைக் கண்டறிந்து கூறினர். உலகின் உருவம், இயல்பு, எண்ணம், ஏற்பாடு எல்லாம் மாற ஆரம்பித்தன. தட்டை உலகு உருண்டை ஆயிற்று. மேல்ஏழு—கீழ்ஏழு லோகம் என்பது வெறும் கட்டுக்கதை என்பது விளங்கலாயிற்று. சூரிய—சந்திர தேவன், இந்திரதேவன், வாயு வருணன் அக்கினி என்ற தேவர்களெல்லாம் குடி இருந்து கொண்டு, குதூகலமாக ஆடிப்பாடிக் கொண்டு, ஆரணங்குகளாம் அரம்பை ஊர்வசி ஆகியோர் புடை சூழ வீற்றிருக்கிறார்கள் என்பதெல்லாம், சுவை மிக்க கற்பனைகள் என்பது தெரியலாயிற்று. கண்ணுக்குத் தெரியாதிருந்த அமெரிக்கா போன்ற நாடுகளைக் கண்டுபிடிக்கவும், கருத்துக்கு எட்டாதிருந்த கருவிகளை அமைக்கவும் முடிந்தது. பஞ்சாங்கத்துக்குப் பக்கத்திலே அட்லாஸ் வந்து சேர்ந்தது, வெற்றிச் சிரிப்புடன்.

உலக அறிஞர்கள் பரப்பிய அறிவொளியினால், பழமை மூடுபனி விலக ஆரம்பித்துவிட்டது. நாட்டின் நிலையை மாற்றியமைக்கும் மாவீரர்கள், சமுதாயத்தின் நிலையைத் திருத்தும் தீரர்கள், அறிவுப் புரட்சியை நடத்திக் காட்டும் ஆற்றல் மிக்கோர் தோன்றலாயினர். "அன்று எழுதிய எழுத்து" பலப்பல நாடுகளிலே அழித்தெழுதப்பட்டது—அயனால் அல்ல; ஆற்றல் மிக்க வீரர்களால். பிறகு இங்கும், என்று தீருமோ? விதிக்கு அடிமைத்தனம், என்ற விசாரமாவது எப்படித் தோன்றாமலிருக்கலாம்.

விதிக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலை நிச்சயமாக நாம்

எதிர்பார்ப்பதைவிட, விரைவில் ஒழியத்தான் போகிறது—அசைவும் ஆட்டமும் கொடுத்து விட்டது.

இப்போதுமட்டும், இந்நாட்டு எழுத்தாளரும் பேச்சாளரும், இசைவாணரும், படப்பிடிப்பாளரும்—அறிவுத் துறைக்குத் துரோகம் இழைக்காமல், மீண்டும் மீண்டும் விதிக்கு அடிமையாகும் வேதனைக்கு எரு இடாமல், அதற்கு ஆதாரமாக உள்ள கற்பனைக் கதைகளைக் கருத்துக்களைப் பரப்பாமல்—விதிபற்றிய எண்ணத்தை விட வேண்டிய அவசியத்தை விதிக்கு அடிமைப்படாமல் இருந்தால் எவ்வளவு நலன் நாட்டுக்குக் கிடைக்குமென்பதை, விதியை நம்பி, ஏழை எப்படி ஏமாளியாகிறான் என்பதை எத்தன் எப்படி வஞ்சிக்கிறான் என்பதை, விளக்கத் தமது அறிவையும் திறமையையும் ஒரு பத்துவருஷ காலத்துக்குப் பயன்படுத்த முன் வந்தால்—நிச்சயமாக, உறுதியாகக் கூறலாம் விதிக்கு அடிமைத்தனம் ஒழிந்தே தீரும் என்று.

விதி என்றும் சப்மரைன், டார்ப்பிடோ, விமானம் விஷப் புகை வெடிகுண்டு இவைகளைப் போன்ற படைக்கலங்களைக் கொண்டு இல்லை. அப்படிப்பட்ட படைக்கலங்களைக் கொண்ட ஒரு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபட்ட நமக்கு, இந்த நாளில் சாதாரண ஏடுகள்—அதிலும் காலமெனும் செல்லரித்த ஏடுகள், அவைகளிலே காணப்படும் கருத்துக்குக் குழப்பம் தரும் கற்பனைகள், அந்தக் கற்பனைகளை நம்பிப் பிழைக்கும் கபடர்கள். ஆகிய இவ்வளவு படைக கருவிகளை மட்டுமே கொண்டுள்ள விதிக்கு அடிமைத்தனம் என்னும் பழமையை முறியடிப்பது முடியாத காரியமல்ல; ஒரு பலமான தாக்குதல்—அறிவுப் பணி புரியும் பலரும் கொண்ட ஒரு கூட்டுப் படையினால் ஒரு அறப்போர்—ஒரு தன்னலமற்ற முயற்சி எடுத்தால் நமது நாட்களிலேயே மக்கள் வாழ்விலே நஞ்சு கலக்கும், இந்த அடிமைத்தளையை வீழ்த்த முடியும்—புதுவாழ்வு மலர முடியும். செய்வோமா?

[திருச்சி வானொலி நிலையத்தார் அனுமதி பெற்றது.]

விரைவில் வெளிவருகின்றன!

**கலையும் வாழ்வும்**

ஆசிரியர்: க. அன்பழகன்

**பொற்சிலை**

ஆசிரியர்: இராதாமணாளன்

**புதுவாழ்வு பதிப்பகம்**

10-வேளாளர் தெரு, புரசை, சென்னை-7

# சிவப்பேறும் சீனா

[அப்துல் அஜீஸ்]

பூர்ண சுதந்திரமுள்ள ஒரு நாடு, உலகத்தின் வளர்ச்சிக்கு வளப்பமளித்த ஒரு உயர்ந்த நாகரீகத்தைத் தன்னகத்தே கொண்ட ஒரு நாடு, தன்னிடத்தே ஒரு உள்நாட்டுப் போரை—இரு நாடுகளுக்கிடையே நடத்தப்படும் யுத்தத்தைப் போன்ற ஒரு உள்நாட்டுப் போரை—நடத்தி வந்தால், அதில் ஏதேனும் ஒரு சிறப்பு இருக்காமலிருக்க முடியாது. இன்று நேற்றல்ல, இப்போர் ஆரம்பித்த காலம். இருபது ஆண்டுகளுக்கு மேல், 50 கோடி மக்கள் கொண்ட ஒரு தலைமுறையே அந்தப் போரில் ஈடுபட்டு வருகிறது. இவ்வளவு மக்கள் இவ்வளவு காலம் இவ்வளவு பெரியதொரு போரை நடத்த வேண்டிய அவசியம் ஏன், எப்படி ஏற்பட்டது?

நாமிருக்கும் நாட்டிற்குப் பக்கத்திலுள்ள சீனாவின் தற்போதைய நிலைதான் மேலே சொல்லப்பட்டது. நமக்கும் இந்தப் போருக்கும் என்ன சம்பந்தம் என்ற எண்ணத்தில் இருந்துவிட முடியாது; அதை நெருங்கிப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நெருங்கிப் பார்ப்பதோடு மாத்திரமல்ல அதிலிருந்து உணர வேண்டிய பாடங்கள் பலப்பல: அந்தப் பாடங்களில் முக்கியமாக விளங்குவது புரட்சியின் தன்மையேயாகும்.

பிரான்சு நாட்டுப் புரட்சியை அறிந்துள்ளோம். ரஷ்யாவின் புனரமைப்பைப் புரிந்து கொண்டுள்ளோம். சீனா சிவப்பேறியிருக்கும் தன்மையைச் சீரிய சிந்தனையுடன் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

சீனாவில் அப்போதிருந்தே இரு கட்சிகள் அதன் ஆட்சிமனையிலே குடியிருந்து வந்திருக்கின்றன. ஒரே இல்லத்தில் கோமிண்டாங் என்ற தேசியக் கட்சியும் கம்யூனிஸ்டு கட்சியும் ஒன்றுபட்டு வாழ்ந்ததற்குக் காரணம், சீனக் குடியரசின் தந்தையெனப் புகழ்பெற்ற சன்யாட்சன்னின் சிறந்த அரசியல் திறமையேயாகும். இப்படிச் சன்யாட்சன்னின் தந்திரத்தால் கம்யூனிஸ்டு—கோமிண்டாங் கூட்டுறவு, கூட்டு வாழ்வு ஏற்பட்டது. ஆனால் அது ஆரம்பித்த அன்று முதலே இரண்டாகத்தான் வாழ்ந்தது என்று சொல்ல வேண்டும். அதற்குக் காரணம், கோமிண்டாங்கில் பெரும்பான்மையாக வலதுசாரிகள் இருந்ததும், கம்யூனிஸ்டு கட்சியில் புரட்சி

வாதிகளிருந்ததுமேயாகும். கம்யூனிஸ்டு கட்சி நாட்டு நலனைக் கருத்திலிருத்திக் கூட்டுக்கு இசைந்தது. இசைந்த ஒன்றைத் தன்னாதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர கோமிண்டாங் சூழ்ச்சி சதி முதலிய வேலைகளில் இறங்கவே, இயற்கையான முதலாளி வர்க்கத்தின் வர்க்கக் குணம் கட்டுக்கடங்காமல் வளர்ச்சியுறவே புரட்சி வாதிகளான கம்யூனிஸ்டுகள் கோமிண்டாங் கூட்டுறவினின்றும் வெளியேறினர். ஒரு படையை வைத்துக்கொண்டிருக்க தங்களுக்கு இருந்த உரிமையைப் பயன்படுத்தி, தெற்கே ஒரு தனி அரசாங்கத்தையே தோற்றுவித்தனர். தோற்றுவிக்கையில் சீனா முழுவதையும் தம்முடைய பொருளாதார அரசியல் குடையின் கீழ்க்கொண்டுவர வேண்டுமென்று அவர்கள் எண்ணவில்லை. எண்ணமிருந்தும் கூட, சீனாவின் அரசியல், பொருளாதார நிலை, அம்மாதிரி ஒரு அமைப்பிற்கு இழுத்துச் சென்றதில் வியப்பில்லை, அரசியல் பொருளாதாரத் தன்மைகளை உணருங்காலை.

முதலாளி வர்க்கம், தன்னுடைய வர்க்க நலனை நன்கு பாதுகாத்துக் கொள்ளச் சட்டம் கெடுபிடி முதலியவற்றைச் சாதாரண மக்கள் மீது திணிக்கும்போது, அது தன்னுடைய சவக்குழியைத் தோண்டிக் கொள்கிறதென்று மார்க்ஸ் அறுதியிட்டுக் கூறிச் சென்றார். மார்க்ஸின் முன்னறிவிப்பு, முதலாளி வர்க்கத்திற்கு ஒரு அபாய அறிவிப்பு. இதை யுணர மறுத்த முதலாளி வர்க்கத்தின் பீடமான சீன கோமிண்டாங் (இடதுசாரிகள் சிலர் இருந்தாலும் குரலில்லாமல் இருந்தார்கள்) போரிட்டுத் தம் வர்க்க நலத்தை நிலைநிறுத்த முனைந்தது. புரட்சியாளரைக் கொசுக்கள் என்றே நினைத்தது. ஆனால் மக்கள் புரட்சி சக்தியின் கோடாரி அங்கிருப்பதை உணர முடியாமற் செய்தது பாராளும் பேராசை. பாமரனிடம் தன்மானம் இல்லை என்ற அகம்பாவம் பக்கவாத்தியமாக அமைந்தது.

ஆரம்பித்தது உள்நாட்டுக் கலகம். சிதறிச் சிதறி, அங்கும் இங்குமாக நடத்தப்பட்ட போர், கம்யூனிஸ்டுகளுக்கு வெற்றியளித்தது. வெற்றியளித்துக் கொண்டேயிருக்கவில்லை. கம்யூனிஸ்டுகளைப் பின் வாங்கவும் செய்தது. கம்யூனிஸ்டுகள் ஒரு நேரத்தில் ஒரு வருட காலமாகப் பின்வாங்கிக் கொண்டே போக வேண்டி நேர்ந்தது. கிட்டத்தட்ட 6000 மைல்கள் பின்வாங்கியதுடன் திசையையும் மாற்றிக் கொண்டே போக வேண்டி நேர்ந்தது. இராணுவ நிபுணர்கள் இந்த மகத்தான பின் வாங்குதலைப் போராட்டத் தந்திரத்திலேயே மிகச் சிறந்ததென்று எழுதியுள்ளார்கள். அந்தப் பின்வாங்குதலைச் சீனக் கம்யூனிஸ்டுகள் நடத்துகையில், அவர்கள் அடைந்த கஷ்டநஷ்டங்கள்

சரித்திரத்திலேயே முக்கிய இடம்பெற வேண்டியதாகும். எத்தனை இளைஞர்களின் உயிர்! எத்தனை வீரர்களின் இரத்தம்! ஒவ்வொரு அடிச்சுவடும் புத்தகத்தில் ஒவ்வொரு பக்கமாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

கம்யூனிஸ்டுகளுக்கு இவ்வெற்றி கிடைத்ததின் மர்மம் என்ன? சீன தேசீய சர்க்கார் கூறியது போல ரஷ்யாவின் உதவி கிடைத்ததாலா? இல்லவே இல்லை. ரஷ்யாவின் உதவி இல்லையென்பதற்குச் செம்படையின் தளங்களுக்குச் சென்று திரும்பிய அமெரிக்க எழுத்தாளர்களே சான்று பகருகின்றனர். பின்னே எப்படி? மக்களின் சக்தி. இங்கு அதைப் பற்றி விரிவாக எழுத இடமில்லை என்றாலும் இரண்டொன்று கூறலாம்.

முதலாவது, சீனா இந்தியாவைப் போன்றே பெருவாரியாக ஒரு விவசாய நாடு. பிரபுக்களின் சுரண்டலில் நசுங்கி உயிரிழந்த விவசாயிகள் நிரம்பிய நாடு. இந்த விவசாயிகளுக்கு உயிர் கொடுத்தது கம்யூனிஸ்டுகளின் நிலப் புனரமைப்புத் திட்டமே. 'உழைப்பவர்களுக்கும் உழுபவர்களுக்குமே நிலம்' என்ற பெரிய பொருளாதார அடிப்படையில் புனரமைப்புத் திட்டம் உடனடியாகக் கொண்டு வரப்பட்டது. காலத்தின் அளவு கோலாகக் கூன் விழுந்து கிடந்த விவசாயி புத்துணர்ச்சி பெற்றான். முதுகெலும்பில்லாது குனிந்து நடந்த விவசாயி புதுவாழ்வு நடத்த ஆரம்பித்தான். தன் நிலத்திற்கு ஆபத்து வரும்போது, கையில் ஆயுதமில்லாவிட்டாலும், தன்னுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டிய ஒரே எண்ணங் கொண்டு ஆபத்தை எதிர்த்து நின்றான். இது மிகமிக முக்கியமான ஓர் அம்சம்.

யாரோ ஒருவன்—கட்டளையிட்டபடிக் குனிந்து நடக்க வேண்டிய நிலையிருந்தவனுக்குத் தனக்குத் தானே கட்டளையிட்டு, கட்டளையைக் கடமையென்று ஆற்ற முன்வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது அரசியல் முறையில் கிடைத்த ஜனநாயக மாற்றம்.

பழமைகள் ஒழிந்தன; கல்வி நிலை உயர்ந்தது. 80-சதவிகிதத்தினர் புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட ரோமன் லிபியில் கல்வி கற்றனர். குருடனாயிருந்தவனுக்கு ஒளி கிடைத்தது. உலகம் பரந்து கிடப்பதைப் பார்த்தான். அவ்வுலகத்தைத் தன்னுடைய சக்தியால் திருத்தியமைக்கலா மென்றும் உணர்ந்தான். கையில் எடுத்தான் ஆயுதத்தை, புறப்பட்டான் வாழ்க்கைப் போராட்டத்தை நடத்த. புதுவாழ்வைக் குலைக்க வரும் பகைவன் யாராயிருந்தாலும் மண்டையில் ஓங்கி அடித்து வீழ்த்தினான்.

சுதந்திர சக்தி தன் நரம்புகளில் புதிய இரத்தத்தைப் பாய்ச்சவே, அவனுக்குப் புது வழிகள் தென்பட்டன.

வெற்றிக்கு மற்றொரு காரணம் கம்யூனிஸ்டுகளின் கொரில்லாப் போர் முறையா

கும். கம்யூனிஸ்டுகளின் வெற்றிக்குக் கொரில்லாப் போர் முறைதான் காரணமென்று சொன்னாலும் மிகையாகாது.

நவீன போர்க்கருவிகளின்றி, நன்கு பயிற்சி பெற்ற ஒரு படையை எதிர்த்துப் போராடி வெற்றி ஈட்டுவதற்கு இந்தக் கொரில்லா முறைதான் காரணம். கம்யூனிஸ்டுகளிடம் இப்போதிருக்கும் ஆயுதங்களெல்லாம் அநேகமாகத் தேசியப் படையிடமிருந்து அபகரித்துக் கொண்டவைகளேயாகும். அத்தனையும் அமெரிக்க ஆயுதங்கள்; அமெரிக்காவின் உதவித் திட்டத்தின்படி, சீன தேசியப் படைகளுக்குக் கிடைத்தவை.

இனி, தேசியக் கட்சியில் இவ்வெற்றிக்கு ஆக்கமளித்த காரணங்களைப் பார்ப்போம்.

சீன தேசிய அரசியல் வானிலே ஒளிபெற்று விளங்கிக்கொண்டேயிருப்பவர் சியாங்கேஷேக். இவர் தனது சூழ்ச்சித் திறனால் அமெரிக்க ஆதரவுடன் தன்னுடைய ஆதிக்கம் அழிந்து போகாமல் பாதுகாத்து வருகிறார். ஒரு அதிகாரி உயர்ந்து வருகிறானென்றால் சியாங்குக்குப் பிடித்து விடும் பயம், எங்கு தன்னுடைய பதவிக்கு ஆபத்தோ என்று. உடனே அவரை மாற்ற உத்திரவு பிறக்கும்! அவநம்பிக்கையே சியாங்கேயின் அரசியல் கட்டுக்கோப்பில் அஸ்திவாரமாக அமைய நேரிட்டது! இதன் காரணமாகவே சீன நிர்வாகம் 'ஊழலுக்குப்' பெருமை வாய்ந்ததாயிற்று. முற்போக்கு சக்திகள், இளைஞர்கள், மாணவர்கள், புத்துலகில் புதுவாழ்வு நடத்தத் துடிதுடிக்கும் புரட்சி மனப்பான்மையினர் ஆகியோரின் மனதில் கசப்பு தோன்றியது. கசப்பு கசப்பாக நின்றுவிடவில்லை— வெறுப்பாக மாறிற்று. வெறுப்பும், அகத்தில் மண்டிக் கிடந்த புரட்சி நெருப்பும் ஒன்று சேர்ந்து உந்தவே கம்யூனிஸ்டுகளுடன் போய்ச் சேர்ந்து கொண்டனர். சாதாரண கிராம அதிகாரியிலிருந்து பெரிய பெரிய படைத்தலைவர்கள் வரையில் இந்த இடமாற்றம் நடைபெற்றது.

இன்னும் பொருளாதாரத் துறையிலோ பணவீக்கம் பெருகிக் கொண்டே போயிற்று. ஒரு அமெரிக்கன் டாலருக்கு லட்சக்கணக்கில் சீன டாலர்கள் கொடுக்க வேண்டியதாயிற்று. சாமானிய மனிதன் கசக்கிப் பிழியப்பட்டான், இரத்தச் சாறு தரையில் வடிந்தது. பாட்டாளி வர்க்கம் இதைப் பார்த்துக் கொண்டாயிருக்கும்? நேரடி நடவடிக்கை, வேலை நிறுத்தம் எல்லாம் படையெடுத்தன. அரசாங்கத்தின் நிர்வாகம் செல்லரிக்க ஆரம்பித்தது.

இதுவும் கம்யூனிஸ்டுகளின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாயிற்று. அமெரிக்காவின் உதவியைத் தேடி திருமதி சியாங்கேஷேக் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். அமெரிக்க உதவி கிடைத்தாலாவது சியாங் சர்க்கார் வெற்றி பெறுமா? ஆ—

டங் கண்டுவிட்ட தேசிய சர்க்கார் அசையாது வீழாது நின்று விடுமா? இந்தக் கேள்விக்குப் பதில்காண நாம் வேறெங்கும் போகவேண்டியதில்லை. முதலாளி வர்க்கத்தின் பணியாளான 'ராய்ட்டர்' செய்திகளே இதற்குப் பதிலளித்துவிடும்.

அரசாங்கப் படைக்கு வெற்றிகள் கிடைத்திருப்பதாகச் செய்தியை ஆரம்பித்து, சியாங்கே ஷேக் தம்பதிகளின் 'அமெரிக்க பூஜை'யின் விவரமளித்து ட்ரூமன் — மார்ஷல் மந்திராலோசனையைத் தெரிவித்து கம்யூனிஸ்டுகள் பின்வாங்குகின்றனர் என்றும் ஒரு 'டோஸ்' கொடுத்துவிட்டு, அதே மூச்சில், அதே எடுப்பில் அயல்நாட்டினர், குறிப்பாகப் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் சீனுவிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் மென்று விழுங்கிய வண்ணம் தெரிவிக்கிறது. மேலும் அமெரிக்கா எவ்வளவு தான் உதவி செய்தாலும், ஆட்டங்கண்டு விட்ட சியாங் சர்க்கார் இனிமேல் நிற்கும் சக்தியைக் கூட மீட்டுக் கொள்வது கடின மாத்திரமல்ல, முடியாத காரியம் "என்றும் செய்தி வருகிறது. இதைத் துருவி ஆராய்கையில் உண்மையை ஒருவாறு உணரலாம். என்ன உதவி செய்தாலும் இனிமேல் சீனுவைக் கம்யூனிஸ்டுகளின் பிடியிலிருந்து மீட்பது கஷ்டம். இது ராய்ட்டர் செய்தி ஸ்தாபனமே வெளியிடும் உண்மை.

ஆகவே, மேற்கூறிய பல காரணங்களால், சீனுவில் கம்யூனிஸ்டுகள் வெற்றியடைவது திண்ணம். இந்த உறுதியுடன் இதனை விட்டு, உலக அரங்கத்தில், இப்போராட்டத்தின் விளைவைக் காண முயல்வோம்.

சீனுவில் நடக்கும் இந்தப் போர் வெறும் கம்யூனிஸ்டு-தேசீயப் போரென்று நாம் சொன்னால் அது நமது அரசியல் தெளிவின்மையைத் தான் காட்டும்; அது மாத்திரமல்ல முதலாளி வர்க்கத்தின் இசைக்கு மயங்கிவிட்டவர்களுமாவோம். உண்மையில் அது கம்யூனிஸ்டு—தேசீய சர்க்கார் போராட்டமாவென்று எண்ணிப் பாருங்கள்.

புரட்சியின் சங்கொலி முதலில் கேட்டது பிரான்சில். முதலாளி வர்க்கத்தைத் தொழிலாளி வர்க்கம் அமைப்பு ஏதுமின்றி எதிர்த்தது அதுதான் முதல் தடவை. புரட்சிக்கு வித்தூன்றிய சிறப்பு பிரான்சின் பாட்டாளி மக்களையே சாரும். அதில் பூத்த மலர்களும், கனிகளுந்தான் மற்ற புரட்சிகள்.

'சுதந்திரம்' ஒரு சிலரின் ஏக போக உரிமையைப் பலரின்பட்டினியால் பாதுகாத்துக் கொள்வதுதான் என்று எண்ணி ஒரு நாட்டின் ஆட்சியாளர் நடக்கும் போது, உரிமையில்லாது நசுக்கப்பட்ட பலர் (ஒரு வேளை சிலராகக்கூட இருக்கலாம்) அந்தச் சிலரை (ஆட்சியாளரை) விரட்டி, ஏழை மக்களின் ஆட்சியைக் கொண்டுவர முயலுவது இயற்கை. இதற்கு விதி விலக்கில்லை. இந்த ஆட்சி மாற்றம் இருவகையில் நடை

பெறலாம். ஒன்று அமைதியான முறை; மற்றொன்று அழிவுப் போர் முறை. இதில் முக்கியமாக, சிறப்பாக, இருக்க வேண்டிய ஒரு பண்பு உண்டு. அதாவது, ஆட்சியை மேற்கொள்ளப் போகிறவர்கள், புரட்சி சக்தியின் விழிப்பை உணர்பவர்களாயிருப்பதோடு, ஆட்சியை நடத்தவும் தயாராயிருக்க வேண்டும். "தயாரா யிருக்க வேண்டும்" என்பதைச் சற்று கவனிக்க வேண்டும்.

பிரான்சில் புரட்சி தோல்வியடைந்ததற்குக் காரணம் விழிப்பு இருந்தும் ஆட்சி செய்யத் தயார் இன்மையே யாகும். ரஷ்யாவில் விழிப்புடன் தயாராயுமிருந்தனர். எனவே புரட்சி பலனளித்தது.

இன்றைய சீனாவில், கம்யூனிஸ்டுகளின் வசமுள்ள பகுதிகளில், விழிப்பும், தயாரும் சரிவர இருக்கின்றன. ஆகவேதான் எவ்வித ஐயமுமின்றி, கம்யூனிஸ்டுகள் வெற்றி பெறுவார்களென்று கருத வேண்டியுள்ளது.

தொழிலாளர் தயாராயிருக்க வேண்டும், ஆட்சியை நடத்த. இந்த அடிப்படையில் நாம் சீனப்போரை நோக்குமிடத்து, அது தொழிலாளி—முதலாளியின் வர்க்கப் போராட்டமாகவே காட்சியளிக்கிறது.

ஆசியாவின் வருங்காலத்தைச் சீனாதான் நிர்ணயிக்கப் போகிறது. சீனாவில் கம்யூனிஸ்டுகளின் வெற்றி, ஆசியாவிலேயே புரட்சி சக்திகளின் முதல் வெற்றியாகும். அந்த வெற்றி ஆசியாவை மாத்திரமன்றி உலகத்தின் இன்றைய அரசியல் கட்டுக்கோப்பையே ஒருவாறு மாற்றி அமைத்துவிடும்.

அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்குமிடையே, அதாவது உலகின் இரு முகாம்களுக்கிடையே இருந்துவரும் உறவு முறையில், சீனாவின் மாற்றம் ஒரு மாற்றத்தை உண்டாக்குவது திண்ணம். இந்த மாற்றம் எப்படியிருக்கும் என்று உருவகப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

அம்மாற்றத்தைச் சரிவர உணர வேண்டியது நமது கடமை. உணரத் தவறினால், தோல்விதான் நம்முன் காட்சியளிக்கும். அதை உணர நாம், சீனாவின் மாற்றத்தை நெருங்கிக் கவனித்து வரவேண்டும்.

முற்போக்குக்கும் பிற்போக்குக்கும் உலகில் என்றுமே ஒரு மௌனப் போராட்டம் நடந்துவருகின்றது. சீனாவில், ஆசியாவில் நடக்கும் கொந்தளிப்பு இந்தப் போராட்டத்தின் பிரதிபலிப்பேயாகும்.

எது வெற்றிபெறும்? சீனாவைப் பொருத்தமட்டில், தேசீய சர்க்காரின் ஆட்டமும், தேசீய சர்க்காரின் படைவரிசைகளிலே காணப்படும் கலக்கமும், பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் கொள்ளும் கவலையும், இந்தப் போரில், வெற்றி எந்தப் பக்கமென்பதைக் காணும் கண்ணுடையாருக்குத் தெளிவாகக் காட்டுவனவன்றோ? ★




## நாளங்காடிப் பூதம்

பட்டினப் பாக்கத்துக்கும், மருவூர்ப் பாக்கத்துக்கும் நடுவில் அகன்ற ஓர் இடைவெளி உண்டு.

இந்த இடத்தில் ஏராளமான மரங்கள் வானோங்கி வளர்ந்திருப்பதால் வெய்யில் என்பதே தெரியவில்லை. பெரிய தோப்பைப் போன்ற ஓர் இடம் இது.

நம்மூர்ப் பக்கங்களில் இது போன்ற அகன்ற தோப்பு இருக்குமானால் அவற்றில் சந்தை கூடுகின்றார்கள் அல்லவா? அதைப்போல இவ்விடத்திலும் சந்தைகள் கூடியிருக்கின்றன. காய் கறி முதலான சந்தையில் கிடைக்கும் பொருள்களே இங்கும் காணப்படுகின்றன. சந்தை இரைச்சல் என்பதை இங்குதான் கேட்க முடிகின்றது. பண்டங்களை வாங்குகின்றவர்களும், அவற்றை விற்கின்றவர்களும் செய்யும் ஒலிகள் எல்லாம் சேர்ந்து ஓரே இரைச்சலாய்க் கடல் போல் கேட்கின்றது. தோப்புகளில் உள்ள மரங்களின் அடிப்பாகங்களையே தூண்களாகப் பயன்படுத்திக் கடைகளுக்கு மேல் கொட்டகைகள் கீற்றினால் கட்டியிருக்கின்றார்கள். இவை ஒரே ஒழுங்காக உள்ளன.

இவ்விடத்தில் காலையில் கூடும் கடைகளுக்கு நாளங்காடி என்றும், மாலையில் கூடுகின்ற கடைகளுக்கு அல்லங்காடி என்றும் பெயர்கள் சொல்லப்படுகின்றன. இன்று நம் நாட்டில் உள்ள அதே காட்சிகள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பும் உள்ளன என்றால் வியப்புத் தோன்றுகின்றதல்லவா!

"இருபால் பகுதியின் இடைநிலம் ஆகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலை
கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியில்"

[கடைகால் யாத்த-கடைக்குக் கால்களாகக் கட்டிய, மிடைமரச் சோலை-மரங்கள் நிறைந்த தோப்பு. ஓதை-ஓசை. நிலைஇய-நிலைபெற்ற]

சித்திரைத் திங்கள் தொடங்கியது. சித்திரை விண்மீன் திங்களோடு கூடிய நாளும் வந்து விட்டது. இந்நாள் வந்து விட்டாலே போதும். புகார் நகரத்தில் உள்ள மக்களுக்கு ஒரே மகிழ்ச்சிதான். ஆடவர், மகளிர், முதியவர், இளைஞர் அனைவருக்கும் கொண்டாட்டம் பிறந்துவிடும். வேனில் விழாக் கொண்டாடக் கிளம்பிவிடுவார்கள். இவ்விழா இந்திரனுக்காகச் செய்யப்படும். இந்திரன் மழைகளுக்குத் தலைவன் அல்லவா! கைம்மாறு கருதாமல் மழைபொழிந்து, வளங்களைப் பெருகச் செய்யும் அம் முகில்களைக் கொண்டாடுவது செய் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு ஓர் அறிகுறியாகக் கருதப்பட்டது. ஆதலின் அவைகளின் தலைவன் இந்திரனுக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் இவ்விழா இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடப்படும். பகலும் இரவும் வேறுபாடில்லாமல் மக்கள் கொண்டாட்டத்தில் தம்மை மறந்து மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கிடப்பார்கள்.

அம் முறைப்படி சித்திரைத் திங்களில் இவ்விழா தொடங்கி விட்டார்கள். நாம் இப்போது இடையில் உள்ள நாளங்காடியில் அல்லவா நிற்கின்றோம்? இங்கும் சில இந்திரவிழாத் தொடக்கக் காட்சிகள் காண வேண்டியவை. ஒரு பெரிய பூதத்தின் சிலையின் முன்னால் பல வகைச் சிறப்புகள் செய்து வீரக் குடியிற் பிறந்த மகளிர் பலி ஊட்டுகின்றார்கள்.

இந்தப் பூதத்திற்கு நாளங்காடிப் பூதம் என்று பெயர். முன் ஒரு காலத்தில் சோழநாட்டை 'முசுகுந்தன்' என்னும் மன்னர் மன்னன் ஆண்டு வந்தான். சிறந்த வீரனாகிய அவன் பலவகைகளில் இந்திரனுக்கு உதவி செய்து அவன் இந்திர உலகத்தைக் காத்தான். அதற்குக் கைம்மாறாக இந்தப் பூதத்தை இந்திரன் காவிரிப்பூம்பட்டினத்திற்குக் காவலாக அனுப்பி முசுகுந்தனுக்கு வரும் துன்பங்களைப் போக்கிக் கொண்டிரு என்று கட்டளையிட்டான். அதுபோலவே வந்த பூதம் அந்நாள் முதலாக இந்நாள் வரை மக்கள் தனக்கிடும் பலியை ஏற்றுக் கொண்டு நகரத்திற்கு யாதொரு துன்பமும் வாராமல் காத்து வருகின்றதாம். அதற்குத்தான் இப்போது பலிகள் கொடுக்கப்படுகின்றன, முதன் முதலாக,

"வெற்றிவேல் மன்னற்கு உற்றதை ஒழிக்க என
தேவர் கோமான் ஏவலில் போந்த
காவல் பூதத்துக் கடைகெழு பீடிகை"

[மன்னற்கு-முசுகுந்தனுக்கு. உற்றதை: நேர்ந்த துன்பங்களை. போந்த: வந்த. கடைகெழு பீடிகை: வாயிலின் முன்பு பொருந்திய பலிமேடை]

அவரை துவரை முதலியவற்றால் செய்யப்பட்ட சுண்டல்களும், எள்ளுருண்டைகளும் பலிப் பொருள்களாகப் படைக்கப்படுகின்றன. நிணங் கலந்த சோற்றுப் பள்ளயங்களும் போட்டிருக்கின்றார்கள். இறைச்சி கலந்த சோறே யன்றி பொங்கல் வகைகளும் ஓர் புறம் படைக்கப் பட்டுள்ளன. பூக்களைத் தூவி நறும்புகைகளும் காட்டுகின்றனர். பூசனை நடைபெறுகின்றது. நடைபெற்று முடிந்ததும் பெண்கள் கைகோத்துக் கூத்தாடி மகிழ்கின்றனர். அவர்கள் பாடுகின்ற பாடல் பொருளோடு கூடியனவா யிருக்கின்றன. வாழ்த்துகின்ற வாழ்த்துக்களும் அப்படித்தான். எம் அரசனால் ஆளப்படும் இவ்வுலகம் முழுதும் பசியால் வருந்தாமல், கவலை நீங்கி வசியும் வளனும் சுரக்க! மழை வளம் பெருகுக!" என வாழ்த்துகின்றனர் அவ்வீர மகளிர்.

"புழுக்கலும் நோலையும் விழுக்குஉடை மடையும்
பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து
துணங்கையர் குரவையர் அணங்கெழுந்து ஆடி
பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
மாதர்க் கோலத்து வலவையின் உரைக்கும்
மூதிற் பெண்டிர் ஓதையிற் பெயர"

[புழுக்கல்: வேகவைத்த சுண்டல். நோலை: எள்ளுருண்டை. விழுக்குடை மடை: ஊன் கலந்த சோறு. துணங்கையர்: ஒருவகைக் கூத்தை ஆடியவர்களாய். குரவை என்பதும் அது. அணங்கு எழுந்து ஆடி: தெய்வமாடி. வசி: மழை. வலவை: வலிமை. மூதிற்பெண்டிர்: வீரக் குடியில் பிறந்த பெண்கள்.]

பூசனைகள் முடிந்ததும் இப்பெண்கள் போய்விடுகின்றார்கள். பட்டினப் பாக்கத்திலுள்ள மறக்குடி மக்களும் திரள் திரளாக இவ்விடத்திற்கு வருகின்றார்கள். காவிரிப்பூம் பட்டினத்திற்கே காவலாக இருப்பதல்லவா இப்பூதம். ஆகவே இதற்கு வீரர்களும் பலியிட்டு வணங்குகின்றார்கள். பெரிய பீடத்தின் கீழ் நின்று கூறுகின்ற வீரர்களின் வாழ்த்தும், அரசனை வாழ்த்துவதாகவே உள்ளது.

"மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெற்றிவேல் மன்னற்கு உற்றதை ஒழிக்க எனப்"

[மறம்: ஆண்மை. படைகெழு: ஆயுதம் தாங்கிய. மன்னற்கு: சேரனுக்கு. ஒழிக்க என: நீக்குக என்று.

சில வீரர்கள் செய்யும் செயல்கள் நம்மைத் திடுக்கிடச் செய்கின்றன. அடடா! என்ன கொடுமை! சிலர் தங்களுடைய தலைகளைத் தாங்களே வெட்டிப் பலி மேடையில் வைக்கின்றார்கள். என்ன மூட நம்பிக்கை இவர்களுக்கு! எவ்வளவு கடவுள் பற்று! மன்னன் வாழ்ந்து, நாடு செழிக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் தலைகளைக்கூட பொருட்படுத்தாமல் பனங்காய்களைப் போல நறுக்கிக் கொள்ளும் இவர்களை வேறு எங்காவது நாம் காண முடியுமா! அல்லது வரலாறுகளில்தான் படித்ததுண்டா!

..............................."கருந்தலை
வெற்றி வேந்தன கொற்றம் கொள்கென
நற்பலி பீடிகை நலம்பெற வைத்து"

[*கரும் தலை: வலிமை பொருந்திய தலையை. கொற்றம்: வெற்றி. பலிபீடிகை: பலிமேடை. வைத்து: தலையை மேடைமீது தாங்களே நறுக்கி வைத்து]

இந்த உடல் குலுக்கும் கொடிய காட்சியைப் பக்கத்தில் உள்ளவர்கள் பார்த்ததாகக் கூடத் தெரியவில்லை. பலவகைப் பலிப் பொருள்களைப் படைப்பதிலும், வணங்குவதிலும்தான் அவர்கள் உள்ளம் ஈடுபட்டுக் கிடக்கின்றது. முரசம் முழங்குகின்றது. அதன் ஒலியாலேயே பலிகள் படைக்கப்படுகின்றன. இடியொலிபோல முழங்கும் இம்முரசு, மயிரைப் போக்காத எருதின் தோலினால் மூடப்பட்டிருக்கிறது. இக்காட்சி பார்ப்பதற்கே அச்சத்தைக் கொடுப்பதாகவுள்ளதல்லவா! இதன் பெயர் "மயிர்கண் முரசு" என்னும் கூறப்படுகின்றது. அதாவது புலி ஒன்றைத் தன் கொம்பினால் குத்திக் கொன்ற வலிமைமிகுந்த காளை ஒன்று இறக்குமானால் அதன் தோலை எடுத்து மயிர்களைப் போக்காமல் முரசத்திற்கு அமைப்பார்களாம். இம்முரசமும் பலியூட்டும் காட்சிகளும் என்றுமே நம் கண்களை விட்டு அகல முடியாது.

இம் முரசத்துக்குக் கூட ஆடு முதலியவற்றை அறுத்துப் பலி கொடுக்கின்றார்கள். முரசம் ஒலிக்கும் போது இடி இடிப்பது போலவே தான் இருக்கின்றது. இதன் கண் உள்ள கடவுளே அரசனுக்கும் வீரர்களுக்கும் வெற்றியை உண்டாக்குகின்றது என்ற நம்பிக்கையால் இந் நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. கடவுளருக்குக் கோயில்கள் இருப்பது போலவே இம் முரசத்திற்கும் கோயில்கள் உண்டு. பூசனை நடத்தல், நீராட்டல் முதலிய பலவகை நிகழ்ச்சிகளும் கடவுள்கட்குச் செய்வது போலவே இதற்கும் நடைபெறும்.

"உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து
மயிர்க்கண் முரசமொடு வான் பலி ஊட்டி"

[உருமுக் குரல் முழக்கத்து: இடிபோன்ற முழக்கத்தையுடைய; மயிர்க்கண் : மயிர் நிரம்பிய தோலால் மூடிய கண்ணையுடைய (முரசம்)]

# ★ அங்கும் இங்கும்

நா. சகந்நாதன்

'அமெரிக்காவில் பத்தொன்பது வயது மாணவனொருவன் தன்னுடைய சொந்த முயற்சியாலேயே எக்ஸ்ரே கருவியைச் செய்தான்'— இச்செய்தியை அண்மையில் செய்தித்தாள்களில் கண்டோம். உடைந்துபோன உஷ்ணமானி (Thermometer) யிலிருந்து பாதரசம் (Mercury); விளக்குகளிலிருந்து (Bulbs) டங்ஸ்டன் (Duugsten); வீட்டிலிருந்து சிறிது அலுமினியம் இன்ன பிற கருவிகளை இப்படியே சேகரித்தான்; 'எக்ஸ்-ரே' கருவி செய்து காட்டுகிறேன், என்றான்; நண்பர்கள் நகைத்தனர்; அவர்கள் நகைப்பு மறைவதற்குள் தான் சொன்னதைச் செய்து காட்டினான். அதன் மூலம் படம் பிடித்துப் பார்த்தனர்; உண்மையான எக்ஸ்-ரேவாக இருந்தது கண்டு அறிஞர் வியந்தனர்- பல்கலைக்கழகத்திலிருந்து பரிசு கிடைத்தது அவனுக்கு. அவனுடைய படம் பத்திரிகைகளில் காணப்பட்டது. பாராட்டுகள் குவிந்தன, பாரெங்குமிருந்து! பத்தொன்பது வயது மாணவன் தனது சொந்த முயற்சியாலே எக்ஸ்-ரே செய்துள்ளான்! விந்தையாகத்தானிருக்கிறது கேள்விப்படும் நம்மவர்களுக்கு!

ஆங்கில நாட்டு விஞ்ஞானி ஒருவர் தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தவுடன் இறந்துவிட்ட பதினைந்து குழந்தைகளைப் பரிசோதித்தார். பின்னர் 'எப்படியோ அப்பதினைந்து குழந்தைகளையும் உயிர் பெற்று எழச்செய்தார். கறி சமைக்கப்பட்ட சிராளன் உயிர் பெற்றெழுந்தானே, கருணைவடிவாம் சிவபெருமான் அருளால், அது போலல்ல— விஞ்ஞானத்தால்!

* * *

ஆஸ்திரேலிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத் தலைவரான ஜே. ஜே. டெட்மன் என்பவர், இதர விஞ்ஞானிகளுடன், ரேடியோ அலைகளை வெளிப்படுத்தக் கூடிய ஒரு புது விண்மீன் இயங்கிக் கொண்டிருப்பது சாத்தியம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இப் புதிய விண்மீனுக்கு 'ரேடியோ விண்மீன்' (Radio Star) என்று பெயராம்! காற்றில் பரப்பப்பட்ட ஒலிகளைக் கவரக்கூடிய நுண்ணிய 'மைக்ரோ' 'ரிஸீவர்கள்' மூலம் சூரியன், சந்திரன் ஆகியவைகளிலிருந்து வரும் கதிர்களைச் சோதனை செய்ததால் கண்ணால் காண இயலாத வகையில் நட்சத்திர இடைவெளிகளிலிருந்தும்

கிரண வீச்சு இருப்பதாகத் தெரியவந்தாம்! நம்மவர்களோ, இருபத்தேழு நட்சத்திரங்களே இருப்பதாக நம்பி, அவைகளைப் பெண்களாக்கி அவைகளைச் சந்திரனுக்கு மனைவியராக்கி, அவைகளையும் வழிபட்டு வருகின்றார்கள், இன்றுவரை!

* * *

1939ல் கலிபோர்னியா (California)வைச் சேர்ந்த காப்டன் காரெல் (Captain Carrel) என்பார் 726 மணி நேரம் தொடர்ந்து வானிலே பறந்து கொண்டிருந்தார். அந்த நிலை (Record) யை மீற ரிச்சர்ட் ரீடல், வில்லியம் பாரிஸ் என்ற இரு விமானிகள் புல்லர்டன் என்ற ஊரிலிருந்து புறப்பட்டனர். அக்டோபர் 19, 1948 முதல் டிசம்பர் 7, வரை வானிலேயே பறக்கத் திட்டமிட்டனர். "பெட்ரோல் தீர்ந்துவிட்டால், பெட்ரோல் மோட்டார் ஒன்றிலிருந்து குழாய் மூலம் அனுப்பப்படும். பெட்ரோல் அனுப்பும்போது விமானம் விமான நிலயத்தின் (Aerodrome) மீது சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருக்கும். இத்துடன குழாய் இணைக்கப்பட்ட பெட்ரோல் மோட்டாரும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும்" என்றும் அறிவித்திருந்தனர்.

நம்மவர்களும் சுற்றிச் சுற்றி வருகிறார்கள்; ஆல மரத்தையும், அரச மரத்தையும், தவறாமல் சுற்றி வருகிறார்கள், ஆண்டவனின் அருளைப் பெற! அவ்வருளால் பிள்ளைபெற.

ஆங்கிலநாட்டில் கணவன் எழுதிய நூலுக்கு மனைவி முன்னுரை (Preface) எழுதுகிறாள்; நம் நாட்டில் கணவன் எழுதுவதைப் படிக்கக் கூடத் தெரியாதவர்களாக மனைவிகள் இருக்கிறார்கள்!

* * *

மோட்டார் ஓட்டுவதற்குச் செலவாகும் பெட்ரோல் இல்லாமலே அவைகளை ஓட்டுவதற்குப் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்களாம். இது எட்டு குதிரை சக்தியுள்ளதாக 'ஸலூனை'ப் போன்ற உருவத்தில் பிரிட்டனில் தயாராகி வருகிறதாம். ஐந்தறை அணுவுக்குக் குறைவான செலவில் 50 மைல் தூரம் செல்லக் கூடுமென இதைத் தயாரித்து வரும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இரயில்வே பிளாட்பாரங்களில் சாமான்களை ஏற்றிச்செல்வதற்காகவுள்ள மின்சார வண்டிகளின் தத்துவத்தைப் பின்பற்றித்தான் இப்புதிய கார் கட்டப்படுகிறதாம்! இப்புதிய காரின் பாட்டரிகளை நம் வீடுகளிலுள்ள மின்சார மெயின் (Main)களில் இணைப்பதன் மூலம் மின் ஏற்றம் (Charging) செய்து கொள்ளலாம்!

நம் நாட்டு மக்களோ இன்னும் புஷ்பக விமானத்தைப் பற்றி, அதில் ஏறிச்செல்லும் எம்பெருமானைப்பற்றி, அவனைத் தொழுவதால் கிடைக்கக் கூடிய புண்ணியத்தைப் பற்றித்தான் கவலை கொண்டிருக்கிறார்கள்!

* * *

மக்களுக்கு நீண்டகாலம் தொந்தரவு கொடுத்துவரும் பூச்சி புழுக்களைக் கொல்வதற்கு இலண்டன் விஞ்ஞானி ஒருவர் புதுமுறை ஒன்றினைக் கண்டுள்ளார். அவர் ஒரு மேசை மீது இருந்த துவாரத்திற்குள் ரேடியோ அலைகளைச் செலுத்திப் பார்த்தார். இவ்வலைகள் உயிரைக் குடிக்கும் கதிர்களாக வேலை செய்துள்ளன. ஏனெனில் ரேடியோ கதிர்கள் அனுப்பப்பட்ட சில விநாடிக்குள் மேசை துவாரத்திலிருந்து நீராவி போன்ற புகை வெளிப்பட்டது. துவாரத்தைப் பரிசோதனை செய்து பார்த்ததில் அதனுள் இருந்த புழுக்கள் அக்கதிர்களால் நசுக்கப்பட்டு ஆவியாக மாறிவிட்டதென்பது புலனாகியதாம்!

* * *

வயல்களில் எளிதில் உரம் பரப்புவதற்காக பிரிட்டிஷ் தொழிற் ஸ்தாபனமொன்று ஓர் இயந்திரத்தைத் தயாரித்துள்ளதாம். இவ்வியந்திரம் பல மணிநேர வேலையை ஒரு சில நிமிஷங்களில் முடித்துவிடுகிறதாம். எட்டு நிமிஷத்தில் இவ்வியந்திரம் 2-டன் நிறையுள்ள உரத்தைத் தானகவே நிரப்பிக்கொண்டு அதை **10** நிமிஷங்களில் 30 அடி தூரத்திற்குச் சமமாகப் பரப்பி விடுகிறதாம்!

நம் நாட்டு விவசாயிகளோ, "ஏலேலோ அயிலேசா; ஏழுமலையானே அயிலேசா! ஏழைமேல்கருணை அயிலேசா!" என்ற பல்லவியைப் பாடிக்கொண்டு "எல்லாம் அவன் செயல்" என்று பாரத்தை 'அவன்' மேல் போட்டுவிடுகிறார்கள்!

* * *

விமானங்களின் வேகத்தை நிர்ணயிப்பதற்காக 'ஹெலிகாப்டர் என்ற புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. காலநிலையால் விமானங்கள் பறப்பதற்கு இடையூறு இல்லாமல் நிலைமையைத் தெரிந்துகொள்ள மிக்க ஒளி தரக்கூடிய பிரம்மாண்ட விளக்குகள் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. விமானங்கள் புறப்படுவதற்கும், வந்து சேர்வதற்கும் விமான நிலையங்களில் இது பேருதவி புரிகிறதாம்!

நம் நாட்டிலோ, பிரிந்து செல்வதாகக் கருதப்படும் உயிர் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராமல் வழியிலேயே தடுமாறித் திகைத்துத் திரும்பிவிடாமல் செல்வதற்கென, செல்வர்கள் கோபுரங்களின் உச்சிகளிலே நெய்விளக்கு ஏற்றுகிறார்கள்!

* * *

3 நிமிஷங்களுக்கு ஒரு சைக்கிள் வீதம் இங்கிலாந்திலுள்ள ஒரு தொழிற்சாலையில் மோட்டார் சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு மோட்டார் சைக்கிள் விலை 40 பவுன். ஒரு பெண் இரு கரங்களாலும் தூக்கி வைக்கும்படி அவ்வளவு இலேசானதாம், இச் சைக்கிள்!

குத்துச் சண்டை நிபுணர் ஒருவர், ஐந்து பெரிய மோட்டார்களைக் கயிற்றால் கட்டி, அக்கயிற்றின் ஒரு முனையைப்

பற்களால் கடித்துக் கொண்டு கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு அந்த மோட்டார்களை அரைமணி நேரம் இழுத்தாராம் பற்களாலேயே!

நம் நாட்டிலோ, காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் பிரம்மோற்சவம் சிறந்ததாக நடக்கிறதா, அல்லது கந்தகோட்டத்து ரதோற்சவம் சிறப்பாக நடக்கிறதா என்ற 'பெரிய' பிரச்சினையை அலசி ஆராய்கின்றனர் அடியார்கள்!

* * *

சிறிய மேசை அளவுள்ள ஓர் இயந்திரம்—10"x11"x7" அங்குலம் அளவுள்ளது—அமெரிக்காவில் நிவார்க் (Newark) என்ற இடத்தில், உலகத்தில் ஒரு புரட்சிகரமான இயந்திரம் ஆக்கப்பட்டதாம்! தந்தி அடிக்கும் முறையில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டுள்ளது. இதற்கு Desk Fax Transmitter என்று பெயராம்! இருந்த இடத்திலேயே இருந்து தந்தி அடிக்கும் முறை. நாம் அனுப்பவேண்டிய செய்தியை டைப் அடித்து, பரப்பும் போது மின் அதிர்ச்சிகள் (electrical impulses) ஏற்பட்டு, அச் செய்தியின் பக்கமாகப் பரவி (Receiving machine) அச் செய்தி போலவே படம் எடுத்து, $6\frac{1}{2} \times 4\frac{1}{2}$ அங்' அளவுள்ள ஒரு காகிதத்தில் பதிவு செய்கிறதாம். (Pictorial Reproduction of the message) இதற்குத்தான் "Press Button Telegram" என்று பெயர்!

'புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே!" என்றார் பாரதியார்! ஆம்! நித்தம் ஒரு புதிய கருவி, நிமிஷம் ஒரு மாறுதல் இப்படி வளர்ந்து வருகிறது விஞ்ஞானம், மேற்கு நாடுகளில்!

நம் நாட்டிலோ!

விபீஷணன் சரணாகதிப் படலம் பற்றி வேதாரண்யம் விஜயராகவாச்சாரியார் உபந்யாசிப்பார்! பக்த கோடிகள் எல்லோரும் வரவும்!

அகில இந்திய வைஷ்ணவ மாநாடு, காஞ்சி கிருஷ்ணமாச்சாரியார் தலைமையில் சென்னையில் நடைபெறும்.

கபாலீஸ்வரர் கோயில் கோபுரத்திற்குக் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசித்திருப்பதால், எல்லோரும் தங்கள் தங்களாலான 'பொருள் உதவியைச் செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்!

காஞ்சி சங்கராச்சாரியார் ஹிந்து மதத்தின் சிறப்புக்களைப்பற்றி ஸம்ஸ்கிருதத்தில் இன்றுமாலை உபந்யாசிப்பார்.

இந் நிகழ்ச்சிகளே நம் நாட்டில் நாளும் நடந்த வண்ணமல்ல—வளர்ந்த வண்ணமுள்ளனவெனில் இந்த நாடும் உருப்படுமா?

எண்ணிப்பாருங்கள்.

## தொடர் கதை:




[முன்பு: மாதவனும் மூர்த்தியும் இலக்கியப்பித்தன் தந்த "பொற்சிலை" என்ற கையெழுத்துச் சுவடியை வாசிக்கிறார்கள்.

காட்டிற்குச் சென்ற இலக்கியப்பித்தன் பொற்சிலையைக் காதலித்து, அவளோடு அவளது தகை இல்லத்திற்குச் செல்கிறான். பொற்சிலையின் தாத்தாவின் புரட்சிகரமான கருத்துக்கள் நிறைந்த பேச்சு, அவன் உள்ளத்தைக் கவர்கிறது.

பொற்கொடி—சிலைமன்னன் ஆகிய தன் பெற்றோரின் சோக வரலாற்றை ஒரு நாள் பொற்சிலை சொல்லுகிறாள்.

வளமிக்க தமிழை வஞ்சக ஆரியர் அழித்ததின் விவரத்தைக் கிழவர் கூறுகிறார். சொல்லிக்கொண்டே வந்தவர், சோக மிகுதியினால் தம்பேச்சை நிறுத்திவிட்டுப் பெருமூச்சு விடுகிறார்.

ஆரியத்தால் அழிக்கப்பட்ட அரும் பெரும் தமிழ் நூல்களின் வரலாற்றை அறிய நொடிக்கு நொடி அவன் உள்ளத்தில் துடி துடிப்பு அதிகரிக்கிறது! பிறகு..............]

பெரியார், என் முகத்தை இமை அசைக்காது உற்று உற்றுக் கவனித்தார். அவர் ஏன் அப்படிப் பார்க்கிறார் என்பதே எனக்குப் புரியவில்லை. முகத்தில் ஏதாகிலும் ஒட்டிக்கொண்டிருக்கிறதா என்று தடவிப் பார்த்து அறிய, ஒரு கையைத் தூக்க எண்ணினேன். அதற்குள் அக்கிழவர் "விரல் நகமா, தம்பி, முகத்தில் பட்டிருப்பது?" என்று திடீரென ஒரு கேள்வியை வீசினார். எதிர்பாராத இக்கேள்வி என்னைத் திடுக்கிடச் செய்தது.

நகம்பட்ட இன்ப நிகழ்ச்சி—பேரானந்தப் பெரு வெள்ளத்தில் அன்றொரு நாள் நானும் பொற்சிலையும் மிதந்தது என் நினைவிற்கு வந்தது! என்ன பதில் அளிப்பதென்றே எனக்குத் தோன்றவில்லை. என் மௌனம் எங்கு ஐயத்தை எழுப்பி விடுகிறதோ என்றெண்ணி உள்ளம் பதை பதைத்தது! மனதில் ஏற்பட்ட மாற்றம் முகத்திற்குப் பரவியது. 'எடுத்துக்கொண்டோம், நீண்ட தூரமும் ஓடி வந்து விட்டோம், நிச்சயமாகப் பிடிபடோம், இனி

நமக்குத்தான் இது சொந்தம்' என்றெண்ணிக் கள்ளப் பொருளைக் கையிலேந்தி மகிழ்ச்சியோடு நடந்து செல்லும் கள்வனை எதிர்பாராதமுறையில் திடீரென்று சொத்தின் சொந்தக்காரன் பிடித்துக் கொண்டால், அத்திருடனின் முகம் எப்படி விகாரமும் பயமும் அடையுமோ அதே போல், அதைவிட இன்னும் சிறிது வேகமாக, என் முகம் மாற்றமடையத் தொடங்கியது! மாற்றத்தை மறைக்க முயன்றேன், பயனில்லை. மனதில் ஏற்பட்ட பீதியும் துடிதுடிப்பும் என் முகத்தில்பட்ட வர்த்தனமாகப் பிரதிபலித்து விட்டன. என் முகமாற்றத்தைக் கிழவர் மிகுந்த நுணுக்கமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்ததும், என் இதயத்தின் படபடப்பு, ஓட்டப்பந்தயக் குதிரையோடு போட்டிப் போட்டது!

இப்படி மனப் போராட்டத்தில் நான் ஈடுபட்டிருந்த நேரத்தில், பெரியார் "வாலி" என்று உரத்த குரலில் கூப்பிட்டார் முரடனை அழைக்கிறாரே, என்ன ஆபத்து வருமோ என நினைத்ததும் என் மார்பே பிளந்துவிடும் போலாகியது. வந்தான் வாலி. "சாப்பிட வரலாமா என்று பொற்சிலையைக் கேட்டுக் கொண்டு விரைவாக வா" என்று கிழவர் கூறியதும், வாலி வெளியில் சென்றான்.

மதயானையின் காலில் மிதியுண்டுக் கூழாகி மாள விருந்தவன், தற்செயலாகத் தப்பித்தால் எவ்வளவு மகிழ்ச்சி யடைவானோ, அதைவிட அதிகமாக நான் களிப்படைந்தேன்.

"எல்லாம் தயாராகி விட்டதாம்" என்று வாலி வந்து சொன்னதும், "சரி, தம்பி, முதலில் நீ போய்ச் சாப்பிடு! சிறிது நேரம் கழித்து நான் வருகிறேன்' என்று பெரியார் கூறினார். எழுந்து, அறையை விட்டு மெதுவாக வெளியில் சென்றேன். அறையின் கதவை வாலி மூடினான். அவர்கள் என்ன பேசுகிறார்கள். என்பதை அறிய அவாக்கொண்டு, கதவோடு கதவாகக் காது வைத்து ஒட்டி நின்றேன்! மூச்சை அடைக்கி மெதுவாக விட்டேன்! பேச்சின் ஒலி எழுந்தது. அதிக கவனத்தோடு உற்றுக் கேட்டேன்.

"ஐயா! அழிக்கப்பட்ட தமிழ் ஏடுகளைக் குறித்து ஆவேசத்தோடு பேசி வந்த தாங்கள், திடீரென்று ஏன் அதனை நிறுத்தி விட்டீர்கள்?"

"வாலி! நீயுமா அதனைக் கேட்டுக் கொண்டிருந்தாய்?"

"அறையின் வெளியில்தானே நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன்."

"அதனால்தான் அவனுடைய முகத்தை உன்னால் பார்க்க முடியாமல் போய் விட்டது! அன்னியர் சூழ்ச்சியால் தமிழ் இழந்த செல்வத்தைக் குறித்து

நான் கூறிக்கொண்டு வரவர, இளைஞனது முகம் உணர்ச்சியால் கவ்வப்பட்டு, கைகால்களில் அதிர்ச்சி ஏற்பட்டது! சிறிது நேரம் கழிந்த பின்னர் தான், அதனை நான் கவனித்தேன். விடாது வேகத்தோடு வேகமாக, உணர்ச்சியோடு உணர்ச்சியாக நான் சொல்லிக்கொண்டே இருந்திருப்பேனேயானால், நிச்சயம் அவனுக்கு மிதமிஞ்சிய தமிழ்வெறி பிடித்திருக்கும். அமைதியை இழந்திருப்பான், அக்ரமக்காரர்களைக் கிழித்தெறிந்து பழிக்குப்பழி வாங்க அவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடித்திருப்பான்! பேச்சை நிறுத்திவிட்டு, நான் அவன் முகத்தையே உற்றுப் பார்த்தது, ஏன் என்பது புரியாது விழித்தான், பாபம்! வாலிபனின் கன்னத்தில் நகக்குறி பட்டிருந்ததை முன்னரே நான் பார்த்திருக்கிறேன். அது யாருடைய நகம் என்பதும் எனக்குத் தெரியும். அவனது உணர்ச்சியைக் கட்டுப் படுத்துவதற்காகவும், தணியச் செய்வதற்காகவும்தான் அக்கேள்வியை நான் போட்டேன்! காளைக்குப் பழைய நிகழ்ச்சி நினைவிற்கு வந்துவிடவே, பயந்தான். அழிக்கப்பட்ட செந்தமிழ் ஏடுகளைக் குறித்து அறிய வேண்டுமென்ற ஆர்வத்தீயை, அச்சத் தண்ணீர் அணைத்தது! சிறிது நேரத்தில் தமிழைக் குறித்தே மறந்துவிட்டான், வாலி, அவன்!

“ஐயா! தமிழ் வெறி தமிழ் மகனுக்குப் பிடிப்பது நல்லது தானே?”

“நல்லது தான்! மறுக்கவில்லை. ஆனால் அந்த நல்லதில் நமக்கு நஷ்டமிருக்கிறதே!”

“புரியவில்லையே”

“தமிழ் வெறி பிடித்தால் இங்கு ஒரு நாள் கூடத் தங்கியிருக்க அவன் இசையான்....’’

‘சரி, போகட்டும். போய்த் தமிழன்னைக்குச் சேவை செய் செய்யட்டும். அதுதானே வேண்டுமென்று நீங்கள் அடிக்கடிக் கூறுவது வழக்கம்?”

“உண்மைதான்.........பிறகு பொற்சிலையின் கதி?”

“ஐயா! என்ன சொல்கிறீர்கள்?”

“ஆயாம், வாலி! அவனும் அவளும் அன்பினால், இளமையின் சக்தியினால் ஒன்றாகி விட்டார்கள்! அவனுக்கு ஏற்ற அழகும் குணமும் கொண்ட மனைவி அவள்தான். அவளுக்குத் தகுந்த அறிவும் கவர்ச்சியும் மிக்க கணவனும் அவன்தான்! அது என் எண்ணம்! நாளைய தினம் திருமணம்! அது என் முடிவு! அவர்களின் நீண்ட நாள் இன்பக் கனவு!.........”

இந்தச் செய்தித் தேன் காதில் பாய்ந்ததும், என் மகிழ்ச்சிக்கும் ஓர் எல்லை இருந்திருக்க முடியுமா? ஓடு, ஓடு, விரைவாக ஓடு பொற்சிலையிடம், இல்லையெனும் இடையாளை இறுக அணைத்து இச்செய்தியைக் கூறு, அவளும் மகிழட்

டும் என்று என் மனம் என்னை அவசரப்படுத்தியது! மேற்கொண்டு என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்காமலேயே வேகமாகச் சமையல் அறையினுள் சென்றேன்.

பொற்சிலை எழுந்து, கைதேர்ந்த சிற்பி செய்த சிலையைப் போல், பேசாது ஒரு பக்கமாக நின்றாள், தன் தாத்தாவும் என் பின்னால் வருகிறார் என்றெண்ணி!

"கண்ணே, கேட்டாயா செய்தியை?" என்று கூறிக்கொண்டே அவளருகில் சென்றேன்.

"விடுங்கள்!......தாத்தா வந்து விடப் போகிறார்!......... என்ன செய்தி?" என்று அவசர அவசரமாகப் பேசினாள்.

"திருமணம்!"

"யாருக்கு, அத்தான்?"

"உன் தாத்தாவிற்கு!"

இருவரும் கொல்லென்று சிரித்தோம்.

"ஏன், தாத்தாவினால் கல்யாணம் செய்துகொள்ள முடியாதா என்ன?"

"நன்றாக, தாராளமாகச் செய்துகொள்ள முடியும்! பொதிகை மலையிலிருந்து வீசும் தென்றல், பொக்கைவாய்க் கிழவர்களையும் இளம் பெண்களை மணக்கத் தூண்டும்!............"

"எனக்கு இன்னும் பல்லே முளைக்க வில்லையே தம்பி!" என்று சிரிப்பொலியோடு கூறிக்கொண்டே கிழவர் அறையினுள் நுழைந்தார். பிரிந்து, தலை குனிந்து நின்றோம்.

"பொற்சிலை! சோறு படைகுழந்தாய்!" என்று அன்பான மகிழ்ச்சி நிறைந்த குரலில் சொன்னார். அவள் சோறிட்டாள். உண்ணத் தொடங்கினோம். "பார்த்தீரா? சொன்னால் கேட்டால்தானே?" என்று பொற்சிலை தன் வேல்விழிகளால் பேசி, என் தவறைக் குத்திக்காட்டினாள்.

"பயமே வேண்டாம்! தாத்தா நல்லவர்!" என என் கண்களால் கூறி, தாமரை முகத்தாளுக்குத் தைரியம் தந்தேன்.

இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. மறுநாள் வாழ்வின் திருநாள் என்றால் தூக்கமா வரும்? எண்ணமெனும் மொட்டுக்கள் மலர்ந்து கொண்டே இருந்தன. கன்னத்தை தடவிப்பார்த்தேன். என் விரலின் மிருதுவான உள்பாகத்தில் நகம் பட்ட வடு உறுத்தியது. பழைய அந்தச் சம்பவம் என் கண்முன் வந்து நின்று, உள்ளத்தை உவகையில் ஆழ்த்தியது.

காவிய அழகு மேவிய கன்னியை, ஓவிய இல்லத்திற்கு ஏந்திச் சென்ற அன்று, "இரவு இங்கு இரு தம்பி! வேண்டுமானால் நாளைக்குப் போகலாம்" என்று பெரியார் கூறி என்னை நிறுத்தினார். மறுநாள் கேட்டேன். "நாளைய தினம் செல்லலாம்" என்றார். அடுத்த நாள் கேட்டேன், அதே பதில் தந்தார் நான் கேட்பது, அவர் மறுப்பது—மறுப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருவது—இப்

படியே ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது.

"ஊரில்தான் யாருமில்லை என்று கூறுகிறாயே, பின்பு ஏன் அங்குச் செல்லத் துடிக்கிறாய்? நீ இங்கிருப்பது எனக்கு எவ்வளவோ உறுதுணையாக இருக்கிறது. உன்னைப் பிரிய என் மனம் ஏனோ இடம் தர மறுக்கிறது. எனனைப் பிரியவேண்டுமென்று உன் உள்ளம் உரைத்தால், சொல்லிக்கொள்ளாமல் போய் விடுவதுதான் நலம்! அவ்வளவுதான் நான் சொல்லக்கூடும்!" என்று ஒரு நாள் உருக்கமான குரலில் கூறிவிட்டு, அவர் வெளியே சென்று விட்டார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த பொற்சிலை கால் சிலம்பு ஒலிக்க, இதழ்களில் மலைத்தேன் கசிய, கண் அம்புகள் என் உள்ளத்தைத் துளைக்க அருகே வந்தாள்! இருமுகமும் ஒன்றாய்ச் சேர்ந்தன.

வாலி வருவதைக் கண்டதும் திமிறிக்கொண்டு ஓட முயற்சித்தாள். அவன் வருவது எனக்குத் தெரியாது. ஆகையினால் அவளை விட மறுத்தேன். அவசர அவசரமாக விலக ஆரம்பித்தாள். அப்பொழுது அவள் பெரு விரல் நகம் என் கன்னத்தில் தவறிப் பட்டுவிட்டது. இரத்தமும் கசியத் தொடங்கியது.

இப்படிப் பற்பல நிகழ்ச்சிகள் என் நினைவிற்கு ஒன்றன்பின் ஒன்றாக வந்து என் ஆனந்தத்தை அதிகரிக்கச் செய்தன.

இருள் தேய்ந்து மறைந்தது. பொழுது புலர்ந்தது. எங்கள் திருமணத்தைக் கண்டு களித்து, வாழ்த்துக்கூற, கீழ்வானமெனும் மாளிகையை விட்டுக் கதிரவன் வெளியில் வந்தான். காதலனைக் கண்டதும் தாமரைப் பெண்ணின் முகம் மலர்ந்தது! என்னை மணப்பதாகக் கூறிக் கடைசியில் ஏமாற்றிவிட்டுத், தாமரையைக் காதலிக்கிறானே, சே, இந்தத் துரோகியின் முகத்தில் விழிக்கவே கூடாதென்றெண்ணி அல்லிக்குமரி வாட்டமுற்றுத், தன் முகத்தை மூடிக்கொண்டாள்!

ஓவிய இல்லத்தின் அழகிற்கு பெருகு கொடுப்பதைப்போல் அலங்கரிக்கப்பட்டது. எனக்கும் பொற்சிலைக்கும் திருமணம் நடைபெற்றது!

எங்கள் திருமணத்தில் குத்து விளக்கெரிந்ததா? இயற்கை அன்னை தந்த சூரிய விளக்கிருக்க அது ஏன்? கொட்டு மேளம் முழங்கிற்றா? கலகலவென ஒலிக்க, கணயணி பொற்சிலையின் கைவளையல்களிருக்க, அது எதற்கு வீணிற்கு? புரோகிதன் உண்டா? உடல் உழைப்பு இன்றி ஊரார் பொருளை உண்டு கொழுத்து, ஏமாற்றித் திரியும் வஞ்சகனுக்கு அங்கென்ன வேலை? அம்மியை மிதித்தாளா? அருந்ததியைக் காட்டினேனா? அறிவற்றவர்களா நாங்கள், அவற்றைச் செய்ய? பெண்ணின் கழுத்தில் பொன் தாலி மின்னியதா? அறிவியல் ஆராய்ச்சி

நூல்களைப் புரட்டும் என் கைகள் மடமையின் அடையாளத்தை, அடிமையின் சின்னத்தையா தொடும்? பொன்னின் ஒளி வீசும் பொற்சிலையின் கழுத்தா அதனை ஏற்கும்?

"உங்கள் திருமண அன்பளிப்பாக இந்த இரும்பல் காஞ்சி என்னும் தமிழ்ப் பெரும் சுவடியைத் தருகிறேன்" என்று கூறிப் பெரியார் ஓர் பழைய ஓலைச் சுவடியை என்னிடம் தந்தார். அதனைப் பயபக்தியோடு வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டேன். "அறியாமை இன்னும் சரியானபடி அகலவில்லை" என்று மெதுவாகக் கூறினார். திரும்பி நான் அவரைப் பார்த்தேன். தம் வெண்தாடி அசைய அவர் சிரித்தார். அடுத்த நொடியில் அவர் முகம் மாறியது, அவர் கண்களில் நீர் முத்து முத்தாகத் தேங்கியது. அவ்விடத்தை விட்டுக் கிழவர் சென்று விட்டார்.

அன்று மாலை மனைவியும் நானும் உல்லாசமாகக் காட்டினுள் நுழைந்தோம். தெளிந்தோடும் ஆற்றின் நீரில் மூழ்கி நீந்தி விளையாடினோம். புதருக்குள் புகுந்தோடினோம்! "பிடியுங்கள் பார்க்கலாம்" என்று துள்ளிப் பறந்தாள்! "மானைப் பிடிக்க சிங்கத்தால் முடியாதோ" என்று நான் துரத்தினேன்.........பாடினோம்! ஆடினோம்! இன்பவெள்ளத்தில் ஆழ்ந்தவரானோம்!

மூன்று நாட்கள் சென்றன. குகை இல்லத்தின் வாயிலில் முல்லைக் கொடியின் அருகில் பொற்கொடியின் மகளும் நானும் பேசிக் கொண்டிருந்தோம்!

கவிஞர்கள் கண்ட காதல் உலகை அவளுக்கு நயத்தோடு எடுத்து விளக்க ஆரம்பித்தேன். புலவர் பெருமக்கள் தந்த சுவை மிக்க விருந்தை அவளும் ஆர்வத்தோடு உண்ணத் தொடங்கினாள். உண்டது அதிகமாகி விட்டதோ என்னவோ, மலர்க் கொடியாள் என் மடியில் துவண்டாள்!..............

தூரத்தில் பெரியார் வருவதைக் கண்டதும் எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது! அலறி அடித்துக் கொண்டு அவள் ஓட முற்பட்டாள்!

"ஓடாதே நில், பொற்சிலை" என்றேன், பயந்தெளிந்து.

"விரைவாக வாருங்கள்! தாத்தா பார்த்துவிடப் போகிறார்!" என்று படபடப்போடு, மிரள மிரளக் கூறினாள்.

"மறந்து விட்டாயா? இப்பொழுது கள்ளக் காதலர் அல்ல நாம்--கணவனும் மனைவியும்!" என்றேன் சிரித்த வண்ணம். சிறுநகை செய்து விட்டுச், சிற்றிடை அருகில் வந்து அமர்ந்தாள்.

"கல்யாணமானது மறந்தே விட்டது! பழைய நினைவே இன்னுமிருக்கிறது, அத்தான்!" என்று கூறிக் குறும்புத்தனம் நிறைந்த பார்வையை வீசினாள்

இன்பமாக நாட்கள் ஓடிக் கொண்டே இருந்தன. எவ்வளவுதான் மகிழ்ச்சியாக நான் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தாலும், அழிக்கப்பட்ட தமிழ் நூல்களைப் பற்றி அறிவிக்காமல் கிழவர் காலம் கடத்திக் கொண்டே சென்றது சிற்சில நேரங்களில் 'நினைவிற்கு வந்து என்னை வருத்தத்திலாழ்த்திற்று.

பொற்சிலைக்கும் எனக்கும் மணமாகி மாதங்கள் ஆறு எப்படியோ பறந்து விட்டன. ஒரு நாள் பொற்சிலை உடல் நலம் சரியில்லை என்று படுத்துக் கொண்டாள். அவளுக்கு வேண்டிய சிறு சிறு வேலைகளை நான் செய்து கொண்டிருந்தேன். கிழவர் மருந்து மூலிகைகளைப் பறித்துக் கொண்டுவந்து தந்தார். ஒவ்வொரு மூலிகையைப் பற்றியும் எனக்கு அவர் விளக்கிக் கூறினார். பொற்சிலையின் கைநாடியைப் பார்த்துவிட்டு, "இது சகஜமான சோர்வு தம்பி, பிறகு தானே இது சரியாகிவிடும்" என்று கூறி என்னைப் பார்த்துச் சிரித்தார். அவர் சிரித்ததின் பொருள் அப்பொழுது எனக்கு விளங்கவே இல்லை.

மறுநாள் அவர் அறையினுள் நான் சென்றேன். பெரியார் அந்நேரத்தில் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். என்னைக் கண்டதும், தாடியைத் தடவிக் கொடுத்துக் கொண்டே உட்கார் தம்பி என்றார். உட்கார்ந்தேன். பொற்சிலையின் உடல் நலம் சரியாகி விட்டதென்றும் கூறினேன். அவர் சிரித்தார். அப்பொழுதும் நான் அறிந்து கொள்ளவில்லை, அவர் ஏன் சிரிக்கிறார் என்று.

"ஐயா" என்று பேச்சை ஆரம்பித்தேன்.

"கேள் தம்பி...............'

"இன்று.............."

"அது தானே? சொல்கிறேன் இன்று நிச்சயம் இடிக்கப்பட்ட இன்பத் தமிழ் ஏடுகளைப் பற்றிக் கூறுகிறேன்........."

"உண்மையாகவா?"

"ஆமாம் தம்பி, ஆமாம்! ஆனால் ஒன்று..........."

"ஏன் தயங்குகிறீர்கள்? விரைவாகச் சொல்லுங்கள்!"

"அழிக்கப்பட்ட தமிழ்ப் புதையல்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வரும்போது ஆத்திரமோ ஆவேசமோ நீ கொள்ளக் கூடாது!"

"சரி!"

"நான் கூறப்போவது, சில இடங்களில் வெறுப்பைக்கூடத் தரும், அதனையும் சகித்துக் கொள்ள வேண்டும்!"

"சரி!"

"சிற்சில செய்திகள், நான் சொல்லிக் கொண்டு வரும் வேகத்தில் உனக்குப் புரியாமல் கூட இருக்கலாம். புரியவில்லை என்பதற்காக அவற்றைக் கவனிக்காமல் இருக்கவோ, அன்றிப் புரியும்படி விளக்கிக் கூறும்படிக் கேட்கவோ கூடாது! அந்தப் புரியாத செய்தியை நீயே

பிறகு ஒரு முறைக்குப் பல முறை யோசனை செய்து பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும்!"

"அப்படியே!"

"சுருக்கமாகத்தான் கூறுவேன்!"

"அது ஏன்?"

"விளக்கிக் கூறக் கூடாதென்பதற்காக."

நான் சிரித்தேன், தாடி அசைய அவரும் சிரித்தார். பெரியார், முகத்தைத் துடைத்துக் கொண்டு, சரியாக உட்கார்ந்துகொண்டு, வெண்ணிறத் தாடியைத் தடவிக் கொடுத்துக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

"தம்பி! புலவர் மகிழ்ந்து பெற்ற தமிழ்! மூவேந்தர் போற்றி வளர்த்த தமிழ்! மக்கள் இதயங்களில் திருநடனம் புரிந்த தமிழ்! செந்தமிழ்! நம் தமிழ்!.........அண்டிப் பிழைக்க வந்த ஆரிய வஞ்சகர், தேன் தமிழில் தோன்றிய பெரும் பெரும் நூல்களை அழித்தார்கள், தங்கள் ஆதிக்கம் நிலைக்க வேண்டுமென்பதற்காக! ஆரிய மதக் கோட்பாடுகட்கு விரோதமாக இருந்த சீரும் சிறப்பும் பெற்ற நீதிக் களஞ்சியங்களைச் சிறுகச் சிறுக மறையச் செய்தார்கள்! பூரித்துப் பெருமகிழ்ச்சி கொண்டு தமிழ் அன்னையின் கழுத்தில் கவிஞர்கள் சூட்டிய அணிகளைக், கள்ளத்தனமாகக் கவர்ந்து மண்ணில் மறைத்தார்கள், ஆற்றில் வீசி எறிந்தார்கள். தீந்தமிழ் ஏடுகளைத் தீயிட்டுப் பொசுக்கினார்கள்! தமிழன் அயர்ந்தான், ஆரியன் அழித்தான்! பிறகு விழித்துக் கொண்ட சிலர், மிகச் சிலர், "எம் பழந்தமிழ் இலக்கியங்கள் எங்கே? இசை நூல்கள் எங்கே?" என்று வீராவேசத்தோடு கேட்டார்கள். ஆரியப் புலவர்கள் அவர்களைப் பார்த்துச் சிரித்தார்கள். "ஏனப்பா ஆயாசப் படுகிறாய், கடல்கோள் உன் தமிழ் ஏடுகளை அழித்து விட்டது! நம்பப்பா இதனை! உண்மையும் இதுதானப்பா!" என்று வஞ்சக ஆரியப் புலவர் கூறத் தமிழ் மகன் சோர்ந்து, உள்ளம் உடைந்து உட்கார்ந்து விட்டான், உண்மை என்று நம்பி! தம்பி! தமிழனுக்குப் பகுத்தறிவு குறைந்து கொண்டே வந்து விட்டது, தமிழ் நிலை பரப்பில் குறைந்து கொண்டே வந்து விட்டது போல! இல்லையானால் அவன் கேட்டிருப்பான் "ஏனய்யா, கடல்கோள் காரணமாகச் சில நூல்கள் வேண்டுமானால் அழிந்திருக்கலாம்! பற்ற நூல்கள் யாவும் அழியக் காரணமென்ன?" என்று கேட்டானா? இல்லை! தமிழ்ப் புலவர் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்களுக்கு நெஞ்சில் உரமில்லை. அறிவில் தெளிவில்லை. ஆராய்ச்சியில் ஆர்வமில்லை. புறநானூற்றைப் படிக்கிறார்கள், எனினும் சம்பனைத்தான் நாட்டாருக்கு, பாமர மக்களுக்குக் காட்டுகிறார்

கள். தம்பி! இன்று பெள்ள பெள்ளத் தமிழ்ப் புலவர்கள் உண்மையான புலவர்களாக, அறியாமையைக் கண்டிக்கும் நெஞ்சழுத்தம் கொண்டவர்களாக, நேர்மையும் நல்லெண்ண மும் நிறைந்தவர்களாக, அறிஞர் களாக, கவிஞர்களாக மாறிக் கொண்டே வருவதைக் காண மட்டில்லா மகிழ்ச்சி கொள்கி றேன். அன்னார் தொகை பெருகவேண்டும், அன்னைத் தமிழ் ஆட்சி மன்றத்தில் கொலு வீற்றிருக்க! அழிக்கப் பட்ட தமிழ் ஏடுகளைப் பற்றி எண்ணினாலே என் மனஞ்சம் பற்றி எரிகிறது! அந்த நினைவு என்னைச் சோகக் கடலில் தள்ளி, தத்தளிக்கச் செய்கிறது. ஒன்று இரண்டா? ஆயிரக்கணக் கான அரிய பெரிய நூல்களை எல்லாம் பாவிகள் அழித்து விட்டார்கள்! கலியாண காதை, களவு நூல், கவிமயக் கிறை, ஓவிய நூல், ஐந்திரம், அணியியல், அநவியம், ஆசிரியமுறி, இளந் திரையம், கலைக்கோட்டுத்தண்டு, காலகேசி, காக்கைப்பாடினியம், குணநூல், கோள் நூல், சங்க யாப்பு, சயந்தம்.............."

"ஐயா! தாங்கள் சொல் வது...."

"ஆமாம் தம்பி, அழிக்கப் பட்ட ஏடுகளின் பெயர்கள்! இவைகளில் ஒன்று கூட இப் பொழுது இல்லை! இன்னும் கேள், இடைக்கழக காலத்தில் செய்யப்பட்ட சிறந்த இலக்கண நூலாகிய மாபுராணம் அழிக்கப் பட்டது. சிந்தம், சச்சபுட வெண்பா, சிற்பநூல், சிறுகாக்கைப் பாடினியம், சிறுநரியுலா,......"

"ஐயா?"

"என்ன தம்பி!"

"நான் சொல்வதற்கு மன்னிக்கவும். இப்படி வெறும் பெயர்களை மட்டும் கூறினால் என்ன பயன்? ஒவ்வொரு நூலைப் பற்றியும் ஒரு சிலவாகி லும் கூறினால் தானே புரிந்து கொள்ளவும், அந்நூலைப்பற்றி நினைவு வைத்துக்கொள்ளவும் முடியும்! ஐயா, அருள் கூர்ந்து ஒவ்வொரு நூலுக்கும் சிறிது விளக்கம்............"

"தம்பி! ஒவ்வொரு நூலும் எதை எதைக் குறித்து எழுதப் பட்டன என்பதை நான் அறி வேன். ஆனால் ஒவ்வொன்றை யும் குறித்து விவரிக்க ஆரம்பித் தால், ஒரு ஏட்டைப் பற்றி மட் டும் கூறச் சுமார் ஒரு வாரத் திற்கு மேலாகும். ஒவ்வொன் றையும் பற்றி எனக்குத் தெரிந் ததை எல்லாம் நான் கூறத் தொடங்கினால் உனக்குச் சலிப் புத் தட்டிவிடும்............"

"சலிப்பா? யாருக்கு? தமி ழார்வம் கொண்ட எனக்கா? அழிக்கப்பட்ட தமிழ்ச் செல் வங்களைப்பற்றி அறிய நெடு நாட்களாகத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் நானா சலிப் படைவேன்?"

"சலிப்படையா விட்டாலும் உனக்கு அவற்றின் முழு விளக்க மும் தேவை இல்லை. பெயர் களை மட்டும் நினைவு வைத்துக் கொள். அதனைவிடத் தமிழ்

ஆரியத்தால் அழிந்தது என்பதை நன்றாக நினைவில் வைத்துக்கொள். அது போதும் தம்பி! ஏன், உன் முகம் வாடுகிறது? முக்கியமான ஏடுகளைப் பற்றி மட்டும் சில கூறுகிறேன். பலவற்றை நீ விவரமாக இந்த நிலையில் அறிய வேண்டியதில்லை. அவற்றை விவரித்து, தெளிவாகப் பிறகு கூறுகிறேன்......',

"தங்கள் விருப்பப்படியே சொல்லுங்கள் ஐயா!"

"சுருக்கமாச் சொல்லிவிடுகிறேன், என்பதற்காக வருத்தமடையாதே! நான் சொல்வது கொஞ்சமாயிருக்கலாம். ஆனால் நீ அதனைக் குறித்து யோசனை செய்யவேண்டியது அதிகமாயிருக்கிறது ............ தம்பி, உன் கல்யாண அன்பளிப்பாக **இருர்பல் காஞ்சி** என்றொரு பழைய ஏடு தந்தேன் அல்லவா?"

"ஆமாம்! அதனைக் குறித்து ........."

"கூறுகிறேன் கேள்! அழிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஏடுகளில் அதுவும் ஒன்று! ஆனால் ஒரே ஒரு பிரதி மட்டும் அதுவும் எனக்குக் கிடைத்தது! மற்ற பிரதிகள் அனைத்தும் பொசுக்கப்பட்டுவிட்டன சூழ்ச்சியினால். இந்த ஒரே ஒரு பிரதியை மட்டும் நான் எவ்வளவு பத்திரமாக, என் உயிரினும் மேலாக நினைத்துக் காப்பாற்றி வருகிறேன் என்பது உனக்குத் தெரியுமா, தம்பி! இது புறநானூறு போன்ற ஒரு நூல்! தமிழ் மன்னர், வீரர் ஆகியோரின் போர் முறைகளையும், பெற்ற வெற்றிகளையும் விவரித்துக் கூறும் வீரச்சித்திரம் இது. இது நம் மக்களின் இன்றைய தாழ்வான நிலைமையை மாற்ற உதவப் போகும் ஒப்புயர்வற்ற நூலாகும். இதனைத் தமிழரின் உள்ளங்களில் புகச் செய்ய வேண்டியது உன் பொறுப்பு! அந்த நூலை உனக்குப் பிறகு படித்துக் காட்டி விளக்கம் கூறுகிறேன். இன்று நாட்டிலில்லாத ஏடுகளில் **ஆசிரியமாலை** ஒன்று. மிகப் மிகப் பழமையான அகவற் பாக்களால் ஆன தொகை நூல் ஆகுமது. தாழி என்னும் வள்ளலைப் பற்றி அதில் கூறியிருப்பதை நாம் படித்து இன்புற வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதிலிருந்து, இராம சரிதம் பற்றியும் அர்ச்சுனன் தவம் பற்றியும் சில செய்யுட்கள் கிடைத்திருப்பதாகச் சில புலவர்கள் கூறுவார்கள். அதனை நீ நம்பாதே. ஒரு அரசனின் நாடு, ஆட்சி முறை, அரண்மனை ஆகியவற்றை அழகுறச் சித்தரிப்பது **நாரத சரிதை**. இது ஒருவரலாற்று நூல். பொருளிலக்கண நூலாகிய **பெரும் பொருள் விளக்கம்** என்ற ஏடும் மறைந்து விட்டது........ அதியமானுக்குச் சொந்தமான தகடூர் மீது, சேரமான் படை எடுத்துச் சென்ற வீர வரலாற்றைக் கூறும் நூல் **தகடூர் யாத்திரை** என்பது. ஐம்பெரும் காவியங்களில் ஒன்றானதும் தேனினும் இனியதுமான குண்டலகேசி

யும் அழிக்கப்பட்டு விட்டது. பதினோராம் நூற்றாண்டுக்கு முன்னா எழுதப்பட்டதும் ஐம் பெருங் காப்பியங்களுள் மற்றொன்றுமான வளையாபதி என்ற நூலை நினைத்தாலே போதும் கலையுணர்வு ஒருவனுக்கு வந்து விடும். வளையாபதியிலிருந்து இப்பொழுது ஒருசில பாடல்கள் பட்டுந்தான் கிடைத்துள்ளன. அந்தப்பாடல்களை ஒருமுறை பார்த்தாலே போதும், வளையாபதியின் சிறப்பை அறிந்து கொள்ள!.........தம்பி! தமிழி லிருந்த ஐம்பெரும் காவியங்களுள் இரண்டை நாம் இழந்து விட்டோம்! தமிழன்னை தன் ஒளி மிகு அணிகளில் முக்கியமான இரண்டை இழந்துவிட்டு அழுத கண்ணீரோடு நிற்கிறாள். அவளை மேலும் மேலும் துன்புறுத்த, அழித்தொழித்துக்கட்ட வஞ்சகர்கள் இன்னும் பற்பல திட்டங்கள் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று ஆத்திரத்தோடு பெரியார் பேசினார். சிறிது நேரம் மௌனமாக விருந்தார். அவர்கண்களில் நீர் வழிந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''தம்பி! இந்தச் சோகச் செய்தியை ஒரே நாளில் சொல்லமுடியாது. மற்றதை நாளைய தினம் சொல்கிறேன்'' என்று துக்கம் நிறைந்த குரலில் கூறினார்.

''ஐயா! இன்று, அழிக்கப்பட்ட ஏடுகளின் பெயர்களை மட்டும் மீதியிருப்பதைச் சொல்லிவிடுங்கள். அந்தப் பெயர்களைக் கேட்டாகிலும் திருப்தி அடைகிறேன்.........''

''கேள்! நன்றாகக் கேள்! **செயிற்றியம், தும்பிப் பாட்டு, தாள சமுத்திரம், தாளவகை யோத்து, நீலகேசி, பரிநூல், பல்காப்பியம், பல்காயம்**............தப்பி, பிறகு சொல்கிறேன் மற்றவற்றை'' என்று கூறிக்கொண்டே எழுந்து அறையை விட்டு வெளியே சென்றுவிட்டார்.

அழிக்கப்பட்ட தமிழ்க் களஞ்சியங்களின் பெயர்கள் என் காதில் விடாது முழக்கம் செய்துகொண்டிருந்தன. ''தூங்கும் தமிழா! உன் தலை சிறந்த தமிழ் ஏடுகளை எல்லாம் பறி கொடுத்து விட்டுப் பராரி ஆகியும் பதறாது, கண்ணீர் வடித்துக் கதறாது, இனியும் ஏமாறாது இருக்கத் தயாராகாது, பிணம் போல் வாழ்கிறாயே! இது தகுமா?'' என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன்.

சூடோடு சூடாக மற்ற நூல்களின் பெயர்களையும் இன்றே எப்படியாகிலும் பெரியாரிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டுமென்றெண்ணி அறையை விட்டு அவசர அவசரமாக வெளியேவந்தேன். கற்றுத் தெளிந்த கள்ளம் கபடமற்ற கிழவர் இல்லத்தில் இல்லாததைக் கண்டேன். வெளியில் வந்தேன். தள்ளாடித் தள்ளாடி தாடிக்கிழவர் நடந்து கொண்டிருந்தார்.

ஓடோடியும் அருகில் சென்றேன்.

"தம்பி! என்ன செய்தி?" என்னைப் பார்த்ததும், உணர்ச்சியற்ற குரலில் கேட்டார்.

"ஐயா! மற்ற மறைக்கப்பட்ட மாணிக்கங்களின் பெயர்களையும் இன்றே கூறிவிடுங்கள்! பிறகு தான் என் மனம் அமைதியடையும்!"

"வெறும் பெயர்களை மட்டும் நீ அறிந்து என்ன பயன்? ஒவ்வொன்றையும் பற்றி விரிவாக விளக்கமாக, தெளிவாக மற்றொரு நாள் கூறுகிறேன்."

"அன்று விளக்கமாகக் கூறுங்கள்! ஆனால் இன்று பெயர்களை மட்டும் கூறி விடுங்கள்! ஆர்வத்தால் துடிதுடிக்கும் என் உள்ளத்தின் வேண்டுகோளைத் தட்டாதீர்கள்! இரவும் பகலுமென்று பாராது, பசியையும் பகைமையையும் பொருட்படுத்தாது, நம் இனத்தில் உதித்த கவிஞர்கள், புலவர்கள் தாம தீட்டி முடித்த ஏடுகளுக்குச் சூட்டி மகிழ்ந்த பெயர்களை விரைவாகக் கூறுங்கள்! அந்தத் திருப்பெயர்களையாகிலும் அடிக்கடி உச்சரித்து உச்சரித்து நான் திருப்தியடைகிறேன்!..."

"பைத்தியமா தம்பி உனக்கு?"

"என் ஆர்வத்திற்கு எந்தப் பெயராகிலும் கொடுங்கள், கவலையில்லை! ஆனால்........"

"பெயர்களைக் கூறி விட வேண்டும், அதுதானே?"

"ஆமாம், ஐயா!"

"கேள்! உற்றுக்கேள்! உள்ளமெனும் ஏட்டில் என்றென்றைக்கும் அழியாதபடி அவ்வளவு ஆழமாக இப்பெயர்களைச் செதுக்கி வைத்துக்கொள்! கேள்!..................**பன்மணி மாலை, பன்னிருபடலம், பாவைப் பாட்டு, பாண்டியன் மரபு, பாட்டு மடை, புணர்ப்பாவை, புதையல் நூல், பெரிய பம்மம், பெருவல்லம், போக்கியம், மணியாரம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், முறுவல், மூப்பெட்டுச் செய்யுள், மூவடிமுப்பது, மோதிரப் பாட்டு, வச்சத்தொள்ளாயிரம், வஞ்சிப் பாட்டு, வாய்ப்பியம், விளக்கத்தார் கூத்து, நாடக நூல், குலோத்துங்க சோழ சரிதை, பெருவஞ்சி, வீரமாலை, அடி நூல், அவிநந்த மாலை, கடகண்டு, கணக்கியல், செயன்முறை, பதினாறுபடலம்,** இப்படி இன்னும் ஆயிரக்கணக்கான அருமையான நூல்கள் அழிக்கப்பட்டுவிட்டன. கடைக்கழகம் இருந்த கபாடபுரத்தில் மட்டும் எண்ணாயிரத்துக்கு அதிகமான தமிழ் ஏடுகள் மறைக்கப்பட்டு விட்டன! தொல்காப்பியத்திற்கு ஈடானதும் அதனைவிடச் சிறந்ததுமான அனேக நூல்களைச் சாகடித்துவிட்டார்கள்! அய்யோ! அவற்றை எல்லாம் நினைக்க நினைக்க என் வயிறு பற்றி எரிகிறது. என் தோள்கள் துடிதுடிக்கின்றன. துக்கம் என் நெஞ்சை அடைக்கிறது! தம்பி! மேலும் என் புண்பட்ட மனதிற்குத் தொல்லைதராதே!" என்று கூறிக்கொண்டே, காடு நோக்கி விரைவாக வேகமாக நடந்தார் பெரியார். அன்னாரைப் பார்த்

துக்கொண்டே அசைவற்று நான் நின்றிருந்தேன். ஒரு நாள் கேட்டதற்கே என் உள்ளம் இவ்வளவு துடிதுடித்தால், பல நாள், ஏன் அவர் வாழ்நாள் முழுதும், அவற்றைக் குறித்தே நினைந்து கொண்டிருக்கும், அவர் மனம் என்ன பாடுபடும் என்றெண்ணிக் கவலையடைந்தேன். எப்படித்தான் இந்தத் துக்கத்தை அவர் பொறுத்துக் கொண்டு இருக்கிறாரோ என்று நினைத்து ஆச்சரியமடைந்தேன்.

மறைக்கப்பட்ட மறத் தமிழ் நூல்களைக் குறித்து, நாம் செய்யவேண்டிய கடமை என்னவென்று அடிக்கடி எண்ணத் தொடங்கினேன். மனப் போராட்டத்தில் நான் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் மாதங்கள் இரண்டு தேய்ந்து மறைந்துவிட்டன!

மாலை நேரம்! வருத்தத்தை மறந்து, இன்பத்தைத் தேடிக் கொண்டிருந்தது என் உள்ளம்!

கால் சிலம்புகள் காதற்பண் பாட, பொற்சிலை என் பக்கம் வந்தாள். வாரி எடுத்து இன்பத்தை அணைக்க எழுந்து ஆடல் அழகியின் அருகே சென்றேன். விலகி நின்றாள்!

"கண்ணே உண்ண வரும் நேரத்தில் தட்டிவிடுகிறாயே! ஏன் பொற்சிலை?"

"ஏன்? அத்தான், தங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை!"

"எனக்கா தெரியவில்லை? எது தெரியவில்லை?"

"தாத்தா, தங்களைப் பார்த்து அன்றொருநாள் சிரித்தாரே, அது ஏன் என்று புரிந்ததா உமக்கு?"

"உன் தாத்தாவின் சிரிப்புக்கு அர்த்தம் வேறு இருக்கிறதா?"

"ஆமாம்! உங்களைப்போல் காரணமில்லாமல் அடிக்கடி சிரிப்பார் என் தாத்தா!—அப்படித்தானே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?"

"கொஞ்சி மகிழும் நேரத்தில் கோபமா, கண்ணே கொள்வது? இதோ....இதோ" என்று கூறிக்கொண்டே அவள் மலர்போன்ற கன்னத்தை நோகாது கிள்ளினேன்!

"அத்தான்?"

"சொல் கண்ணே!"

"தாங்கள் தந்த இன்பம் தவழ்ந்து விளையாடப் போகிறது, அத்தான்!"

"என்ன! உண்மையாகவா?"

"ஆமாம்! ஆமாம்!" என்று கூறிக்கொண்டே பொற்சிலை ஓடத் தொடங்கினாள்.

"கண்ணே! ஓடாதே! இனி உடல் அதிரக்கூடாது!"

"ஆமாம்!....அத்தான் அணைக்காதீர்.......தேகம் கசங்கக் கூடாது!"

இருவரும் கொல்லென்று சிரித்தோம்!

இன்பமெனும் மாமலையின் மீது ஏறி நின்ற நாங்கள், அந்நேரத்தில் அறியோம், துன்பமெனும் படுபாதாளம் மிக மிக அருகாமையில் இருக்கிறதென்ற பயங்கரமான உண்மையை!

(தொடரும்)

# ★ இது என்ன

நிறுத்தப்பட் டானொருவன் நீதிபதி முன்னால்,
நேற்றுத்தான் வெளிச்சென்றான் சிறைக்கூண்டைவிட்டு,
கருத்திலனு இலலை இல்லை காசினியோர் அவனைக்
கண்ணெடுத்தும் பாராது கள்வனென ஏசித்
துறந்திட்டார் பசி அவனைத் துரத்திடவே சென்றான்
சோற்றுக்கென் செய்வதென சோர்ந்திருந்தான் நிசியில்
பருத்திட்ட ஒருவர் அணி பணிபூண்டு வரவே
பார்த்திட்டான் பதைத்திட்ட தவன்கையும் காலும்

பின் சென்றான் கால்தட்டி இடறிவிழச் செய்தான்
பிடித்திட்டான் குரல்வளையை உயிர் ஆங்கே போச்சு
மின் செய்யும் காதணியும் மோதிரமும் பிறவும்
விரைந்தெடுத்துத் தன் மடியில் வைத்திட்டான் பின்னர்
அன்னவரின் சட்டைப் பை ஆராய்ந்தான் அதிலோ
ஆப்பிள் இரண்டிருந்திட்ட தவை ஆங்கே கடித்துத்
தின்றிட்டான் பின்னும் ஒரு பொட்டலத்தைக் கண்டான்
திறந்திட்டான் திகைத்தானால் பிரியாணி கண்டே

சனிக்கிழமை இன்றிதை நாம் தின்னல் அடாதென்று
சாக்கடையில் வீசி எறிந்தேக்க மொடும் சென்றான்
துணிந்த தலை நிமிராமுன் போலீசார் தள்ளிக்
கொடுபோனார் கோர்ட்டினிலே நிறுத்தப்பட்டானே

# மதமோ? ★

### நலங்கிள்ளி

அநியாயக் கொலைகாரா ஏன் கொன்றாய்? என்றார்
அனைத்தையுமே கூறிட்டான் அந்நீதிபதியோ
கனி மட்டும் தின்றிட்டாய் பிரியாணி தன்னைக்
கள்வனே ஏன் வீசி எறிந்திட்டாய் என்ன—

"ஊன் கலந்த உணவினை நாம் சனிக்கிழமை நாளில்
உண்ணுவது பெரும்பாவம் ஆகையினால்" என்றான்
ஊன் உடம்பில் உறை உயிரைப் போக்குவது நன்றோ?
உற்ற பொருள் திருடுவது பாவந்தா னில்லையோ?
ஊன் தின்றால் சனிக்கிழமை பெரும்பாவம் என்றால்
ஒரு பாவமும் இல்லையோ மற்ற நாள் உண்ணில்
ஏன் இந்த நிலை நாட்டில் சிந்தித்துப் பாராய்
எழுச்சியுறு தமிழகம் மேலெழுச்சி பெறும் கண்டாய்!

கொலைகாரர் விபசாரம் செய்திடுவோர் பிறரைக்
கொள்ளை யடித்திடுவோர்கள், அநியாயக்காரர்,
விலைவாசி தனை ஏற்றிக் கள்ள மார்க் கட்டில்
விற்றுப் பெருவாழ்வடையும் பெரிய பிரமுகர்கள்,
மலை தடையுந் தொழிலாளி மண் உழவன் இவரை
வதக்கிச் சார்பிழிந்தெடுக்கும் வட்டிமுதலாளி,
நிலையாகக் கடவுளரைக் தம்பிடுவர், மதத்தை
நிசமென்று பேசிடுவர்! இது என்ன மதமோ?

# உரைகல்

## திருவள்ளுவர்

பெரியார் ஈ. வே. ரா.

பெரியார் அவர்கள் திருவள்ளுவரைக் குறித்து ஈரோடு மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவின் நூல் வடிவமே இது. எப்பொருள் குறித்துப் பேசினும் தமது சிந்தனையிலிருந்து பல புதுமைக் கருத்துக்களை வெளியிடும் திறன் மிக்க பெரியார் அவர்கள் வள்ளுவரைக் குறித்து—குறளைக் குறித்து என்ன கூறியுள்ளார் என்பதை அறிந்து கொள்ள தமிழகமே ஆவல் கொள்ளும்.

வள்ளுவரைக் கம்பரோடும்—குறளைக் கீதையோடும் ஒப்பு நோக்கி உண்மை விளக்கந் தருவதானது எவருடைய சிந்தனையையும் கிளரும் தன்மையது. திராவிட இனத்தவரின் இழிவு துடைக்க, 'வள்ளுவரை' வான் விளக்காக வழிகாட்டியாகக் கொள்ளுவது சிறப்பாகும். விலை அணா மூன்று.

வெளியிடுவோர் :

வே. பழனிச்சாமி,
சிந்தனைப் பதிப்பகம்;
தாராபுரம் p. o.
கோவை — மாவட்டம்.

## அறப்போர்

மு. கருணாநிதி (பேச்சு)

திராவிடக் கழகத்தார் மீது அரசியலாரால் திணிக்கப்பட்டுவரும் அளவற்ற அடக்குமுறைகளின் கொடுந் தன்மையையும், அதன் விளைவாகவே 'அறப்போர்' தொடுப்பது தவிர்க்க முடியாததாயிற்று என்பதையும், இந்தப் போர், பதவிப்போர் அல்ல, ஆகஸ்டு போர் அல்ல, ஆர்ப்பாட்டப் போர் அல்ல, ஆடம்பரப் பிரியரின் அர்த்தமற்ற போரல்ல, அமைதி தழுவிய அறப்போர் என்பதையும், எனவே வெற்றி உறுதி என்பதையும் விளக்கி தோழர். கருணாநிதி நிகழ்த்திய, ஆர்வமிக்க, எழுச்சியூட்டும் சொற்பொழிவின் எழுத்து வடிவமே இந்நூல். இது இளைஞர்க்கு ஓர் விருந்து; மற்றவர்க்கோ இளமை தரும் மருந்து. விலை அணா மூன்று

கிடைக்குமிடம்: வெற்றி வெளியீடு, திருவாரூர்.

REGD. NO. M. 4


# குரு தைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜுரம்
ஜன்னி முதலிய சகலவித
வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது
௨10-வியாதிகளுக்கு
அரசன்

248

GURUCURES

22



Alvar

**டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்**

குரு மருந்து சாலை..............திருச்சிராப்பள்ளி


Edited and Published by K. Anbazhagan M.A., at 10, Vellala St Madras-7. Printed by Kalappan at Oriental Printing Work 5, Sunkurama Chetty St., Madras. 1.